Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3175)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 11 புதன்கிழமை (27.11.2013) பக்கங்கள் 20 ஓசை – 058

## யாழ். பல்கலைக்கழக சூழலில் படையினர் கடமையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தினைச் சுற்றி பெருமளவான இராணுவத்தினர் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அத்துடன், யாழ்.மாவட்டத்திலுள்ள வீதிகளில் வழமைக்கு மாறாக இராணுவத்தினர் நேற்று இரவு தொடக்கம் வீதிச்சோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.


வாகனங்களில் கொண்டு வந்து இறக்கப்படும் இராணுவத்தினர் ஒவ்வொரு வீதிகளிலும் கடுமையான சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாவீரர் தினத்தினையொட்டி ஏதாவது அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்படலாம் என்ற சந்தேகத்திலேயே இராணுவத்தினர் பல்கலைக்கழக சூழலில் கடமையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி முல்லைத்தீவு மாவட்டத்திலும் இறுதி யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களிலும் இராணுவரத்தினர் நேற்று முதல் கடும் சோதனைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

## நெடுந்தீவு பிரதேசசபைத்தலைவர் நேற்று அகாலமரணமடைந்தார்

### அஞ்சலி செலுத்துகிறது ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினரும், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவருமான தானியல் றெக்சியன் (தோழர் ரஜீவ்) நேற்று அகால மரணமடைந்துள்ளார்.

நெருக்கடி மிகுந்த காலப் பகுதியில் தீவகத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியுடன் இணைந்து தீவக மக்களின் நல்வாழ்வுக்காகவும், கட்சியின் அரசியல் வளர்ச்சிக்காகவும் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றிய தோழர் ரஜீவின் இழப்பு அவரது மனைவி, அவரின் மூன்று அன்பு பிள்ளைகளுக்குப் போலவே கட்சிக்கும் பேரிழப்பாகும்.

அவரது இழப்பால் துயரமடைந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கும், உறவுகளுக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. தோழர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலைக் கழக ஆசிரியர் சங்க தலைவர் மீது விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் அமிர்தலிங்கம் இராசகுமாரனை விசாரணைக்கு வருமாறு பயங்கரவாத தடுப்பு பிரிவினர் அழைப்பு விடுத்துள்ளனர். யாழ் பல்கலைக கழகத்தை தொடர்பு கொண்டு இந்த விசாரணை அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 2 மணிக்கு யாழ். பொலிஸ் நிலையத்திற்கு செல்லுமாறு தனக்கு யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து அறிவித்தல் விடுக்கப்பட்டதாகவும் அதன்படி தான் அங்கு சென்றதாகவும், பொலிஸார் தன்னை விசாரணைக்குட்படுத்தியதாகவும் அ.இராசகுமாரன் தெரிவித்தார்.

# வடக்கு மாகாண ஆளணி மீளாய்வு சர்ச்சை கிளப்பிய விவகாரம்

### விளக்கமளிக்கிறார் ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபைக்கான ஆளணி மீளாய்வு நடவடிக்கை தொடர்பாக இப்போது புதிய சர்ச்சை கிளம்பியுள்ளது. இவ்விடயம் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தை நேற்று முன்தினம் ஆளுநர் நடாத்தியமை குறித்தே இந்த சர்ச்சை உருவாகியது. இவ்விடயம் தொடர்பாக வடக்கு ஆளுநர் ஜீஏ. சந்திரசிறி காணொளி மூலமாக விசேட செவ்வி ஒன்றை ஊடகங்களக்கு வழங்கினார். அதன் விபரம் வருமாறு:

கேள்வி:- வடமாகாண ஆளுநரினால் நடாத்தப்பட்ட வடக்குமாகாண ஆளணி மீளாய்வுக் கூட்டமானது வடக்கு முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர் களினது ஒருங்கிசைவின்றியா அல்லது அவர்களுக்கு தெரியாமலா நடாத்தப்பட்டது?

பதில்:- முதலிலே் வட மாகாண சபையானது கடந்த செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகவே இவ் வடமாகாண சபையினை இயங்க வைப்பதற்கு பல்வேறு செயற்பாடுகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பில் தெளிவுபடுத்துவது என்பதும் , இதுவரை காலமும் இது பற்றி யாருக்குமே தெரியப்படுத்தப்படவில்லை என்பதனால் இதனை முதலில் தெளிவுபடுத்தவது எனது கடமை என்றும் மிக் அவசியமானது எனவும் கருதுகின்றேன்.

மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்படுவதற்கு 6 மாதங்களிற்கு முன்னரேயே, எவ்வாறான நிர்வாக ஒழுங்கமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதனை ஆராய்ந்து பிரதம செயலாளர், ஆளுநரின் செயலாளர், மற்றும் செயலாளர்களுடன் கலந்துரையாடி இதற்கான வேலைத்திட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தோம்.

இத்திட்டத்தினை 13 ஆவது திருத்தச்சட்டம், 42 ஆம் இலக்க

(19) ஆம் பக்கம் பார்க்க

## பிரபாகரன் புகழ்பாடினார் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்

### ஹன்சாட்டிலிருந்து உரையை நீக்க பணிப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை பெருமைப்படுத்தியும் அதீதமாக புகழ்ந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சிறிதரன் நாடாளுமன்றில் ஓர் அறிக்கையொன்றை விடுத்து நேற்று உரையாற்றினார்.

நாடாளுமன்ற உறுப்பினரான சிறிதரன் விடுதலைப் புலிகளின் இலட்சியத்தை நியாயப்படுத்தியும் மறைந்த விடுதலைப் புலிகளின் தலைவர் களையும் போராளிகளையும் மாவீரர் தினத்தில் நினைவுகூர வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தியும் பேசினார்.

இவரது உரையை அரசாங்க தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டித்தனர். பிரபாகரன் தமிழ்,சிங்கள இனத் தலைவர்கள் பலர் கொலை செய்யப்பட காரணமாக இருந்தாரென உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க பதிலடி கொடுத்தார்.

யுத்தக் குற்றம் நடந்தது என

(19) ஆம் பக்கம் பார்க்க

## தவிசாளர் மீது விசாரணை கரவெட்டியில் களேபரம்

### சபை அமர்வில் அஞ்சலி செய்ததன் எதிரொலி

(வடமராட்சி)

கரவெட்டி பிரதேசசபையில் மாவீரர்தினம் அனுஷ்டிக்கப்பட்டமை குறித்து பிரதேச சபை தவிசாளரிடம் நெல்லியடி பொலிஸார் விசாரணை மேற்கொண்ட நிலையில் குறித்த தவிசாளரின் வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோர் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத சிலர் தவிசாளரின் வீட்டின் மீது கற்களை வீசியதுடன் யன்னல் கண்ணாடி மற்றும் வான் கண்ணாடிகளையும் உடைத்துள்ளனர்.

இது தொடர்பாக தவிசாளர் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்த நிலையில் வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை ஏற்கனவே நெல்லியடி பொலிஸார் விசாரணை மேற்கொண்ட நிலையில் தவிசாளர் தான் சபை கூட்டத்திற்கு செல்லவில்லை எனவும்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நாடு கடத்தப்பட்டார் கவிஞர் ஜெயபாலன்

தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து சுற்றுலா விசா விதிமுறைகளை மீறினார் என்ற குற்றச் சாட்டின் பெயரில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் மிரிஹான தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கவிஞரும் நடிகருமான வ.ஐ.ச. ஜெயபாலன் நேற்று இரவு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் மிரிஹான தடுப்பு முகாமில் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

மேலும் தடுப்பு முகாமில் தன்னை

(19) ஆம் பக்கம் பார்க்க

## வீதிவிபத்தில் இளைஞன் பலி மேலும் மூவர் படுகாயம்



யாழ்ப்பாணம், புத்தூர் சந்தியில் நேற்றுப்பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்ற கோர விபத்தொன்றில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், பாரதி வீதி அச்சுவேலியைச் சேர்ந்த கந்தசாமி ரனோஜன் (வயது-19) என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

வடமராட்சி பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த ப. பத்மசீலன் (வயது-26) , யோ. பிறேம் (வயது-26), அச்சுவேலியைச் சேர்ந்த செ. ஜெயக்குமார் (வயது-32) ஆகிய மூவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை,

(19) ஆம் பக்கம் பார்க்க

11

நான் சீனியர்

14

உதவி

18

குவிகிறது விருது

# வீதிகளில் குப்பைப் பொதிகள்; பருத்தித்துறையில் டெங்கு அபாயம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வீதிகள் மற்றும் ஒழுங்கைகளில் குப்பைகள் அடங்கிய பொதிகள் தேங்கிக் காணப்படுவதால் நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு டெங்கு நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறைப் பிரதேச சபையினால் குப்பைகள் அகற்றப்படுகின்ற நிலையில் 2 வாரங்களுக்கு மேலாகியும் இப்பகுதியிலுள்ள குப்பைகள் அகற்றப்படாமல் இருப்பதால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குப்பைகளை பறவைகள் கிளறி அசிங்கப்படுத்துவதுடன், அவற்றை வீதியில் போட்டு விட்டு செல்வதால் குப்பைகள் வீதிகளில் பரவிக்காணப்படுவதுடன், துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பிரதேச சபையினரிடம் கேட்டால் எரிபொருள் இன்மையாலே குப்பைகளை அகற்ற முடியவில்லை எனவும், எரிபொருளை பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளபோதிலும் அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், எரிபொருள் கிடைத்தவுடன் குப்பைகள் அகற்றப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மழைகாலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் தொற்று நோய்கள் ஏற்படாது தடுக்கும் வகையில் குப்பைகளை அகற்ற பிரதேசசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (109)

# மரதன் ஓட்டப்போட்டி

(ஊர்காவற்றுறை)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் நடாத்தப்படும் மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 7.00மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபை தலைமை அலுவலக முன்றலில் ஆரம்பமாகி இடம்பெறும்.

இந்த மரதன் ஓட்டம் செருக்கன் சந்தி ஊடாகச் சென்று புளியங்கூடல் சந்தி, சரவணைச் சந்தியை அடைந்து ஊர்காவற்றுறை பிரதான சந்தி வழியாக முடிவிடத்தினை வந்தடையும்.

இப்போட்டியில் பங்கு பற்ற விரும்புவோர் பிரதேசசபை தலைமை அலுவலகம், மற்றும் ஊர்காவற்றுறை, நாரந்தனை, அனலைதீவு, எழுவைதீவு உப அலுவலகங்களிலும் பெயர்ப்பதிவினை விரைவாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதோடு வெற்றி பெறுவோருக்கான பரிசில்கள் இறுதி நாள் நிகழ்வின் போது வழங்கப்படும் என ஊர்காவற்றுறை பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர்.

# ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் கரவெட்டி பிரதேச சபையில் பதவியேற்பு

வடமராட்சி தெற்கு மேற்கு சபையின் வெற்றிடமாகக் காணப்பட்ட இடத்திற்கு புதிய உறுப்பினர் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

கரவெட்டி பிரதேசசபையில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினரான துரை பிரதீபன் கடந்த மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்காமையினால் பதவி வறிதாகிக் காணப்பட்ட வெற்றிடத்திற்கு விருப்பு வாக்கு வரிசையில் நான்காவது இடத்திலிருந்த கரவெட்டி, கரணவாய் மேற்கு, மண்டானைச் சேர்ந்த இந்திரராசா துஷிகரன் தேர்தல் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டார்.

அவர் நேற்று தனது நியமனக் கடிதத்தை வடமராட்சி தெற்கு மேற்கு சபையின் தலைவர் பொ.வியாகேசுவிடம் உத்தியோக பூர்வமாகக் கையளித்து இன்று நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பதற்கான விசேட கூட்டம் இன்று நடைபெறும் என தலைவர் தெரிவித்துள்ளார்.

# நாவலர் பெருமானின் நினைவு வைபவம்

(திருநெல்வேலி)

நல்லை நகர் நாவலர் பெருமானின் நினைவு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

திருமுறைபாராயணத்தைத் தொடர்ந்து வரவேற்புரையை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான உப பொருளாளர் சு.எழூர்நாயகம் நிகழ்த்தினார். துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் கூட்டுப்பிரார்த்தனையையடுத்து நாவலரின் பாடல்கள் இசைக்கப்பட்டன. பின்னர் தலைமையுரை இடம்பெற்றது.

ஈழத்து சைவசமய மறுமலர்ச்சியில் நாவலர் பெருமானின் பங்களிப்பு என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை விரிவுரையாளர் பொ.சந்திரசேகரம் சொற்பொழிவாற்றினார்.

துர்க்காதேவி தேவஸ்தான இணைச்செயலாளர் மு.அருளையா நன்றியுரை நல்கினார். (137)

# முன்பள்ளிக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சியும் கலைநிகழ்ச்சியும் நேற்று முன் தினம் மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் நல்லூர் பண்டார மாளிகை வளவு மாநகர முன்பள்ளியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, சிறப்பு விருந்தினராக ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் செல்வி ஜெயதம்மையா, மகளிர் அபிவிருத்தி நிலையம் யாழ்ப்பாணம், திருமதி.சறோஜா சிவச்சந்திரன் முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் க.விமலநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வுகளும் மற்றும் கண்காட்சியும் இடம்பெற்றன.



கிளி.பூநகரி மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆரம்பபிரிவு கல்விக் கண்காட்சியில் விருந்தினர் அழைத்துவரப்படுவதையும், காட்சியைப் பார்வையிவதையும் காணலாம். (112)

# வீதிப் புனரமைப்பிற்கு சிபாரிசு

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச சபையினால் 5 ஆண்டு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

புலோலி தென்மேற்கு கிராம அலுவலர் பிரிவில் கந்தமுருகேசனார் சனசமூக நிலையத்தில் நேற்று கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. இதில் முன்னுரிமை அடிப்படையில் 3 வீதிகள் புனரமைப்பிற்கு சிபார்சு செய்யப்பட்டன.

இதன்படி இக்கிராம அலுவலர் பிரிவிலுள்ள முத்துமாரியம்மன் வீதி, ஆலடி வீதி, கார்த்திகேசு வீதி ஆகிய வீதிகள் புனரமைப்புக்கு தெரிவு செய்யப்பட்டது.

அத்துடன் இக்கிராமத்திலுள்ள பெற்றோல் நிலையத்திற்கு பின்புறமாகவுள்ள கால்வாய்யை உடனடியாகத் திருத்தித்தருமாறு கிராம மக்கள் இதன்போது கோரிக்கை விடுத்தனர். (109)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1011

திகதி 25.11.2013

வெற்றி எண்கள்: 10 29 32 51 | ஆங்கில எழுத்து: U

ஜக்பொட் பரிசு ரூ. 1,51,00,660/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,51,00,660/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 50,000/= | ரூ. 5,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 261 | 1,000/= | ரூ. 2,61,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 466 | 1,000/= | ரூ. 4,66,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11598 | 60/= | ரூ. 6,95,880/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6053 | 40/= | ரூ. 2,42,120/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 152748 | 20/= | ரூ. 30,54,960/= |
| ஆங்கில எழுத்து | 22212 | 20/= | ரூ. 4,44,240/= |
| | | மொத்தம் ரூ. | 67,14,200/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 605281358-2-02 |
| களுத்துறை | 605286293-5-15 |
| கொழும்பு | 605286994-9-39 |
| கம்பஹா | 605296291-7-17 |
| மாத்தறை | 605287412-9-09 |
| நுவரெலியா | 605289450-5-05 |
| அநுராதபுரம் | 605285124-4-24 |
| மொனராகலை | 605284007-2-12 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 71,14,200/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 15,399,420/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.11.28 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333546/7

(C/3185)


# இளைஞர் கழகங்களை புனரமைக்க நடவடிக்கை

(வலிகாமம்)


இளைஞர் கழகங்களை புனரமைப்பதற்காகவும் எதிர்காலத்தில் இளைஞர் கழகங்கள் வினைத்திறனுடன் இயங்குவதற்காகவும் வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாடு செய்த பிரதேச மட்ட அதிகாரிகளுக்கு இளைஞர் கழகங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் விசேட செயலமர்வு நேற்று முன்தினம் காலை 9.00 மணி முதல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி வினோதினி ஸ்ரீமேனன், கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் பே.சுபாகர், தேசிய இளைஞர் கழக சம்மேளன உபதலைவர் எஸ்.விஜிதரன், யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் எஸ்.லக்சன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாணவர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் அவர்கள் சார்ந்த சமூகம் அதிக பயனைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இச் செயலமர்வு இடம்பெற்றுள்ளது.

பாடசாலை இளைஞர் கழகங்களின் பொறுப்பாசிரியர்கள், பிரதேச செயலக



கிராம மட்ட உத்தியோகத்தர்களான கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (114)

# வீதி புனரமைப்பு

வளலாய் சந்தியிலிருந்து பிள்ளையார் ஆலயத்திற்குச் செல்லும் வீதியானது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த வீதியானது கடந்த பல வருடங்களாக புனரமைப்பின்றி போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் குண்டும் குழியுமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கடந்த சில நாட்களாக இவ் வீதியானது கற்கள் பறிக்கப்பட்டு புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுவருகிறது. (85)

# விவசாயத்திணைக்களத்தின் பாவனையில் 30 ஏக்கர் உற்பத்திப்பண்ணைக்காணி

## என்கிறார் திணைக்கள உதவிப்பணிப்பாளர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி அரச விவசாய ஆராய்சி உற்பத்திப் பண்ணைக்காணியின் 23.72 மேட்டுக்காணியும், 06 ஏக்கர் வயல் காணியுமே தற்போது விவசாயத் திணைக்களத்தின் பாவனையிலுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்கள உதவிப்பணிப்பாளர் செல்வராசா தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமாரினால் வட்டக்கச்சி பண்ணையின் நிலைமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் வட்டக்கச்சி அரச விவசாய ஆராய்சி உற்பத்தி பண்ணையில் 300 ஏக்கர் வயல்காணியும்,110 ஏக்கர் மேட்டுக்காணியும் உண்டு இதில கடந்த காலங்களில் விவசாய ஆராய்சி உற்பத்திகள் இடம் பெற்றுவந்தன.

எனினும் தற்போது குறிப்பிட்ட ஏக்கர் காணியே பாவனையில் உள்ளது.

மேற்படி அரச விவசாய ஆராய்சி உற்பத்தி பண்ணையானது விவசாய மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒன்றாக விளங்குகிறது அந்த வகையில் பாவனையில்லாத காணிகளையும், முழுமையாக விவசாய ஆராய்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு விவசாயிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர் எனத்தெரிவித்தார். (29)

# வவுனியா வயல் நிலங்களில் இரவில் கட்டாக்காலிகள் அட்டகாசம்

வவுனியா பிரதேசங்களில் இரவு நேரத்தில் கால்நடைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கால போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில் கால்நடைகளை வளர்ப்போர் கட்டாக்காலியாக இரவுவேளைகளில் கால்நடைகளை விடுகின்றனர்.

இதனால் அவை வயல் காணிகளில் வேலிகளையும் சேதப்படுத்திக்கொண்டு உள்நுழைந்து நெற்பயிர்களை நாசம் செய்கின்றன. அண்மையில் இது விடயமாக கமக்கார அமைப்புக்களால் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

ஆனாலும் இவ்வாறான செயல்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. பயிர்களை நாசம் செய்த கட்டாக்காலிகள் பல பிடிக்கப்பட்டு அவற்றின் உரிமையாளர்கள் பொலிஸாரினால் அறிவுறுத்தப்பட்டு தண்டம் விதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இக்கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாக பல விவசாயிகள சுட்டிக்காட்டியுள்ளனர். வெளிக்குளம், மருதங்குளம், சமளங்குளம், கோயிற்குளம், பண்டாரிக்குளம், தாண்டிக்குளம், நெளுக்குளம், தாளக்குளம், மருக்காரம்பளை போன்ற வவுனியாவின் பல பகுதிகளிலும் இவ்வாறான முறையீடுகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

பட்டியாக மாடுவளர்ப்போர் இவ்வாறு தமது கால்நடைகளை அசமந்தமாக விடுவதால் விவசாயிகள் பலரும் பாதிக்கப்படுவதாக கவலை தெரிவித்துள்ளனர். உரியவர்கள் இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)

# மானிய உர விநியோகம் குறைவால் விவசாயிகள் பாதிப்பு

(வவுனியா)

வவுனியா பிரதேச விவசாயிகளுக்கு மானிய உர விநியோகம் இம்முறை குறைந்த அளவில் வழங்கப்பட்டுள்ளமையால் தாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இம்முறை தமக்கான மானியஉரம் குறைந்த அளவிலேயே வந்துள்ளதாகவும் இதனாலேயே மானிய உர் விநியோகத்தில் குறைவு ஏற்பட்டுள்ளதாக கமநல அதிகாரிகள் தெரிவிப்பதாக விவசா யிகள் பலரும் கவலை வெளியிட்டுள்ளனர். இம்முறை தாம் மேற்கொண்டுள்ள நெற் செய்கைக்கு போது மான அளவு மானிய உரம் கிடைக்காமையால் அதிக விலையில் வெளிக் கடைகளில் உரவகைகளை கொள்வனவு செய்ய வேண்டி நிலை காணப்படுவதாகவும் இதனால் தமக்கு பெரும் பணச் செலவீனமும் நேர விரயமும் ஏற் பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (இ)

# மின்சார வசதிகள் இன்மையால் மாணவர் கல்வியில் பாதிப்பு

## எழுதுமட்டுவாள் தெற்கு மக்கள் விசனம்

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாள் தெற்கு கிராமத்திற்கான மின் விநியோகம் இன்னமும் வழங்கப்படாமையால் தாம் பெரும் இன்னல்களை சந்தித்து வருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் இப்பகுதிக்கான மின் விநியோகம் வழங்கவென மின்கம்பங்கள் நாட்டப்பட்டதுடன் மின் கம்பிகளும் பொருத்தப்பட்டன.

எனினும் இம் மின்மார்க்கத்திற்கான மின் மாற்றி பொருத்துவதில் ஏற்பட்ட சில சிக்கல்கள் காரணமாக மின் விநியோகம் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. மின்சார விநியோக தாமதத்தால் இப்பகுதி மாணவர்கள் பெரிதும் பாதிக் கப்படுவதுடன், மின் சாரம் சார்ந்த எந்த முயற்சியும் மேற்கொள்ள முடியாது பல்வேறு இன்னல்களுக்கு தாம் முகம் கொடுப்பதாக தெரிவித்த இப்பகுதி மக்கள் இம் மின் விநியோகம் விரைவில் கிடைப்பதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ)



யாழ்ப்பாணம் அராலி வீதியிலுள்ள இணையும் கரங்கள் சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற மரம் நடும் நிகழ்வில் பிரதிநிதிகள் மரம் நாட்டுவதைக் காணலாம். (105)

## அதிபர்களுக்கான கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத் திற்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமை யில் இக்கூட்டம் வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# "……. உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு"




பென்சனியர்களுக்கு (ஒய்வூதியர்களுக்கு) அங்கங்கே சங்கங்கள் உண்டு.

யாழ்ப்பாணத்தில் மலேசியன் – சிங்கப்பூர்ப் பென்சனியர் மாருக்கென்று தனிக்கட்டிடமும் சங்கமும் இருந்தது.

அந்தக் கட்டிடத்தில்தான் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நடத்துகிற ஊடகவளங்கள் கற்கை நிலையம் இயங்குகிறது.

அந்த நாட்களில் பென்சனியர்மார்தான் அரசியலைப்பற்றி அலசி ஆராய்வார்கள்.

ஏனென்றால், அவர்களுக்கு வேலையில்லை. ஒய்வுகாலம்.

மற்றது பேப்பர் வாசிக்கிற பழக்கமும் நேரமும் அவர்களுக்கிருந்தது.

ஆகவே, வாசிகசாலை, சனசமூக நிலையங்கள், தேர்முட்டியடி, சந்திகள் போன்ற இடங்களில் கூடினால் அரசியலை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்தெடுத்துப் பேசுவார்கள்.

இவர்கள் பேசுகிற அரசியலுக்கு ஊருக்குள்ளும் கொஞ்சம் மதிப்பிருந்தது. படிச்ச மனிசர், நாலு இடத்துக்கும் போய்ப் பழகி நாலு விசயம் விளங்கின ஆட்கள் என ஊர்ச் சனங்கள் இவர்கள் கூறுவதைக் கேட்டார்கள்.

ஆனால், இயக்கங்கள் தலையெடுக்கத்தொடங்கிய பிறகு பென்சனியர்மாரின் அரசியல்கதைகள் படுத்திட்டுது.

அவர்களின் றூட் (வழி) வேறு. இயக்கங்களின் றூட் வேறு.

இப்பொழுது திரும்பவும் பென்சனியர் அரசியல் தலையெடுத்திருக்கிறது.

ஆனால், அது சாதாரணமாகத் தலையெடுக்கவில்லை.

அதுவே அதிகாரத்துக்கும் வந்துள்ளது.

வடமாகாண சபையிலும் பிரதேச சபைகள், நகரசபைகள் போன்றவற்றிலும் இந்த பென்சனியர் அரசியலே கோலோச்சுகிறது.

இதை அண்மையில் ஆய்வாளர் ஒருவர் 'ஒய்வூதியர்களின் தேசியம்' என்று குறிப்பிட்டு எழுதியிருந்தார்.

அந்த அளவுக்கு ஒய்வூதியர்களின் கைகளில் தேசியமும் அரசியலும் போய்ச்சேர்ந்துள்ளது.

இதுவரையிலும் அரச விசுவாசத்தோடு அதன் நிர்வாக விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்தவர்கள், மக்களை அந்த விதிமுறைகளுக்குக் கட்டுப்படுத்தி நிர்வாகம் செய்தவர்கள், இப்பொழுது விடுதலை அரசியலைப் பேச வந்துள்ளார்கள்.

இதுவரையிலும் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டுத் தங்களை அர்ப்பணித்தவர்கள் வெளியே தூக்கி வீசப்பட்டிருக்கிறார்கள். அல்லது தூக்கி வீசப்படும் நிலையில் இருக்கிறார்கள்.

(நான் இப்படிச் சொல்லும்போது உங்களுக்கு சுரேஸ் பிரேமச்சந்திரன், டக்ளஸ் தேவானந்தா, முருகேசு சந்திரகுமார், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சித்தார்த்தன் போன்றோரின் முகங்கள் நினைவுக்கு வரலாம்).

அந்த அளவுக்குப் பென்சனியர்களின் கை ஓங்கியிருக்கிறது.

ஆனால், இவர்களுக்கு அரசியல் என்பது அரிச்சுவடி. பொதுச்சேவை என்பது உத்தியோகம். மக்களை வழிநடத்துவது என்பது, அதிகாரம் பண்ணுவது.

இந்த நிலைமையில் எப்படி அமையப்போகிறது தமிழ் மக்களின் எதிர்காலம்?

தமிழ் மக்கள் தியாகங்களுக்கும் கண்ணியமான சேவைக்கும் அர்ப்பணிப்புக்கும் மதிப்புக்கொடுப்பவர்கள் என்று சொல்லப்படுவதுண்டு.

ஆனால், இது பச்சைப் பொய்.

அப்படி அவர்கள் தியாகத்துக்கும் கண்ணியமான மக்கள் சேவைக்கும் மதிப்புக் கொடுத்திருந்தால் இந்த மண்ணிலே போராடியவர்களின் கைகளில்தான் இன்று அரசியல் அதிகாரம் போய்ச் சேர்ந்திருக்கும்.

ஆனால், அப்படி நடக்கவில்லை. பதிலாக போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அரசியல் அரங்குகளில் இருந்து நீக்கம் செய்வதற்கான முயற்சிகளே நடக்கிறது.

இதைப்போல இன்னொரு பச்சைப்பொய்யும் உண்டு.

நன்றி மறக்காத பண்பாட்டைக் கொண்டவர்கள் தமிழர்கள் என்பதே அந்தப் பொய். ரு

அவர்கள் நன்றிக்குரிய காரியங்களைச் செய்தவர்களை மட்டும் மறக்கவில்லை. நன்றியைப் பற்றிச் சொன்ன வள்ளுவரையும் மறந்து விட்டார்கள்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு'

இந்த உலகத்தில் வேறு எவருடனும் நீ உன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டாம். அவ்வாறு நீ செய்தால் நீ உன்னை அவமதித்துக் கொள்வதாகப் பொருள். - அன்னை திரேசா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தேவையற்று நடந்த கைது!

தமிழுலகு நன்கறிந்த கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன் இந்தியாவிலிருந்து இங்கு வந்திருந்த வேளை, அவர் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என மாங்குளத்தில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு, கவிஞரின் வதிவிட உரிமை பெற்ற நாடான நோர்வேக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

கவிஞர் ஜெயபாலனைத் தெரிந்தவர்களுக்குத் தெரியும், அவர் ஒன்றும் ஆபத்தான நபரோ, அரசுக்கு எதிராக புரட்சி எதையும் உருவாக்கிவிடக் கூடியவரோ அல்ல. அவர் கைது செய்யப்பட்டதும், நாடு கடத்தப்பட்டதும் தேவையற்று நடந்துமுடிந்த நாடகங்கள் என்பது தமிழ்மக்கள் எல்லோருக்கும் தெரியும்.

அவர் பத்திரமாக தனது வதிவிட நாட்டுக்குச் சென்றுவிட்டார் என்பதால், அந்தப் பிரச்சினையை விட்டுவிடலாம். ஆனால், இலங்கைக்கு வெளியே உள்ள தமிழர்கள் இலங்கையில் உள்ள தமிழர்களின் தேவைகளை சரியானபடி இன்னும் அறிந்து கொள்ளாமலிருப்பதற்கு, அதுபற்றி எதுவும் பேசாமலிருப்பதற்கு கவிஞரும் ஒரு காரணம் என்ற வகையில், அவர் மீதான விமர்சனத்தைத் தமிழ்மக்கள் சார்பில் வைக்க முடியும்.

இவர் மீது மட்டுமல்ல, தமிழ் ஆளுமைகளாக வெளியுலகும் அறிந்த இவர் போன்ற கவிஞர்கள், எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், புத்திஜீவிகள் எல்லோர் மீதும் அந்த விமர்சனத்தை வைக்க முடியும். குறிப்பாக தமிழகத்திலுள்ளவர்களும், புலம்பெயர் தேசங்க்ளிலுள்ளவர்களும் நமது மக்களின் பிரச்சினைகள் தேவைகள் ஏதோவாக இருக்க, அவர்கள் நடத்துகின்ற போராட்டங்களும் கோரிக்கைகளும் ஏதோவாக இருப்பதற்கு இந்த கலைஞர்கள் புத்திஜீவிகள் எல்லோரும் காரணம் என்பதை மறுக்க முடியாது.

ஏனெனில், கணிப்புக்குரிய ஆளுமைகளாக உள்ள இவர்கள், அங்குள்ளவர்களது போராட்டங்களிலுள்ள அபத்தத்தை–இங்குள்ள யதார்த்தத்தை உணராமல் சும்மா சும்மா கொந்தளித்து வடியும் போக்கை–பிழையென்று சுட்டுவதுமில்லை, சரியானதைப் பேசி அவர்களை வழிப்படுத்துவதுமில்லை.

இலங்கை அரசை சர்வதேச விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்பதற்கப்பால், இவர்கள் வேறொன்றும் பேசுவதில்லை. இலங்கையிலுள்ள தமிழ் மக்களுடைய தேவை என்ன, தீர்வு என்ன, இந்த நாட்டில் சமவுரிமைகளுடன் வாழ என்ன செய்யப்பட வேண்டும் என்பதெல்லாம் பற்றி வாயே திறப்பதில்லை.

அதனால் இலங்கைக்கு வெளியே உள்ள தமிழர்கள், சர்வதேச விசாரணை ஒன்று நடந்துவிட்டால் இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்பதாக நம்ப வைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்றுள்ள சூழ்நிலையில் இங்கு எதுதான் தீர்வு என்பதைப் பேசாது, அரச எதிர்ப்பை மட்டுமே முழங்கிக் கொண்டிருப்பது, தமிழ் மக்களுக்குத் தனிநாட்டு நம்பிக்கையை தொடர்ந்தும் விட்டுவைத்திருப்பதாகத்தான் அர்த்தப்படும்.

இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கான தீர்வைப் பேசும்போது, அது சாத்தியமாவதற்கு சிங்கள மக்களின் அங்கீகாரத்தையும் பெறுவதற்கான அனுகுமுறைகளைப் பேசவேண்டி வரும். அதற்கான முயற்சிகள் என்ன, கருத்துவாக்கெடுப்பில் பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வதற்கான அரசியல்தீர்வு எப்படி இருக்க முடியும் என்பதையெல்லாம் வெளிப்படையாக வைக்க வேண்டும்.

அதைவிடுத்து, இப்புத்திஜீவிகள் அரச எதிர்ப்புக்கு அப்பால் ஏதும் பேசமாட்டாதவர்களாக இருப்பது, இவர்களே சொல்லிக்கொள்ளும் அந்த பிற்போக்கு அரசியல்வாதிகளுக்கு வாக்குகளையும் பதவிகளையும் பெற்றுத்தந்து கொண்டிருப்பதாகத்தான் முடிகிறது.

தமிழ் மக்களின் பிரச்சினை தீர என்னென்ன செய்யப்பட வேண்டும் என்று சாத்தியபூர்வமானதைச் சொல்லாமல், சர்வதேச விசாரணை வேண்டும் அல்லது அமெரிக்காவும் சீனாவும் அடிபட்டுக்கொள்ள வேண்டும் என்று உதார் விட்டுக்கொண்டிருக்கும் புத்திஜீவிகள் நமக்கு அமைந்துவிட்டதுதான் தமிழ்மக்களின் துயரநிமித்தம் என்று தோன்றுகிறது. - ஆசிரியர்

# நாயாற்றுப் பகுதியில் அமைக்கப்படும் புதிய உப்பள கட்டுமானத்தை நிறுத்துக

## –விடத்தல் தீவு கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்கம்–

விடத்தல் தீவு கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட "நாயாற்று" பகுதியில் வெளியூர் வாசிகள் அனுமதியின்றி உப்பளம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக விடத்தல்தீவு கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பொ.சிவேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விடத்தல் தீவு கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்கம் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. இந்தக் கடிதத்தில் விடத்தல் தீவு கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட "நாயாற்று" பகுதியில் உள்ள 50 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட உப்புத்தரவையில் சில வெளியூர் வாசிகள் கிராம அலுவலகரின் அனுமதியின்றி உப்பளம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்விடயம் எமக்கு மிகவும் கவலையையும், வேதனையையும் அளிக்கின்றது. அத்துடன் விவசாய நிலங்களும் இதில் உள்ளடக்கப்படுகின்றது. எனவே உடனடியாக குறித்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்.

விடத்தல் தீவு கிழக்கு கிராம அலுவலகர் பிரிவுக்குட்பட்ட அனைத்து அரச காணிகளையும் அடையாளம் கண்டு எமக்கு தெரியப்படுத்துவதோடு கிராம அலுவலகரின் பகுதிக்குள் நடைபெறும் எந்த நடவடிக்கையாக இருப்பினும் எமது அனுமதியையும் பெற்றிருக்க வேண்டும் என்கின்ற நடைமுறையை சம்பந்தப்பட்டவர்களுக்கு அறியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# வெளிநாடுகளுக்கு செல்லும் பணிப்பெண்களின் எண்ணிக்கை வீழ்ச்சி

## அமைச்சர் டிலான் பெரேரா

வெளிநாடுகளுக்கு பணிப் பெண்களாக செல்லும் பெண்களின் எண்ணிக்கை சரிவடைந்துள்ளதாக வெளிநாட்டு தொழில் ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி செயற்பாடுகளுக்கான அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கை 2013ஆம் ஆண்டில் 37வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. அரச விதிமுறைகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளமையின் காரணத்தால் இந்தச் சரிவு ஏற்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை பெற்று சென்ற றியாத் நகரிலிருந்து 960 இலங்கையர்களை மீள அழைத்து வருவதற்கு 29.01 மில்லியன் ரூபாவையும், ஜெதாவிலிருந்து 129 இலங்கையர்களை மீள அழைத்து வருவதற்கு 5.9 மில்லியன் ரூபாவையும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் செலவிட்டிருந்தது.

தற்போது றியாத்தில் பணியிலிருந்து தப்பித்து சென்ற 140 பணிப்பெண்கள் இலங்கைக்கு மீள வருவதற்கு தயாராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்திய கடற்படைத் தளபதியுடன் கோத்தாபய ராஜபக்ஷ சந்திப்பு

பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்சவுடன், இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் டி.கே.ஜோஷி நேற்று முன்தினம் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

காலியில் இலங்கை கடற்படை நடத்தும் இரண்டு நாள் கடல்சார் பாதுகாப்புக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில் பங்கேற்கவந்துள்ள இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜோஷி, இலங்கை பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்சவை சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது இருதரப்பு விவகாரங்கள் குறித்து பேசப்பட்டதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# விமல்வீரவன்சவின் பெயரில் நிதிமோசடி செய்த இருவர் கைது

வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்சவின் இணைப்பாளர் என்றும் கனடாவில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி வாக்குறுதி அளித்து நிதி மோசடியில் ஈடுபட்ட இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த என்டன் கஜேந்திரன் என்ற நபரிடம் 6 இலட்சம் ரூபா பணத்தை பெற்றுக்கொள்ள முயன்ற வேளையில் கொழும்பு - வாழைத்தோட்டம் பொலிஸாரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அம்பலாங்கொட மற்றும் அகுருவெல பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட குறித்த நபர்களிடம் பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமைச்சர்களின் பெயர்களைக் கூறி நிதி மோசடியில் ஈடுபடும் கும்பல் குறித்து பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# பயணிகள் காசோலை நிறுத்தம் இலங்கை வங்கிகள் சங்கம் அறிவிப்பு

பயணிகள் காசோலை வழங்கும் நடவடிக்கை உடனுக்கு அமுலுக்குவரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளது என இலங்கை வங்கிகள் சங்கம் தெரிவித்துள்ளது.மத்திய வங்கியில் நடைபெற்ற கூட்டத்தில் பயணிகள் காசோலைகளை வழங்குவதை நிறுத்திவிட சகல வங்கிகளும் உடன்பட்டதாக இலங்கை வங்கிகள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்

தற்போது பயணிகள் காசோலைகளை பயன்படுத்துவதற்கான விருப்பம் வெகுவாக குறைந்துள்ளது. அநேகமான பயணிகள் கடன் அட்டைகள் அல்லது செலவு அட்டைகளை அல்லது பணத்தை எடுத்து செல்லவே விரும்புகின்றனர் எனவும் அவர் கூறினார்.

இந்தத் தீர்மானம் பற்றி பொதுமக்களுக்கு அறிவிக்கும் பொறுப்பை மத்திய வங்கி ஏற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# முல்லைத்தீவில் 11 மாதங்களில் 55 பேருக்கு டெங்கு நோய்

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ் ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் 55 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால் "மாகாண டெங்கு ஒழிப்பு தினம்" வரும் 29 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் 5 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

# ஜெனிவாவில்

## இலங்கை தப்பிப்பிழைக்குமா?

**இலங்கை அரசைக் கண்டிக்க வேண்டும் என்று வெளிநாடுகளுக்கு ஒரு முகத்தைக் காட்டிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி மகிந்தவுக்குத் தங்களது அனுசரணையான இன்னொரு முகத்தைக் காட்டிக் கொள்ள அந்த வெளிநாட்டு நெருக்குதல்களைப் பயன்படுத்திக் கொள்கிறது. காணாமற்போனவர்கள் சங்கத்திடமிருந்து கமரூனை விலக்கி அழைத்துச்சென்ற இந்த "மானுடனும் கூட ஓடிக்கொண்டு வேட்டைக்காரனுடனும் சேர்ந்து துரத்துகிற" கூட்டமைப்பினரின் அணுகுமுறை, மகிந்தவை இம்முறையும் காப்பாற்றிவிடும் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக இருக்கிறது.**



**வே.அர்ச்சுணன்**

எதிர்வரும் மார்ச் மாதம் மனித உரிமைகள் தொடர்பான விவாதம் ஜெனிவா மாநாட்டில் எதிரொலிக்குமென பரவலாக எதிர்வு கூறப்பட்டு வருகிறது. குறிப்பாக மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக இம்மாநாட்டை பயன்படுத்தப்போவதாக பகிரங்கமாகவே அறைகூவல் விடுத்து வருகின்றன. இந்த நிலையில் இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள வந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கையின் பல்வேறு இடங்களுக்கும் விஜயம் செய்ததுடன் இலங்கை நிலைவரம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தும் பார்த்துள்ளார்.

பிரித்தானியப் பிரதமரின் வருகை மற்றும் அவருடைய நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கையில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக் கப்படுகின்ற போதிலும் இலங்கையைக் காப்பாற்றும் முயற்சியில் அல்லது இலங்கைக்கு தோள் கொடுக் கும் முயற்சியில் கூட்டமைப்பின் மூன்று முக்கிய புள்ளிகள் கூட்டாக செயற்பட்டதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், முதலமைச்சர் விக்னேஸ்வரன் போன்றோர் பிரித்தானியப் பிரதமரை யாழ் நூலகத்தில் சந்தித்து இலங்கைக்கு ஆதரவாக பிரித்தானியா எவ்வாறு நடந்து கொள்ளலாம் என்பது தொடர்பிலும், பிரித்தானியா கூட்டமைப்பிற்கு எந்த வகையில் நிதியுதவிகளை மறைமுகமாக வழங்கலாம் என்பது தொடர்பிலும் ஆராய்ந்து உள்ளனர். ஆனால் பிரித்தானியப் பிரதமர் இவர்களின் அரசாங்கத்திற்கு சார்பான கருத்தைக் கேட்டு வியப்படைந்ததுடன் நேரடியாக நலன்புரி முகாம்களுக்குச் சென்று மக்களுடன் கருத்துக் களை பரிமாறிக் கொண்டதன் மூலம் உண்மை நிலைவரத்தை ஓரளவிற்கு புரிந்து கொண்டார்.

இதே வேளை யாழ். பொது நூலக வாசலில் திரண்டிருந்த மக்களை டேவிற் கமரூன் சந்திக்கக்கூடாது என்பதில் கூட்டமைப்பின் இந்த மூன்று முக்கிய புள்ளளிகளும் உறுதியாக இருந்திருக்கின்றனர். இதன்மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு தங்களது விசுவாசத்தின் அடையாளத்தை மீண்டும் ஒரு தடவை வெளிக்காட்டி இருக்கின்றார்கள்.



இவ்வாறு இவர்களுடைய நகர்வு ஒரு புறம் இருக்க மறுபுறத்தில் உதயன் அலுவலகத்திற்கு டேவிற் கமரூனை அழைத்த சரவணபவன் எம்.பி அங்கே பிரதமரிடம் தனது வியாபாரத்தை நடத்த முற்பட்டிருக்கிறார். உண்மையில் மக்களினுடைய பாதிப்புகள் யுத்தத்தின் பின்னர் இடம்பெறவேண்டிய அபிவிருத்திகள் மனித உரிமை விடயங்கள் உட்பட பல பொதுமக்கள் சார்ந்த விடயங்கள் பல்வற்றை கதைப்பதற்கு சந்தர்ப்பம் இருந்த போதிலும் இவை அனைத்தையும் கைவிட்டு சுயநலனுடன் இவர்கள் செயற்பட்டமையானது இவர்களுக்கு நம்பி வாக்களித்த மக்களிற்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இவை ஒருபுறம் இருக்க, டேவிற் கமரூன் தனது நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக தனது வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருக்கின்றார். அதாவது இலங்கையில் இருந்தவாறே இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்த கமரூன் மார்ச் மாதம் வரை இலங்கைக்கு காலக்கெடுவும் விதித்திருக்கிறார். மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை முன்னேற்றம் காணவேண்டும், உள்ளக விசாரனை ஒன்றை நடத்தவேண்டும், தவறினால் சர்வதேச விசாரணையை இலங்கை எதிர்கொள்ளவேண்டி வரும் என்ற எச்சரிக்கையை வெளிப்படையாகவே பிரித்தானியப் பிரதமர் விடுத்துள்ளார்.

இந்த எச்சரிக்கைக்கு இந்தியா, சீனா உட்பட பல்வேறு நாடுகளும் தமது ஆதரவை வெளிப்படுத்தி உள்ளனர். குறிப்பாக இந்திய அரசாங்கத்தின் சார்பில் இந்தியாவின் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் சிங்கப்பூரில் இடம்பெற்ற இரண்டாவது தெற்கு ஆசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இலங்கை வடக்கில் யுத்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுடன் சம்பந்தப்பட்டவர்களை இலங்கை அரசு சந்திக்க வேண்டும், அத்துடன் மனித உரிமைகள் மீறப்பட்டதன் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டிய பொறுப்பும், கடமையும் இலங்கை அரசுக்கு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளதுடன் விடுதலைப் புலிகளிற்கு எதிரான போரின்போது ஏற்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை குறித்து முழுமையான விசாரணைகள் வேண்டுமென்று வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் பெரும் பாதிப்புக்குள்ளான நிலையில் அந்நாட்டில் முதலீட்டுக்கு ஏன் அனுமதிக்க வேண்டும் என்று இம்மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதி ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சிதம்பரம் இது ஒரு மனித உரிமை மீறல் சம்பந்தப்பட்ட விவகாரம் இலங்கை அரசுக்கு கொடுக்கப்படும் நெருக்கடிக்கு அந்நாடு பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடையக்கூடாது என்பது அர்த்தமல்ல. யாருமே சேவைக்காக முதலீடு செய்வதில்லை இலாபம் பெறும் அளவிற்கு வாய்ப்பு இருந்தால் மட்டுமே வெளிநாட்டினர் ஒரு நாட்டில் முதலீடு செய்வர். போர்க்குற்றங்களைக் காரணம் காட்டி வெளிநாட்டு முதலீட்டை தடுப்பது சரியானது அல்ல ஆனால் இலங்கை மனித உரிமை மீறல் தொடர்பில் விசாரணை நடத்தியே ஆகவேண்டும் என சிதம்பரம் வலியுறுத்தி இருந்தார்.

இவ்வாறு சீனாவும், முதல் தடவையாக மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் இலங்கை முயற்சிகளை எடுக்கவேண்டும் என்பதுடன் இலங்கைக்கு ஆக்கபூர்வமான உதவிகைள ஏனைய நாடுகள் வழங்கவேண்டுமெனவும் சீனத் தலைநகரான பீஜிங்கில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சீன விவகார அமைச்சின் பேச்சாளர் கயின்கங் வலியுறுத்தி உள்ளார். இவ்வாறு பல நாடுகளும் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருவதுடன் மனித உரிமைகள் விவகாரத்தில் கடுமையாகவும், தமது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

உள்நாட்டில் இலங்கைக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பகுதியினர் கருத்துக்களை வெளியிட்டு வருகின்ற போதிலும் கூட்டமைப்பின் உயர்மட்டம் எனக் கருதப்படுகின்ற சிலர் அரசாங்கத்திற்கு சார்பாகவே இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் எதிர்வரும் மார்ச்மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைக் கூட்டத்தொடர் கடுமையானதாகவே இருக்குமென எதிர்வுகூறப்பட்டு வருகிறது. ஐ.நா.மனித உரிமைகள் பேரவைக்கு பிரித்தானியா மீண்டும் தெரிவுசெய்யப்பட்ட நிலையில் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான நகர்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக பிரித்தானியப் பிரதமர் டேவிற் கமரூன் எச்சரிக்கை விடுத்துள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை முன் எப்போதும் எதிர்கொண்டிராத நெருக்கடியை தற்போது எதிர்கொண்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

47உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் 14 உறுப்பு நாடுகளை தெரிவுசெய்ய கடந்த 11ஆம் திகதி நடந்த தேர்தலில் பிரித்தானியாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அல்ஜீரியா, சீனா, கியூபா, வியட்நாம், ரஷ்யா, சவுதி அரேபியா, மசிடோனியா, மாலைதீவு, மெக்சிகோ, மொராக்கோ, பிரான்ஸ், நமீபியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நாடுகள் வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் வரும் மூன்று ஆண்டுகளுக்கு பேரவையில் அங்கம் வகிக்கத் தகுதி பெற்றுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஒரு உறுப்பு நாடான, இந்தியா கூட, இலங்கைக்கு எதிரான வகையில் செயற்படும் என்று அந்த இராஜதந்திர வட்டாரங்கள் கூறியுள்ளன. கடந்த ஆண்டு மார்ச்மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்திற்கு இந்தியாவும் கூட ஆதரவு வழங்கி இருந்தது. குறிப்பாக அமெரிக்கப் பிரித்தானிய இந்தியக் கூட்டணி இராஜதந்திர ரீதியில் இலங்கைக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்த தயாராகி வருகிறது எனலாம்.

இந்த நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறவுள்ள மனித உரிமை தொடர்பான கூட்டத்தொடரை இலங்கை எவ்வாறு சமாளிக்கப்போகிறது என்பதே இன்றைய பரவலான கேள்வியாகும். இலங்கைக்கு மறைமுகமாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முக்கிய புள்ளிகள் சிலர் முண்டு கொடுத்தாலும் இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் பொறியிலிருந்து இலங்கை எவ்வாறு தப்பிப்பிழைக்கப் போகிறது என்பதே பிரதான கேள்வியாகும்.

இலங்கை அரசைக் கண்டிக்க வேண்டும் என்று வெளிநாடுகளுக்கு ஒரு முகத்தைக் காட்டிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி மகிந்தவுக்குத் தங்களது அனுசரணையான இன்னொரு முகத்தைக் காட்டிக் கொள்ள அந்த வெளிநாட்டு நெருக்குதல்களைப் பயன்படுத்திக் கொள்கிறது. காணாமற்போனவர்கள் சங்கத்திடமிருந்து கமரூனை விலக்கி அழைத்துச்சென்ற இந்த "மானுடனும் கூட ஓடிக்கொண்டு வேட்டைக்காரனுடனும் சேர்ந்து துரத்துகிற" கூட்டமைப்பினரின் அணுகுமுறை, மகிந்தவை இம்முறையும் காப்பாற்றிவிடும் என்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக இருக்கிறது.





கொழும்பு பொது நூலக வளவில் அமைக்கப்பட்ட வியட்னாமின் தேசியத் தலைவர் ஹோ சி மிங்கின் உருவச் சிலையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் திறந்துவைத்து, அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியை பார்வையிடுவதைக் காணலாம்.

# பிரச்சினைக்கு தீர்வுகாண தெரிவுக்குழுவே சிறந்தவழி



(கொழும்பு)

சில கட்சிகள் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் சில கட்சிகள் பங்கேற்காது நாடாளுமன்ற பாரம்பரியங்களை உடைதது்ள்ளன என்று குற்றம்சாட்டியுள்ளார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்ட மூன்றாம் நாள் குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது, அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் சில கட்சிகள் பங்கேற்காது உள்ளன. இதன் மூலம், அவை நாடாளுமன்ற பாரம்பரியங்களை உடைத்துள்ளன.

அரசாங்கத்தின் பங்காளர்களாக உள்ள கட்சிகளும் இதிலிருந்து விலகியுள்ளன. இந்த விவகாரத்திற்கு தீர்வு காணப்பட வேண்டும். அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக செயற்பட்டு வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்தும் அரசாங்கத்துடன் இணைந்தும் தேர்தல்களில் போட்டியிட்டது. தமிழ் தேசிய கூட்டமைப்பு வடக்கில் ஆட்சியமைத்துள்ளது.

இணக்கப்பாட்டுடன் செயற்பட்டு 50 இற்கு 50 அணுகுமுறை முன்வைக்கப்பட வேண்டும்.

அனைவரும் இணைந்து செயற்பட்டு பயனுறுதியான அபிவிருத்தியை ஏற்படுத்த இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டும் என்றார்.

# யானைகளுக்கு பாலூட்ட 250 ரூபா கட்டணம்



(கொழும்பு)

பின்னவலை யானைகள் சரணாலயத்தை பார்வையிடுவதற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளுக்கு, சில புதிய வாய்ப்புக்களை வழங்குவதற்கு சரணாலய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதன்பிரகாரம், யானைக் குட்டிகளுக்கு பாலூட்டுதல், பழங்களை வழங்குதல் மற்றும் அவற்றை நீராட்டுவதற்கான வாய்ப்புக்கள் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

இதற்கான நுழைவுச்சீட்டொன்றையும் கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

யானைகளுக்கு பாலூட்டுவதற்கு 250 ரூபாவும், பழங்களை வழங்குவதற்காக 200 ரூபாவும், நீராட்டுவதற்கு [illegible]00 ரூபாவும் கட்டணமாக அறவிடப்படவுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உறுதியளிக்கப்பட்ட நிவாரணம் வரவு செலவுத் திட்டத்தில் இல்லை



(கொழும்பு)

உறுதியளிக்கப்பட்ட எந்த வித நிவாரணங்களையும் அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் வழங்கவில்லை என ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச சேவையாளர் தமது வழமையான மேலதிக கொடுப்பனவுகளையே பெறுவதாக, அடிப்படை வேதனத்தில் எந்த வித தாக்கமும் இல்லை.

பொது சேவையாளர்கள் தமக்கு 10 ஆயிரம் ரூபா வேதனவுயர்வை கோருகின்ற போதும், பயனற்ற மேலதிக கொடுப்பனவே இந்த முறை வரவு செலவு திட்டத்தில் வழங்கப்பட்டிருக்கின்றது.

தனியார் துறையினரின் வேதனவுயர்வு தொடர்பாக பரிந்துரைக்கப்பட்ட போதும், அது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தாது.

ஏற்றுமதி பணியாளர்கள், பெருந்தோட்ட தொழிலாளர்கள் ஆகியோருக்கு வரவு செலவு திட்டத்தில் நேரடியான எந்தவித அனுகூலங்களும் வழங்கப்படவில்லை.

இதுதவிர, பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் அரசாங்கத்தின் இந்த முறை வரவு செலவு திட்டத்தில் மறக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே உறுதியளிக்கப்பட்ட எந்தவித நிவாரணங்களையும் அரசாங்கம் பொது மக்களுக்கு வழங்கவில்லை என்றார்.

வரவு செலவுத் திட்டத்திற்கு எதிரான ஜே.வி.பி.யின் போராட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொது, தனியார் மற்றும் பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் பங்கேற்றதுடன், [illegible]வு செலவு திட்டம் தொடர்பா[illegible] 21 பரிந்துரைகள், தொழிற்சங்க ஒன்றியத்தின் இணைப்புக் காரியாலயத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.

## ஐ.தே.க. உறுப்பினர்கள் இருவருக்கு கொலை அச்சுறுத்தல்

ஐக்கிய தேசிய கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் இருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சபையில் தெரிவிக்கப்பட்டது. மாத்தளை மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களான சஞ்சீவ கவிரதன மற்றும் ரோஹண பண்டார ஆகிய இருவருக்குமே இந்தக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் தமக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாண சபை தவிசாளர் மகிந்த அபேகோனிடம் குறித்த மாகாண சபை உறுப்பினர்கள் இருவரும் இந்த கோரிக்கையினை முன்வைத்தனர்.

மத்திய மாகாண சபையின் 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவினால் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பின்னரே ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் இருவரும் தமக்கு கொலை மிரட்டல் விடுக்கப்படுவதாக சபையில் தெரிவித்தனர்.

# சஜித் ஜனாதிபதி வேட்பாளர்

## மக்கள் மதில் இயக்கம்



(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாசவை தாம் பரிந்துரைப்பதாக மக்கள் மதில் இயக்கம் தெரிவித்துள்ளது.

அந்த இயக்கத்தின் இணைப்பாளரும் மாகாண சபை உறுப்பினருமான ஸ்ரீலால் லக்திலக்க நேற்றுமுன்தினம் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

இலங்கையில் மக்களுக்கு நம்பிக்கையான எதிர்க்கட்சியின் தலைமைத்துவம் இல்லை.

எனவே எங்களுக்கு எந்தவித விட்டுக்கொடுப்பும் இல்லை. அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை நிறுத்துவதற்கே நாங்கள் முயற்சிக்கின்றோம். அதற்கான அறை கூவலாகவே இந்தக் கூட்டத்தை நடத்துகின்றோம். யார் என்ன கூறினாலும் அதனை நாங்கள் நிறைவேற்றுவோம்.

# உள்ளூராட்சிமன்ற தேர்தலில் விருப்பு வாக்குமுறையில் மாற்றம்

## தேர்தல் ஆணையாளர் யோசனை



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் விருப்பு வாக்கு முறைமையில் மாற்றம் செய்ய தேர்தல் ஆணையாளர் யோசனை முன்வைத்துள்ளார்.

வேட்பாளர்களுக்கு ஒரு விருப்பு வாக்கை மட்டும் அளிக்கும் வகையில் தேர்தல் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டுமென தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அரசியல் கட்சிகளின் யோசனை கோரப்பட்டுள்ளது. தற்போதைய சட்டத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஒரு வேட்பாளருக்கு மூன்று விருப்பு வாக்குகளை அளிக்க முடியும்.

உள்ளூராட்சி மன்றந் தேர்தல்களின் போது வாக்குச் சாவடிகளில் அல்லது தேர்தல் தொகுதி அடிப்படையில் வாக்கு எண்ணும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். விருப்பு வாக்கு எண்ணுதல் தொடர்பில் மக்கள் மத்தியில் ஐயம் நிலவி வருகின்றது.

வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் தேர்தல் வாக்கு எண்ணுதல் தொடர்பில் நம்பிக்கையை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பில் அதிகளவில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

கொழும்பில் அதிகளவில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆண்டு வரையிலான காலப பகுதியில் அதிகளவில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம் பெறறுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்க எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சர் திஸ்ஸ கரலியத்த இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

அநேகமான குற்றச் செயல்களில் அரசியல்வாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாக ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக அமைச்சர் கரலியத்த பதிலளித்துள்ளார்.

இதேவேளை, 2009 முதல் 2012 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் 18,777 சிறுவர் துஷ்பிரயோகங்கள், துர்நடத்தைகள் இடம்பெற்றிருப்பதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

# 10,261 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் தேவை

## கிளிநொச்சி அரச அதிபர் தகவல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னமும் 10,261 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.


இறுதிக்கட்ட யுத்தத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரையில் 40,594 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளன.

மீள்குடியேறியவர்களில் 33 ஆயிரத்து 79 குடும்பங்களுக்கு வீடுகள் தேவையாகவுள்ளன. இவர்களில் 22,818 குடும்பங்களுக்கு அரச மற்றும் அரசசார்பற்ற, இந்திய அரசாங்கத்தின் நிதியுதவிகள் மூலம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், அதிகளவான கண்ணிவெடிகள் காணப்படுகின்ற முகமாலை மற்றும் கிளாலிப் பகுதிகளில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றன.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதும் அவ்விடங்களில் 524 குடும்பங்கள் மீள்குடியேற்றப்படவுள்ளதாகவும் அவர்மேலும் தெரிவித்தார்.

# இரு அமைச்சுக்களுக்கு செயலாளர்கள் நியமனம்



வடமாகாணசபையின் இரண்டு அமைச்சுக்களுக்கு புதிய செயலாளர்கள் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் நியமிக்கப்பட்டுள்ளனர். வடமாகாண நிதி திட்டமிடல், சட்டமும் ஒழுங்கும், காணி, வீதி அபிவிருத்தி, மின்சக்தி, வீடமைப்பு, நிர்மாணம், கூட்டுறவு அபிவிருத்தி, சமூகசேவைகள் மற்றும் புனர்வாழ்வளித்தல், தொழில்துறை, தொழில் முனைவோர் மேம்பாடு, சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், உணவு வழங்கலும் விநியோகமும் அமைச்சின் செயலாளராக எஸ்.திருவாகரன் நியமனம் பெற்றுள்ளார்.

வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கைத்தொழில், வர்த்தக வாணிப முயற்சி, கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக ஆர்.வரதீஸ்வரன் நியமனம் பெற்றுள்ளார். இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் வைத்து வழங்கினார்.

# மழலைகளின் கலைவிழா

(சாவகச்சேரி)

மட்டுவில் - சரசாலை குடும்ப முன்பள்ளி கலைவிழா நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு மட்டுவில், சரசாலை குடும்ப முன்பள்ளித் தலைவி செல்வி.சுகந்தினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சந்திர மௌலீச வித்தியாலய அதிபர் ற.ஜெயக்குமார் கலந்து கொள்ளவுள்ளதோடு சிறப்பு விருந்தினராக தென்மராட்சி முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜாவும் மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் விக்னேஸ்வரநாதனும் கலந்து கொள்கின்றனர். (இ)

# தலைக்கவசங்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் ஊழியர்களினதும், வருகை தரும் பொது மக்களினதும் தலைக்கவசங்கள் திருட்டுப் போகும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஊழியர்களுக்கான வாகனத் தரிப்பிடம் தனியானதாகவும், பொது மக்களுக்கான வாகனத் தரிப்பிடம் தனியாகவும் கண்காணிப்பாளர் ஒருவரைக் கொண்டும் பாதுகாப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் பாதுகாப்பு ஊழியர்களும் கடமையில் ஈடுபட்டு வரும் நிலையில் மோட்டார் சைக்கிளில் வைக்கப்படும் தலைக்கவசங்கள் அடிக்கடி களவு போவதால் பலரும் பாதிக்கப்படுகிறார்கள்.

செயலக வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமராக்களை விஸ்தரித்து திருட்டுக்களைக் கண்காணிக்க நடவடிக்கை எடுத்தால் திருட்டை தடுக்க முடியும் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (120)

# அடைவு மதிப்பீடு தேசிய செயற்றிட்டம்

இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும் 2013இல் தரம் 4இல் கல்வி பயிலும் மாணவர்களின் அடைவு மதிப்பீடு தொடர்பான தேசிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக கல்வியல் பீட தேசிய கல்வி ஆராய்ச்சி மதிப்பீட்டு நிலையத்தினால் இச்செயற்றிட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 2, 3, 4ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (66)

# மாணவர் கௌரவிப்பு


தென்மராட்சி கல்வி வலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தேசிய சேமிப்பு வங்கியில் உறப்பன் சிறுவர் சேமிப்பு கணக்கினைக் கொண்டுள்ள மாணவர்கள் இன்று கௌரவிக்கப்படுகின்றனர். சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு இக் கௌரவிப்பு நிகழ்வு இடம் பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் வி.அருளானந்தமும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் கலந்து கொண்டு மாணவர்களை கௌரவிக்கவுள்ளனர். (இ)



# கேலியால் மன அழுத்தம்

## ஆஷஸிலிருந்து ட்ரொட் விலகல்



(பிறிஸ்பேன்)

டேவிட் வோர்னர் செய்த விமர்சனத்தால் மனரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தஇங்கிலாந்தின் ஜொனாதன் ட்ரொட், ஆஷஸ் தொடரின் எஞ்சிய போட்டிகளில் இருந்து விலகியுள்ளார்.

ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்டில் இங்கிலாந்து மோசமான தோல்வியைச் சந்தித்தது. முதல் டெஸ்டின்போது, இங்கிலாந்து வீரர் ட்ரொட் ஆட்டமிழந்த விதத்தைப் பார்த்து வோர்னர் விமர்சித்திருந்தார்.

இதனால் மன ரீதியாக பாதிக்கப்பட்டிருந்த ட்ரொட், திடீரென ஆஷஸ் தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

என்னால் 100 சதவீதம் ஆட்டத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. கடந்த காலத்தில் செயற்பட்டது போல இப்போது என்னால் இயங்க முடியவில்லை. எனவே, இந்தத் தொடரில் இருந்து விலகுகிறேன் என்று ட்ரொட் அறிக்கை விடுத்தார். இதை இங்கிலாந்து கிரிக்கெட் சபையும் உறுதிப்படுத்தியது.

மன அழுத்த பாதிப்பு காரணமாக ஆஷஸ் தொடரில் இருந்து ட்ரொட் விலகி, இங்கிலாந்து திரும்பி உள்ளார். மீண்டும் அவர் கிரிக்கெட் ஆடுவது குறித்து சரியான நேரத்தில் முடிவு செய்யப்படும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, வோர்னரின் கருத்துக்கு இங்கிலாந்து கப்டன் அலெஸ்டர் குக் கண்டனம் தெரிவித்திருந்த நிலையில், பயிற்சியாளர் அன்டி பிளவரும் கண்டனம் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், வீரர்கள் எதிரணியினரைப் பற்றி ஊட கங்களில் கருத்து தெரிவிப்பது அவமரியாதைக்குரியது. வோர்னர் செய்தது முற்றிலும் தவறு எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நீர்ச்சறுக்கு வீராங்கனை பரிதாப மரணம்

(சிட்னி)

அவுஸ்ரேலியாவின் நீர்ச்சறுக்கு வீராங்கனை சாரா டீலோ விபத்தில் சிக்கி மரணமடைந்துள்ளார்.

கடந்த செப்டம்பரில் ஸ்பெயின் நாட்டில் நடந்த பார்முலா 2 வகையைச் சேர்ந்த உலக நீர்ச்சறுக்கு விளையாட்டில் சம்பியன்ஷிப் பட்டம் பெற்றவர் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சாரா டீலோ என்பவர். வெலிங்டன் பகுதியைச் சேர்ந்த இவர் இரண்டு முறை நீர்ச்சறுக்கு விளையாட்டில் உலக சம்பியன் பட்டம் பெற்ற டனியா டீலோவின் மகளாவார்.


20ஆவது நிரம்பிய சாரா கடந்த ஞாயிறன்று சிட்னியில் நடைபெற்ற ஒரு பாலத்திலிருந்து மற்றொரு பாலம் வரை செல்லும் கிளாசிக் நீர்ச்சறுக்குப் போட்டியில் பங்கேற்றார். போட்டி தொடங்கிய சிறிது நேரத்திலேயே இவர் அணிந்திருந்த துடுப்புகள் போன்றபகுதி கழன்றுவிட சாரா விபத்துக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

முதுகுத் தண்டிலும், தலையிலும் பலத்த காயமடைந்த அவர் சிகிச்சை பலனளிக்காமல் அன்று இரவே மரணத்தைத் தழுவினார். அவுஸ்ரேலியாவின் நீர்ச்சறுக்கு சங்கம் அவரைத் திறமையான இளம் விளையாட்டு வீரர்களில் ஒருவர் என்று வர்ணித்துள்ளது. அவரது எதிர்பாராத மரணத்திற்கு வருத்தத்தைத் தெரிவித்துள்ள இந்தச் சங்கம் அவரது குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது.



பொதுவாக 112 கி.மீ. தூரமுடைய இந்தக் குறிப்பிட்ட விளையாட்டில் ஒருவர் மணிக்கு 130 கி.மீ வேகம் வரை போகமுடியும் என்று சக வீரர்கள் தெரிவித்தனர்.

சாரா அணிந்திருந்த துடுப்புகள் விலகியது குறித்து நியூ சௌத்வேல்ஸ் மாகாண காவல்துறையினர் விசாரணை நடத்தி வருவதாக உள்ளூர் ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.



# கிளார்க்கிற்கு அபராதம்

(பிறிஸ்பேன்)

அவுஸ்ரேலிய அணிக் கப்டன் கிளார்க்கிற்கு சர்வதேச கிரிக்கெட் சபையினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. பிறிஸ்பேனில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கெதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் அவுஸ்ரேலிய அணி இனிங்ஸ் மற்றும் 381 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் 2ஆவது இனிங்ஸில் இங்கிலாந்து அணியின் கடைசி விக்கெட்டாக களம் இறங்கிய ஜேம்ஸ் அண்டர்சனை, அவுஸ்ரேலிய கப்டன் மைக்கல் கிளார்க் கிண்டல் செய்தார். ஜோன்சனின் பந்து வீச்சில் கையை உடைத்துக்கொள்ளத் தயாராய் இருக்கிறாயா? என்று கேலி செய்ததில் ஏற்பட்ட வாக்குவாதத்தை நடுவர்கள் சமரசம் செய்தனர். இந்த சம்பவம் ஸ்டம்பில் உள்ள மைக்கில் பதிவாகி இருந்தது. இது குறித்து விசாரித்த சர்வதேச கிரிக்கெட் சபை, மைக்கல் கிளார்க்குக்கு போட்டி கட்டணத்தில் 20 சதவீதத்தை அபராதமாக விதித்தது.

# தோல்வியின் சிறையிலிருந்து தப்பியது ஆஸி.

(லண்டன்)

பிரிஸ்பேன் டெஸ்டில் அவுஸ்ரேலியாவை வெற்றிபெறச் செய்ததன் மூலம் இங்கிலாந்து அணி ஆஸியை தோல்வியின் சிறையிலிருந்து தப்பிக்கவிட்டுள்ளது என கிரிக்கெட் வர்ணனையாளரும், இங்கிலாந்தின் முன்னாள் வீரருமான பொய்கொட் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதைவிட என்னவேண்டும்? இதனை இங்கிலாந்தின் பிடியலிருந்து அவர்களை தப்பவிட்டது. இதனால் 300 ஓட்டங்களை அவுஸ்ரேலிய அணி பெற்றுக் கொண்டதுடன் இங்கிலாந்தின் வெற்றிவாய்ப்பும் கைநழுவி போய்விட்டது. ஹடின் 2 இனிங்ஸ்களிலும் அரை சதம் எடுத்தது நல்ல சகுனம் அல்ல. அவருக்கு இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் ஷொட் பிட்சாக வீசினர். ஒரு பந்தையாவது டிரைவ் ஆடுமாறு வீசினார்கள் என்பதாக எனக்கு நினைவில் இல்லை.

ஜோன்சனின் கால்களில் பந்தைக் கொண்டு போட்டால் அவர் என்ன வேடிக்கை பார்ப்பாரா? கிரேம் ஸ்வான் ஓப் ஸ்டம்பிற்கு வெளியே தூக்கி போட்டார் அவரும் வெளுத்தார்.


ஸ்வான் தன்னால் விக்கெட்டுக்களை வீழ்த்த முடியாதபோது சிக்கனமாக பந்து வீசும் முயற்சியில் இறங்கவேண்டும், அதை விடுத்து தொடர்ந்து அச்சுறுத்தும் பாணியில் பந்து வீசினால் வாங்கிக் கட்டிக் கொள்ளவேண்டியதுதான்.

புரொடும், ஜேம்ஸ் அண்டர்சனும் வீசாத தருணங்களில் கடவுள் தான் இங்கிலாந்தை காப்பாற்ற வேண்டியுள்ளது.

அதே போல் 2ஆவது இனிங்ஸில் வோர்னர், கிளார்க்கிற்கு எதிராக கப்டன் குக் சிறப்பாகச் செயற்படவில்லை. இவர்கள் தங்கள் இஷ்டத்திற்கு உதிரி ஓட்டங்களை எடுத்தனர். மொத்தமாக தடுப்பு உத்திக்கு குக் சென்றார்.

மைக்கல் கிளார்க்கை ஸ்டரைக்கிற்கு வரவழைத்து அவரை பவுன்ஸ் செய்து எடுப்பது திட்டம். ஆனால் கிளார்க்கிற்கு தெரிந்திருந்தது அது. எனவே போட்ட ஷொட்பிட்ச் பந்தையெல்லாம் புல் ஷொட்டாக ஆடித் தள்ளினார்.

ஒருநாள் போட்டிகளிலேயே ஜோன்சன் ஜொனாதன் ட்ரொட்டை ஷொட் பிட்ச் பந்துகளில் எடுத்துள்ளார். அப்போது முதல் ஏன் இந்தப் பிரச்சினையை அவர் சரி செய்து கொள்ளவில்லை? ஒருநாள் போட்டி வேறு டெஸ்ட் வேறு ட்ரொட் நினைத்தால் அதை விட மடத்தனம் வேறு இருக்க முடியாது.



மட் பிரையர் கடந்த 8 போட்டிகளில் ஒன்றுமேயில்லை. அதுவும் அவு ஆகும் விதம் பயங்கரமாக உள்ளது. அவர் தன் கடைசி வாய்ப்பில் இருக்கிறார் எனத் தெரிவித்தார்.

# மஹேல விலகல்

(கொழும்பு)

பாகிஸ்தான் அணிக்கெதிரான ஒரு நாள் போட்டிகளுக்கான இலங்கை குழாமிலிருந்து மஹேல ஜெயவர்த்தன விலகியுள்ளார்.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில்அடுத்த மாதம் 11 ஆம் திகதி பாகிஸ்தான் அணிக்கெதிராக கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. இதில், இரண்டு ருவென்ரி-20, ஐந்து ஒருநாள் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

ஒருநாள் போட்டிகளுக்கான இலங்கை குழாமில் முன்னாள் தலைவரான மஹேல ஜெயவர்த்தன தனிப்பட்ட காரணங்களுக்கான இப்போட்டித் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்கள்:

ஒரு நாள் போட்டி குழாம்: டில்சான், குசால் பெரேரா, திமுத் கருணாரத்ன, குமார் சங்கக்கார, அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சண்டிமல், லஹிரு திரிமன்ன, அஷன் பிரியஞ்சன், கித்துருவன் விதானகே, திஸர பெரேரா, நுவான் குலசேகர, லசித் மலிங்க, சுரங்க லக்மால், சச்சித்திர சேனநாயக்க, ரங்கன ஹேரத், சீக்குகே பிரசன்ன

ருவென்ரி-20 குழாம்: டினேஷ் சந்திமால், லசித் மலிங்க, டில்சான், குசால் பெரேரா, குமார் சங்கக்கார, அஞ்சலோ மத்தியூஸ், லஹிரு திரிமன்ன, கித்துருவன் விதானகே, திஸர பெரேரா, நுவான் குலசேகர, சீக்குகே பிரசன்ன, சுரங்க லக்மால், சச்சித்திர சேனநாயக்க, அஜந்த மென்டிஸ், றமிம் றம்புக்வெல்ல

# இலங்கை அணிக்கு இடைக்கால பயிற்றுநர்?

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணிக்கு இடைக்கால பயிற்றுவிப்பாளரொருவர் நியமிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த உலகக் கிண்ணம் வரை இடைக்கால பயிற்றுவிப்பாளர் நியமிக்கப் படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளரான கிரஹம் போர்ட் எதிர்வரும் ஜனவரியுடன் தனது பதவியிலிருந்து விலகவுள்ளார். இந்த நிலையில் இலங்கை கிரிக்கெட் சபை புதிய பயிற்றுவிப்பாளரொருவரை தேடி வந்தது.

இதன்படி இலங்கையின் உதவிப் பயிற்றுவிப்பாளரான மார்வன் அத்தப்பத்துவும் மற்றொருவராக மார்க் டேவிஸும் இறுதிக்கட்ட நேர்முகத் தேர்விற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராகத் தெரிவாகுவதற்கு மார்வன் அத்தப் பத்துவிற்கு அதிகமான வாய்ப்புக்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இலங்கையின் சிரேஷ்ட வீரர்களான மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்கார மற்றும் திலகரட்ண டில்சான் ஆகிய மூவரும் இலங்கை அணியில் விளையாடி வருவதால் மார்வன் அத்தப்பத்துவை பயிற்றுவிப்பாளராக நியமிப்பது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை தயக்கத்தை வெளிப்படுத்தியுள்ளது. மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்கார மற்றும் திலகரட்ண டில்சான் ஆகிய மூவரும் மார்வன் அத்தப்பத்துவுடன் கிரிக்கெட் போட்டிகளில் பங்குபற்றியவர்களாக உள்ளனர். மார்வன் அத்தப்பத்துவின் தலைவராக மஹேல ஜெயவர்த்தன செயற்பட்டுள்ளார்.

இதன் காரணமாக 2015ஆம் ஆண்டு இடம்பெற வுள்ள உலகக்கிண்ணம் வரை இடைக்கால பயிற்றுவிப்பாளரொருவரை நியமிப்பது குறித்து இலங்கை கிரிக்கெட் சபை ஆராய்ந்து வருகிறது.

2015ஆம் ஆண்டு உலக கிண்ணத்தின் பின்னர் மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்கார, திலகரட்ண டில்சான் மூவரும் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் அதன் பின்னர் மார்வன் அத்தப்பத்துவை இலங்கையின் பயிற்றுவிப்பாளராக நியமிப்பதற்கு இலங்கை கிரிக்கெட் சபை திட்டங்களைக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# கிண்ணம் வென்றது சென். லூசியா



(மன்னார்)

வடக்கு-கிழக்கு லீக் அணிகளுக்கிடையில் நடைபெற்ற மாபெரும் கால்பந்தாட்டப் போட்டியில் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை பள்ளிமுனை சென். லூசியா அணி கைப்பற்றிக்கொண்டது.

மருசலீன் நினைவாக அவர்களின் குடும்பத்தாருடன் இணைந்து சென் . ஜோசப் விளையாட்டுக்கழகம் மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வடக்கு-கிழக்கு கால்பந்தாட்ட லீக் அணிகளுக்கிடையில் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டியை நடாத்தியது.

இப்போட்டி கடந்த 22,23,24ஆம் திகதிகளில் மன்னார் நகர சபை மைதானத்தில் நடைபெற்றது.

இதில் பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு , கிளிநொச்சி ஆகிய லீக்குகளில் இருந்து சிறந்த இரண்டு அணிகள் வீதம் 16 அணிகளும் மன்னார் லீக்கிலிருந்து சிறந்த 16 அணிகளுமாக மொத்தமாக 32 அணிகள் இப்போட்டியில் பங்குபற்றின.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு பள்ளிமுனை சென். லூசியா அணியும் பனங்கட்டிக்கெட்டு சென். ஜோசப் அணியும் மோதின. இரு அணிகளுமே உள்ளூர் அணிகள் என்பதால் பலம், பலவீனம் குறித்து இரு அணி களும் நன்கு அறிந்திருந்தன. அத்துடன் இவ் இறுதிப் போட்டி பரபரப்பிற்கு குறைவில்லாமல் இருக்கும் என இரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்டது. இரசிகர்களின் எதிர்பார்ப்புப் போல இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. குறிப்பாக, பிற்கள வீரர்களின் பலமான தடுப்பு அணையைத் தாண்டி கோல் எல்லைக்குள் இரு அணிகளாலும் முன்னேற முடியவில்லை. முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு கோல் எதுவுமின்றி நிறைவுக்கு வந்தது.

இரு அணிகளும் சுதாகரித்துக் கொண்டு புதிய வியூகத்துடன் இரண்டாவது பாதி ஆட்டத்தில் களமிறங்கின. இதிலும் இரு அணிகளும் மாறி மாறி பந்தைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடிந்ததேயொழியகோலைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இரண்டாவது பாதிஆட்டமும் கோல் பெற்றுக்கொள்ளாத நிலையில் நிறைவுக்கு வந்தது. இதன் காரணமாக தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் பள்ளிமுனை சென். லூசியா அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக பள்ளிமுனை சென். லூசியா அணி வீரர் டொனால்ட், சிறந்த கோல்காப்பாளராக அணியைச் சேர்ந்த பரா, சிறந்த பின்கள வீரராக சென். ஜோசப் அணி வீரர் டீயூஸ்லஸ், சிறந்த மத்திய கள வீரராகபள்ளிமுனை சென். லூசியா அணி வீரர் எடிசன், சிறந்த முன் கள வீரராக சென். லூசியா அணி வீரர் வூலி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் சிறந்த அணியாக மயிலங்காடு ஞானமுருகன் அணியும், சிறந்த அணி முகாமையாளர்களாக மயிலங்காடு ஞானமுருகன் அணியைச் சேர்ந்த றதீஸ், தோட்டவெளி ஜோசவ்வாஸ் ஐக்கிய் அணியின் முகாமையாளர் கோல்டன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், சிறப்பு விருந்தினராக மன்னார் நகர சபை முதல்வர் எஸ். ஞானபிரகாசம், கௌரவ விருந்தினர்களாக போட்டி அனுசரணையாளர்களான பிறேமா ராதிகா, மன்னார் கோட்டக் கல்வி அதிகாரி கிறிஸ்ரி, சென். ஜோசப் விளையாட்டுக்கழகப் போசகர் செல்வம் சுதாகரன், நானாட்டான் பிரதேச சபைத் தலைவர் அன்புராஜ் லம்பேட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விளையாட்டுச் செய்திகள்

# சந்திப்பு

(கொழும்பு)

தேசிய ஒலிம்பிக் சங்கத்தின் விளையாட்டு மசோதா மற்றும் அது தொடர்பான விதிகள் என்பவற்றில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை தொடர்பாக தேசிய ஒலிம்பிக் சங்கத்தில் உள்ள விசேட பிரதிநிதிகள், விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகேவினை சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இச்சந்திப்பில் எதிர்கால விளையாட்டுத்துறையினை கருத்திற் கொண்டு இருதரப்பினரும் கருத்தொருமித்து செயற்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகேயின் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் தேசிய ஒலிம்பிக் சங்கத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சங்கத்தின் செயலாளர் மெக்ஸ் வெல்டி சில்வா, ரொஹான் பிரனாந்து, டயன் கோமஸ், மேஜர் ஜெனரல் பாலித பிரனாந்து, தேவா ஹென்றி ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

தேசிய விளையாட்டு சட்ட விதிகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை தொடர்பாக அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கநாட்டின் தேசிய விளையாட்டினை தொடர்ந்து விருத்தி செய்வதற்காக விளையாட்டு அமைச்சின் தேசிய ஒலிம்பிக் சங்கம் மிகவும் ஒத்துழைப்புடனும் அவதானமாகவும் இருதரப்பினருக்குமிடையில் புரிந்துணர்வுடன் செயற்படுதல் வேண்டும்.

மகிந்த சிந்தனையின் கீழ் விளையாட்டில் பாரியதொரு வெற்றியினை அடைந்து கொள்வதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# இன்று இறுதியாட்டம்

இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக்கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி இன்று நாக்பூரில் நடைபெறவுள்ளது இரு அணிகளுமே ஒவ்வொரு வெற்றியைப் பதிவு செய்துள்ளமையால் தொடரின் வெற்றியைத் தீர்மானிக்கும் முக்கிய போட்டியாக இது அமைந்துள்ளது.

இதேவேளை, இரண்டாவது போட்டியில் தோல்வியடைந்தமை பற்றி இந்திய கப்டன் டோனி குறிப்பிடுகையில்,

இரவில் கடுமையான பனிப்பொழிவு இருந்தது. இதனால் பந்து வீச்சாளர்கள் பந்தை சரியாகப் பிடித்து வீசுவதில் மிகவும் சிரமப்பட்டனர். ஆனாலும் ஆட்டத்தை கடைசி ஓவர் வரை கொண்டு சென்றது பந்து வீச்சாளர்களின் சிறந்த முயற்சியாகும். பனிப்பொழிவு மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் இந்த ஆடுகளத்தில் 289 ஓட்டங்கள் என்பது 400 ஓட்டங்கள் மாதிரியாகும். அது மட்டுமின்றி சுழற்பந்து வீச்சாளர்களுக்கும் ஆடுகளம் இன்னும் அதிகமாக ஒத்துழைத்திருக்கும் என்றார்.

வெற்றி குறித்து கருத்துத் தெரிவித்த மேற்கிந்தியத் தீவு அணிக் கப்டன் டுவைன் பிராவோ,

அணியின் கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றி. ராம்போலும், ஹோல்டரும் பந்து வீச்சில் நல்ல ஆரம்பத்தை அமைத்து தந்தனர். இந்தியாவை 300 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியதும் எங்களுக்கு வாய்ப்பு இருப்பதாக நினைத்தேன். எங்களது அனைத்து திட்டங்களையும் களத்தில் அருமையாக செயல்படுத்தினோம். முதல் 5 துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் கடைசி வரை விளையாட வேண்டும் என்பது எங்களது இலக்குகளில் ஒன்று. 4 வீரர்கள் அரைசதம் அடித்தது சிறப்பான விடயம் எனக் குறிப்பிட்டார்.

# ஜோர்தானிடம் இலங்கை தோல்வி



(கொழும்பு)

இலங்கை - ஜோர்தான் அணிகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஜோர்தான் அணி 77-50 எனும் கணக்கில் இலங்கை அணியைத் தோற்கடித்தது.

3ஆவது ஆசியக் கிண்ண 16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியின் லீக் போட்டி நேற்று முன்தினம் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

இதில் இலங்கை, ஜோர்தான் அணிகள். மோதின.

ஜோர்தான் அணி வீராங்கனைகளின் சிறப்பான தடுப்பு ஆட்டத்தால் இலங்கை வீராங்கனைகள் புள்ளிகளைப் பெற முடியாமல் திணறினர். இலங்கை வீராங்கனைகள் பல்வேறு தவறுகளை இழைத்தமையினால் ஜோர்தான் அணிக்கு அதிக புள்ளிகள் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முதல் பாதி நேரத்தில் 23 - 11 எனும் புள்ளி வித்தியாசத்தில் ஜோர்தான் அணி முன்னிலை வகித்ததுடன் தொடர்ந்தும் அதிக புள்ளிகளைப் பெற்று இலங்கையைத் தோற்கடித்தது.

# துறையூர் ஐயனாருக்கு சீருடை வழங்கல்




(வேலணை)

மனித உரிமைகள் இல்லத்தினால் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகத்திற்கான கால்பந்து போட்டி சீருடைகள் வழங்கப்பட்டது.

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மனித உரிமைகள் இல்லத்தின் தீவக கள உதவியாளர் பஸ்னா அலிஸ்ரினாவினால், வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகத் தலைவர் மு. சிவநேசனிடம் சீருடைகள் வழங்கப்பட்டது. (21)

# கவிஞர் கைதும்.....
# கதை அளப்புக்களும்.....

– ரூபனா கட்டுரையிலிருந்து.



முன்னாள் புளட் அமைப்பின் முக்கியஸ்தர் பின்னாள் கவிஞர் இந்நாள் நடிகர் ஜெயபாலன் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டுவிட்டார் என்ற செய்தி கவலை அளிப்பதாக இருந்தாலும் சிலரை சிந்திக்கவும் பலரை சிரிக்கவும் வைத்துள்ளது.

இந்த கைது புலியை பிடிப்பதாக நினைத்து எலியை பிடித்ததாக, இவரை கைது செய்த அதிகாரிகள், மேல் மட்டத்தினால் தண்டிக்கவோ, கண்டிக்கவோ படுவதற்கான வாய்பை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜெயபாலன் கைது செய்யப்பட்டு விட்ட விடயம் தெரிந்ததும், பல பகுதிகளிலுமிருந்த பல்வேறுதுறை சார்ந்த நண்பர்களிடமும் ஒரேவிதமான எண்ணமே இருந்தது. ஜெயபாலன் எதை விரும்பினாரோ எதை நோக்கி நகர்ந்தாரோ அது நடந்து விட்டது. அவர் எதிர்பார்த்து இலங்கை வந்த, காவல்துறையின் வாகனத்தில் ஏறுவது என்கின்ற அவா நிறைவேறியதன் மூலம் நானும் ரௌடிதான் என வடிவேலு பாணியில் உரத்து கூவி தமிழகத்திலும் புலம் பெயர் தேசியவாதிகள் மத்தியிலும் மீசையை முறுக்கிக்கொண்டு வீர நடை போடும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டுவிட்டார். ஒரு தியாகியாக, சிறைமீண்ட செம்மலாக, பயிற்சி பெறாத போராளியாக உலா வரப்போகிறார். இவையே அவரை 1970களில் இருந்து அறிந்த பலரின் கருத்தாக இருந்தது

எல்லா நண்பர்களும் சொல்லி வைத்ததைப் போல வடிவேலுவின் நகைச்சுவை காட்சியைத்தான் நினைவுகூர்ந்தார்கள். ஒரு மருத்துவர் சொன்னார்- "என்ன இந்தாள் நான் ஜெயிலுக்கு போறன் ஜெயிலுக்கு போறன் என சந்தோசமாகச் சொல்லிக் கொண்டு போறார்" என. இலங்கை வருவதான ஜெயபாலனின் பகிரங்க அறிவிப்பு, அதனை தொடர்ந்து அவர் வெளியிட்ட கருத்துக்கள், இலங்கையில் அவர் நடந்து கொண்ட முறைமை எல்லாம் அவர் ஜெயிலுக்கு போவதை இலக்காக கொண்டே இலங்கை வந்தார் என்கின்ற தோற்றப்பாட்டை அப்பட்டமாக வெளிப்படுத்தியிருந்தது.

இலங்கை ஜெயில்கள் அத்தனை சாதாரணமானதா......? ஜெயிலுக்குப் போவதெல்லாம் சகஜமான விடயமா......? ஜெயபாலனின் போராட்ட உணர்வை கொச்சைப்படுத்தலாமா.....? எனப் பலர் முறுகலாம்.

வெளிநாட்டு பிரஜாவுரிமை பெற்ற, செயல்களால் அல்லாமல் எழுத்துக்களினால் மட்டும் சீவிப்பவர்கள் - இவை பற்றி எல்லாம் அச்சப்படத் தேவையில்லை. இலங்கையின் உள்நாட்டு மோதல் முடிவுக்கு வந்த 2009இன் பின்னர் உருவாகியிருக்கும், குறிப்பாக தமிழர்கள் தொடர்பான அரசாங்கத்தின் "பொறுப்புக்கூறல்" என்பதுதான் இவர்களின் கவசம். அவர்கள் இலங்கைக்குள் வேண்டப்படாதவர்கள் என அரசாங்கம் கருதும் பட்சத்தில் அவர்களை பிடித்து வெளியே அனுப்பிவிடும். போரின் பின்பு கைது செய்யப்பட்ட, பொதுவிடயம் (அரசியல் - கலை - இலக்கியம்) சார்ந்த அனைவரின் விடயத்திலும் நமது தமிழ் அப்புக்காத்துக்களை போல சட்டநுணுக்கம் பார்த்துத்தான் அரசாங்கம் செயற்பட்டிருக்கின்றது. நமது தமிழ்வீரர்களிற்கு இதனை சகித்துக்கொள்ள சற்று சிரமமாகத்தான் இருக்கும்.

கோத்தபாய ராஜபக்ஷவையே இரண்டுநாள் தூக்கமில்லாமல் கலங்கடித்த கடத்தப்பட்ட குமார் குணரட்ணம் அவரிற்கிருந்த வெளிநாட்டு பிரஜாவுரிமையாலும், அதன் அடிப்படையிலான மேற்குநாடுகளின் சில சக்திகளின் அழுத்தத்தினாலுமே காப்பற்றப்பட்டார்.

அடுத்து தோழர் அ.மார்க்ஸ் விவகாரம். மார்க்ஸ் அவர்கள் ராஜபக்ஷ குடும்பம் உட்கார்ந்திருக்கும் நாற்காலிகளை பெயர்த்தெறிபவரோ அல்லது அப்படியான நோக்கத்துடன் வந்தவரோ அல்ல. கூட்டமொன்றில் பேச வந்த அழைப்பை மதித்து இங்கு வந்தவர். இலங்கை மற்றும் இந்தியாவிற்கிடையில் பிரயாணம் செய்யும் இருநாட்டவர்களுமே, பெரும்பாலும் சுற்றுலா விசாவில்தான் செல்கிறார்கள். இலகுத்தன்மையான இந்த வழியில் இங்கு வந்த தோழர் மார்க்ஸை இலங்கைக்கு அழைத்த குழுவிற்குள் ஏற்பட்ட குடுமிப்பிடி சண்டை, சிக்கலில் மாட்டியது. ராஜபக்ஷவின் விசுவாசி என்ற பழிச்சொல்லிற்குக் கூட ஆளாகிக் கொண்டிருந்தவரை ராஜபக்ஷவே போராளியாக்கி விமானமேற்றி அனுப்பி விட்டார். மார்க்ஸ் பேசவிருந்த கூட்டத்துடன் தொடர்புடைய யாரோ ஒரு கறுப்பாடு, குடிவரவுத்துறையில் இருந்த தனது நண்பர்களிற்கு சுற்றுலா விசாவில் வந்து பகிரங்ககூட்டத்தில் பேசப்போகிறார் என போட்டுக் கொடுக்க, இலகுவான போராளிப் பட்டத்தை அவர் பெற்றுக் கொண்டார்.

இந்தியா உட்பட உலகின் பல நாடுகளிலும் சுற்றுலா விசாவில் வந்தவர் சுற்றுலா மட்டுமே செல்லலாம் என்பது பொதுவிதியாகவே உள்ளது. கூட்டங்களில் பேசுவது, மாநாடுகளில் கலந்து கொள்வது, அரசியலில் ஈடுபடுவது, பத்திரிகையாளர் சந்திப்புகளை நடாத்துவது போன்றனவற்றிற்கு வேறுவிதமாக விசா பெற வேண்டியுள்ளது. இந்த சட்டம் அமுலில் உள்ள நாடுகள் அனைத்திலுமே, அது தீவிரமாக கண்காணிக்கப்படுகிறதா......? கண்காணிக்கப்பட வேண்டுமா....? என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

உலகின் அனைத்து நாடுகளும் தனது எதிரிகளை பழிவாங்க, அல்லது தனக்கு உவப்பில்லாதவர்களுடன் கடுமையாக நடந்து கொள்ள இது போன்ற சட்டங்களை துணைக்கழைக்கின்றன. பல நாடுகளில் உள்ளூரிலேயே சில சட்டங்கள் சிலருக்கு மட்டுமே அல்லது சில நேரங்களில் மட்டுமே பிரயோகிக்கப் படுகின்றன. இதன் அர்த்தம் பிரித்தானியாவிலும் இலங்கையிலும் ஒரே அளவான சட்ட ஆட்சிதான் நடக்கின்றது என்பதோ இலங்கையில் நடக்கும் ஜனநாயகமீறல்களிற்கு சமாதானம் சொல்வதோ அல்ல.

சுற்றுலா விசாவில் வந்து வேறு பொது விடயங்களில் ஈடுபடக்கூடாது என்பது ஒரு சட்டவிதியாகவே இருக்கின்ற போது, அதை நீக்க அல்லது மீற வேறு மார்க்கங்கள் இல்லாத நிலையில் ஒருவர் இலங்கையில் என்ன செய்யப் போகிறாரோ அதற்கு தோதான விசா பெற்று வருவது மட்டுமே மார்க்கம்.

இலங்கை அரச எதிர்ப்பாளர்களும், தீவிர விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களும் எத்தனைபேர் சத்தமின்றி நாட்டிற்குள் வந்து தேனெடுத்துக் கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள். எத்தனை அரச எதிர்ப்பு ஊடகவியலாளர்கள் நாட்டிற்குள் வந்து வேண்டியதை பிடித்துக் கொண்டு செல்கிறார்கள்.

ஏன் ஏற்கனவே இலங்கை அரசுக்கு எதிராக செங்கடல் படம் எடுத்து உலகம்முழுக்க புலிஆதரவாளாகள் மத்தியில் காண்பித்து அவர்கள் ஆசீர்வாதத்தை பெற்ற லீனா மணிமேகலை என்பவர் அதன்பின்னர் இதே சுற்றுலா விசாவில் மூன்று தடவை இலங்கை வந்து மீண்டும் அரசாங்கத்திற்கு எதிராக படம் தயாரிக்கவில்லையா.....? அது அவர்களின் புத்திசாதுரியம் வியாபார தந்திரம்.

புலம் பெயர் நாடுகளின் எண்ணற்ற புலி ஆதரவு பொது அமைப்புக்களும் பல அரச எதிர்ப்பாளர்களும் சத்தமின்றி சுற்றுலாவில் வந்து இங்குள்ள பாதிக்கப்பட்டவர்களிற்கு உதவி செய்து செல்கிறார்களே. இது அவர்களின் பொது நோக்கு.

அண்மையில் இலங்கை வந்த இந்தியாவின் தெஹல்கா ஊடகவியலாளர் ஒருவரை சந்தித்த போது, என்ன விசாவில் வந்தீர்கள் என கேட்க, சிரித்துக் கொண்டு பாக்கிலிருந்த சில பட்டுப்புடவைகளை காட்டினார். அவர் இங்கே வந்தது ஒரு அப்பாவி வியாபாரியாக. இது தான் செயல்பாட்டாளர்களுக்கும் வேடதாரிகளுக்குமிடையிலான வேறுபாடு.

இலங்கை அரசை கடுமையாகச் சாடும் கருத்துக்களையும் குறிப்பாக வன்னியுத்தத்தின் பின்னர்,

"நீதியற்ற வெற்றியில் களிகொண்ட வீடுகளில் நாளை ஒப்பாரி எழும். வெண்புறாக்களாய்க் கொல்லப் படுபவர் புலம்பி அழுத தெருக்களில் நாளை குதூகலம் நிறையும். தீப்பட்ட இரும்பென் கண்கள் சிவந்தேன் சபித்துப் பாடவே வந்தேன். முகமூடிகளும் ஒப்பனையுமற்ற உருத்ர தாண்டவப் பாடலிது. என் தமிழின் மீதும் என் கவிதைகள் மீதும் ஆணையிட்டு நான் அறம் பாடுகிறேன். எனது சமரசங்களில்லாத சத்தியத்தின் பெயரால் சபிக்கிறேன் எனது மக்களின் இரத்தத்தில் கைகளும் மனங்களும் தோய்ந்தவர்களே உங்களுக்கு ஐயோ. தர்மத்தின் சேனையே என்னை களபலியாக எடுத்துக்கொள்".

என்கின்ற வரிகள் அடங்கிய அறம்பாடலை வெளியிட்டு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி மகிழ்ந்தவர் ஜெயபாலன். கருத்து வெளியிடுவதும் அறம்பாடுவதும் அவரவர் சுதந்திரம். ஆனால் இப்படி அதிதீவிர அரச எதிர்ப்பாளனாக இருக்கும் இவர் பகிரங்கமாக நான் இலங்கை போகிறேன் என அறிவித்து விட்டு வந்ததும் இங்கு வந்த பின்னர் அவர் நடந்கொண்ட விதமும் இவரது கபட நாடகத்தை வெளிப்படுத்துகிறது. ஜெயபாலன் தனது தாயாரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துவதை தடுப்பது சரியென்று வாதிடுவதோ அல்லது பல்லாயிரக் கணக்கானவர்களின் நினைவிடங்களும் பல வாழ்விடங்களும் உயர்பாதுகாப்பு வலயமாக்கப் பட்டதோ அல்லது மரணித்தவர்களிற்கான அஞ்சலி உரிமைகள் மறுக்கப்படுவதை நியாயப்படுத்தவதோ நியாயமானதாகாது.

தனது தயாரை இறுதிநாட்களில் தவிக்க விட்ட வெப்பியாரத்தை ஜெயபாலன் முகப்புத்தகத்தில் ஏற்கனவே எழுதி, தாயின் கல்லறையிலிருந்து புதிய கல்வெட்டு, எழுத ஆரம்பிக்கப் போவதாக வேறு சொல்லியிருக்கிறார். தாய்மாரின் கண்ணீருக்கு மகன்களே காரணமாயிருப்பதும், அனாதையாய் தாய்மார் இறந்து போகும் துயரக்கதையும்தானே நமது மரபாகவே ஆகிவிட்டிருக்கின்றது. அவர் எதையும் எழுதட்டும். ஆனால் இப்படி நாள், இடம், நேரம் எல்லாம் குறித்து எழுதப்படுமளவிற்கு நமது தமிழ்கவிதைச் சூழல் இயந்திரத்தன்மையாகிவிட்டது என்பதுதான் வேதனை.

உண்மையில் அவர் தனது தயாரின் கல்லறைக்கு அஞ்சலிசெலுத்த வந்திருந்தால், அதனை ஆர்ப்பாட்டமின்றி செய்திருக்கலாம். அதனை ஒரு புரட்சி செயலாகவோ அல்லது அரசியல் செயற்பாடாகவோ பிம்ப உருவாக்கம் செய்திருக்க வேண்டியதில்லை. ஒருவன் தனது தாயாரின் கல்லறையில் வந்து அஞ்சலி செலுத்துவதில் என்ன புரட்சி இருக்கிறது. சில வேளைகளில் அஞ்சலி செலுத்தாதவன்தான் ஏதாவது புரட்சி நியாயங்கள் சொல்லலாம்.

பகிரங்க முன்னறிவிப்புடன் இலங்கை வந்த ஜெயபாலன் விமானநிலையத்தில் தனக்கு எதுவும் நடக்கவில்லையே என்கின்ற வேக்காட்டுடன் அன்று மாலையே கொழும்பு தமிழ்சங்கத்தில் நடந்த விழா ஒன்றில் அழையா விருந்தாளியாக நுழைந்து அரச எதிர்ப்பு கருத்துக்களை ஆவேசத்துடன் வெளிப்படுத்தி அங்கே பரபரப்பு ஏற்பட முறைத்துக் கொண்டு வெளியேறினாராம்.

சில வாரங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள (புலிகள் அமைப்பில் செயல்பட்டு இன்று அமைதியாக இருக்கும்) நண்பர்கள் சிலரை வற்புறுத்தி, "அவர்களுக்கிருந்த தொடர்புகளை பயன்படுத்தி யாழ் ஊடக மையத்தில் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார். இதில் இவர் வெளியிட்ட கருத்துக்களும் காட்சிகளும் (இவராலேயே அனுப்பப்பட்டு) வெளிநாட்டு உள்நாட்டு ஊடகங்களில் வெளிவந்த நிகழ்வே இவர் கைதுக்கு காரணமாக அமைந்தது எனலாம்.

அதே வேளை கைது செய்யப்படுவதற்கு முதல்நாள் வவனியா காவல்துறையினருக்கு நோர்வேயில் இருந்து வந்த தொலைபேசி அழைப்புத்தான் ஜெயபாலன் பற்றிய விபரங்களை காவல்துறைக்கு தெரியப்படுத்தியது எனவும் இது கவிஞரின் ஏற்பாடே எனவும் சொல்லப்படுகிறது.

நடக்கும் சம்பவங்கள் இதனையும் நம்பவைக்கும் வகையிலேயே உள்ளன. ஜெயபாலன் கடத்தப்பட்டார் என்பது முதல் செய்தி, ஓரிரு மணித்தியாலங்களில் அவர் வவுனியா காவல்நிலையத்தில் உள்ளார், லண்டனுக்கு கதைத்தார், இந்தியாவுக்கு கதைத்தார், அமைச்சர் பசீர் சேகுதாவுத் தொடாபில் உள்ளார் இப்படி தொடர், தொடர்பு அறிவிப்புக்கள்.

குமார்குணரட்ணம் பற்றிய மர்மம் எத்தனைநாள் நீடித்தது என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் இங்கே கடத்தப்பட்டதாக சொல்லப்பட்டவர் உடனேயே உலகமெல்லாம் தொலைபேசி, "நான் காவல்நிலையத்தில் இருக்கிறேன்" ஆரம்பிக்கிற அளப்பறை.

ஜெயபாலனுடன் இப்பொழுதுதான் பேசினேன், காரில் போகிறார். இப்பொழுது சிறுநீர் கழிக்கிறார், முதுகு சொறிகிறார். இப்பொழுது கொலைகார காவல்துறை ஒருவனின் அருகில் உட்கார்ந்திருக்கிறார் இப்படி பில்டப்புகள்.

அதிலும் ஒரு இணையத்தளம் சகித்து கொள்ளவே முடியவில்லை. இலங்கையில் - அதுவும் பயங்கரவாத தடுப்பு பிரிவினால் கடத்தப்பட்ட ஒருவர், அவர்களின் வாகனத்தில் இருந்தபடி தொலைபேசியில் கதைக்கிறார்.... அது ஒலிபரப்பப் படுகிறது..... இதற்கு இவர்களின் பெயர் கடத்தல்.

கடத்தப்பட்டு காணாமல் போனவர்களின் உறவுகள் போராடிக் கொண்டிருக்கும் இந்த காலத்தில்த்தான் இந்த "மணல்விளையாட்டுக்களும்" நடக்கின்றன. இப்படியொரு கடத்தலும், இதன் தொடர்ச்சியான சம்பவங்களும் உலக வரலாற்றிலேயே இதுதான் முதன் [illegible] எனலாம்.

ஜெயபாலன் இலங்கைக்கு அச்சுறுத்தலானவர் என்பதாலோ இலங்கையின் தமிழர் அரசை மலர வைக்க வந்தவர் என்பதாலோ கைது செய்யப்படவில்லை என்பது இங்குள்ள அப்பாவிக்கும் புரிகிறது பாவம் அங்குள்ள மக்கள்.


# சொன்னார்கள்...

▶ "சின்ன வயதிலிருந்தே ஏதோ இந்த சினிமா மேல் ஆசை. ஆனால் சினிமா வாயிலுக்கான திறவு கோல்கள் என்னிடம் இல்லை. விஷுவல் கம்யூனிகேஷன் படிப்பு சினிமா பக்கம் கொஞ்சம் இழுத்து விட்டது." பாலுமகேந்திரா பட்டறை பக்கம் போனால் சினிமா கற்றுக்கொள்ளலாம்" என்று சொன்னாங்க. நானும் அந்தப் பக்கம் போய் கொஞ்சம் கற்றுக் கொண்டேன். அப்போது அங்கிருந்த இயக்குநர் வெற்றிமாறன் கொஞ்சம் பழக்கம். வெளியில் வந்ததும் என்னை வைத்து "தசையினை தீச்சுடினும்" என்று ஒரு படம் ஆரம்பித்தார். ஏதோ சில காரணங்களால் அது அப்படியே நின்று போனது. இப்படி ஒரு தோல்வியின் பக்கத்தில் இருந்துதான் நான் சினிமா வாழ்க்கையைத் தொடங்கினேன். "அட்டக்கத்தி" இயக்குநர் ரஞ்சித் பெரிய இடம் தந்து, சினிமாவில் நல்ல தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். தொடர்ந்து நல்ல படங்களில் மட்டுமே நடிக்க வேண்டும் எனக் காத்திருந்தேன். "வாரா-யோ வெண்ணிலாவே" வெங்கட் பிரபுவின் உதவியாளர் சசிதரண் இயக்குகிறார். ராஜுமுருகன் இயக்கும் "குக்கூ" உடம்பும், மனசும் லயித்து இயங்குகிற படம். இரண்டு மாற்றுத்திறனாளிகளிடம் இருக்கிற காதல், அதன் உன்னதம் என கதை போகும். எஸ்.பி.பி.சரண் சாரை எனக்குப் பிடிக்கும். "ஆரண்ய காண்டம்" படத்தைத் தயாரிக்க தனி தில் வேண்டும். இப்போது அவர் படத்தில் நான். புதுமுகம் கார்த்திக் ராஜு இயக்கும் "திருடன் போலிஸ்". சினிமா ஒரு பதட்டத்தோடு நிற்க வேண்டிய இடம்தான். ஆனால் நம்பிக்கையோடு உழைத்தால் ஆசீர்வதிக்கப்பட்ட இடம் கிடைக்கும் என்று புரிந்துகொண்டிருக்கிறேன்.

**- 'அட்டக்கத்தி' தினேஷ்**

▶ நான்கு வருடங்களுக்கு முன் சினிமாவில் எனக்கு சின்ன இடைவெளி ஏற்பட்டது. அந்த இடைவெளியை பயனுள்ளதாக மாற்ற நினைத்தேன். திருக்குறளை மையப்படுத்தி பிரம்மாண்டமான இசைப்பேழை ஒன்றை உருவாக்கினேன். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகியவற்றுக்கு வெவ்வேறு பாணியில் இசையமைத்துள்ளேன். 12 நாடுகளுக்குச் சென்று 500 பாடகர்களை வைத்து இந்த இசைத்தொகுப்பை உருவாக்கி இருக்கிறேன். இசையின் மூலம் சொல்லும் போது, எவ்வளவு கடினமான கருத்தும் மக்களைச் சென்றடையும் என்பதால் இவ்வளவு பெரிய முயற்சியில் ஈடுபட்டேன். ஜனவரி 17, திருவள்ளுவர் தினத்தன்று இதைச் சென்னையில் வெளியிட உள்ளேன்.

**- இசையமைப்பாளர் பரத்வாஜ்**



▶ வேகமாக என்னால் நடனம் ஆட முடியாது. மேலும், நடனத்தில் என்னை விட சிறந்தவர் தமன்னா. அவரது நடனத்தை, பல படங்களில் பார்த்து அசந்து போன நான், அவரது தீவிர ரசிகையாகி விட்டேன்...


**- சமந்தா**











▶ "ஸ்ரேயா போன்ற நடிகைகள் நடிப்பிலிருந்து ஓய்வு பெறலாம்..." என்று காஜல் அகர்வால் கருத்து கூறியிருக்கிறார். காஜலை விட, நான் சீனியர் தான் என்றாலும், எனக்கொன்றும் அதிக வயதாகி விடவில்லை. அதுமட்டுமின்றி, 31 வயதாகியும் திருமணம் பற்றி யோசிக்காமல், பணம் சம்பாதிக்கும் நோக்கத்திலே இருக்கும் காஜல், என்னைப்பற்றி கருத்து கூறும் அளவுக்கு, பெரிய நடிகையும் இல்லை; அனுபவசாலியும் இல்லை...

**- ஸ்ரேயா**

▶ எனது புதிய படம் "திகார்". புதுமுகம் உன்னிமுகுந்தன், "அலெக்ஸ் பாண்டியன்" படத்தில் சிறு வேடத்தில் நடித்த அகன்ஷாபூரி இப்படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமாகிறார். தனி சாம்ராஜ்யம் நடத்தும் டான் அலெக்ஸ்சாண்டர் என்ற கற்பனைப் பாத்திரத்தை முன்னிறுத்தி திரைக்கதை வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பொருத்தமான நடிகராக பார்த்தீபன் இருப்பார். என் முந்தைய திரைக்கதைகளில் ஆக்ஷன் முன்னிறுத்தப்பட்டாலும், தங்கை, அண்ணன், அம்மா என குடும்ப உறவுகளை பக்க பலமாக வைத்திருப்பேன். ஆனால் இந்த முறை முழுக்க முழுக்க ஆக்ஷன். படத்தின் பெரும்பகுதி துபாய், ஸ்பெயின், மும்பை ஆகிய இடங்களில் பயணிக்கும். இறுதிக் கட்டப் படப்பிடிப்பு சென்னையில் நடந்து வருகிறது.

**- இயக்குநர் பேரரசு.**

▶ இசையமைப்பாளர் இமானை புகழ்ச்சி வார்த்தைகள் சூழ்ந்திருக்கிறது. அதை நானும் வழி மொழிகிறேன். நீண்ட நாட்களுக்கு பின் இமானின் இசையில்தான் தமிழ் கேட்கிறது. மொழி கேட்கிறது. மொழி கேட்டால் அந்தப் பாட்டு வெற்றி பெறும். மொழி வேறு. இசை வேறு என்பதல்ல. மொழிக்குள்ளும் இசையமைப்பாளர் இருக்கிறான். இசைக்குள்ளும் மொழி இருக்கிறது. இசை அமைப்பாளன் வெற்றி பெற்றால் பாடகன் வெற்றி பெறுகிறான். பாடகன் வெற்றி பெற்றால் பாடலாசிரியன் வெற்றி பெறுகிறான். இந்த மூன்று பேரும் வெற்றி பெற்றால் இயக்குநர் வெற்றி பெறுகிறான். இயக்குநர் வெற்றி பெற்றால் மக்கள் வெற்றி பெறுகிறார்கள். இயக்குநர் சீனுராமசாமி சமீபத்தில் என்னிடம், தன் பழக்கங்கள் அனைத்தையும் விட்டு விட்டேன் என்றார். இளம் இயக்குநர்கள் ஒழுக்கத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும். நேற்று சபதங்களின் காரணமாக மது கோப்பைகளை உடைத்து விட்டேன். இன்று மது கோப்பைகளின் காரணமாக சபதங்களை உடைத்து விட்டேன் என்றொரு கவிதை உண்டு. அப்படி ஆகி விடக் கூடாது.

**- வைரமுத்து**



# சுந்தராம்பாள்

ஒரு கல்யாண வரவேற்பு நிகழ்ச்சியின் போது, கே.பி.சுந்தராம்பாளின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மேடையை சுற்றியிருந்தவர்கள், பூம்புகார் படப் பாடல்களை பாட வேண்டும் என்று, கூக்குரலிட்ட வண்ணமும், எழுதிக் கொடுத்த வண்ணமும் இருந்தனர்.

உடனே, கே.பி.எஸ்., "நீங்கள் பூம்புகார் கதையை அறிந்திருப்பீர்கள். கோவலனுடைய முடிவும் உங்களுக்குத் தெரியும். ஆதலால், இக்குழந்தைகளை (மணமக்களை) ஆசிர்வதிக்கிற இந்நேரத்தில், அம்மாதிரியான பாடல்களை பாடக் கூடாது என்பது, என் எண்ணம். இவர்கள், நிறையக் குழந்தை குட்டிகளை பெற்று, சுகமாக வாழ வேண்டும் என்று, முருகனை வேண்டிக் கொள்கிறேன். ஆகவே, இன்று மட்டும் என்னை விட்டு விடுங்கள்..." என்று சொல்லி, "பழம் நீயப்பா..." என்று, முருகனின் பாடல்களை பாட ஆரம்பித்தார். சபையில் ஏற்பட்ட கரவொலி ஆரவாரம் அடங்க வெகு நேரமாகியது.

**- 'சுவையான நிகழ்ச்சிகள்' நூலிலிருந்து...**

# உலோகச் செய்திகள்!

- உலோகங்களில் மிகவும் கனமானது ஆஸ்மியம். மிகவும் லேசானது லித்தியம்.
- கலீலியம் என்ற உலோகம் கையில் வைத்தாலே உருகிவிடும்.
- உலகில் மிகவும் அதிகமாகப் புதைந்து கிடக்கும் உலோகம் அலுமினியம்.
- இனிப்புச் சுவைகூட்டும் சக்கரீன் தயாரிக்க மங்கனீஸ் உலோகம் பயன்படுகிறது.
- டயர்கள் தயாரிக்க டெலுரியம் என்ற உலோகம் பயன்படுகிறது.
- புளூடோனியம் என்ற உலோகம் செயற்கை முறையில் தயாரிக்கப்படுகிறது.
- எந்தவிதமான வெப்ப நிலையிலும் பிரகாசமாகவே இருக்கும் உலோகம் பிளாட்டினம்.



# "இதுதான் தாம்பூலம்"...

வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு மட்டும் தாம்பூலம் அல்ல...
தரமான தாம்பூலம் என்பது:

**ஒரு பாக்கு**
**ஐந்து வெற்றிலை**
**சிறிது கஸ்தூரி**
**பச்சைக் கற்பூரம்**
**சங்கச் சூரணம்**
**இரண்டு கிராம்பு**
**சிறிது ஜாதிக்காய்**
**மூன்று வால் மிளகு**

இந்தக் கலவை முறையில் சேர்த்துப் போட்டுக் கொள்வதுதான் தரமான தாம்பூலம் ஆகும்.
("சித்த மருத்துவ மூலிகை" நூலிலிருந்து.)

# பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிக்கக்கோரி கவனயீர்ப்பு போர்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பெண்கள் அமைப்புக்கள் ஒன்றிணைந்து யாழ்ப்பாண நீதிமன்றிற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை நேற்றுமுன்தினம் காலை நடாத்தியுள்ளனர்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் நேற்றுமுன்தினம் மாகும். தற்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக் காணப்படும் நிலையில் எதிர்வரும் காலங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்க வேண்டும் எனக் கோரி பெண்கள் அமைப்பினால் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

மேலும் நாச்சிமார் கோயில் தேர்முட்டியில் இருந்து மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அது தொடர்பிலான விசாரணை நீதிமன்றில் நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த கொலை தொடர்பில் வழக்கு விசாரணைகள் நீதியான முறையில் நடாத்தப்பட்டு குற்றவாளி சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் நடாத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கவனிப்பாரற்றுக் காணப்படும் எழுதுமட்டுவாள் பொதுச்சந்தை

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட எழுதுமட்டுவாள் பொதுச்சந்தையானது கவனிப்பாரற்றுக் காணப்படுவதாக பிரதேச மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர்.

யுத்தத்திற்குப் பின்பு மக்கள் மீளக்குடியேறியதன் காரணத்தினால் சந்தை இயங்க வேண்டும். எழுதுமட்டுவாள், முகமாலை, கிளாலி, இத்தாவில் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சந்தைப் பொருட்களை வாங்குவதற்கு 10 கிலோமீற்றர் அப்பால் உள்ள கொடிகாமத்திற்கும், 4 கிலோமீற்றர் அப்பாலுள்ள பளை சந்தைக்குமே செல்லவேண்டிய தேவை உள்ளது.

பெருந்தொகைப் பணம் செலவழித்து கட்டப்பட்ட சந்தைத் தொகுதியானது இயங்காமல் உள்ளது. மேலும் சந்தை வளாகத்தை பிற்பகலில் இளைஞர்கள் குழு விளையாட்டுமைதானமாக பயன்படுத்துவதாகவும், அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பொதுமக்களின் நன்மை கருதி, எழுதுமட்டுவாள் சந்தையினை இயங்க வைக்க சம்பந்தப்பட்ட பிரதேச சபையினர் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (130)

# மண்டபம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் பிரதேசத்திலுள்ள நெசவு மண்டபம் 17 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் ஊடாக இம் மண்டபம் புனரமைக்கப்பட்டு வருவதுடன் இதனுடன் நீர்த்தாங்கி மற்றும் மலசல கூடங்கள் என்பனவும் அமைக்கப்பட்டு வருகின்றது.

# சிக்கன கூட்டுறவு சமாசத்தின் நினைவுதின நிகழ்வும் கௌரவிப்பும்

(கைதடி)


யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாசம் நடாத்தும் அமரர் ஞானப்பிரகாசத்தின் 23ஆவது நினைவு தினமும் 2013 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர்களின் பிள்ளைகளைக் கௌரவித்தலும் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கங்களின் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண சபைத் தவிசாளர் சி.வி.கே.சிவஞானம் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் இம்மானுவேல் ஆனல்ட், கௌரவ விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், மக்கள்வங்கி பிராந்திய முகாமையாளர் கே.சுசிந்திரன், யாழ். மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம், யாழ். மாவட்ட கூட்டுறவு சபை முன்னாள் தலைவர் பெ.கனகசபாபதி இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி கிருஷ்ணபிள்ளை கமலராணி, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஸ்ரீக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வரவேற்புரையை இயக்குநர் சபை உறுப்பினர் ஆ.வ.கணேசலிங்கம் வழங்குவதுடன், நினைவுப் பேருரையை யாழ்.மாவட்ட கூட்டுறவு சபை செயலாளர் திருமதி வேத வல்லி செல்வரத்தினம் வழங்கவுள்ளார். (இ)

## பரமர் சங்கமம்



'அரைத்த மாவை அரைக்கிறது' எண்டால் உங்களுக்கு நான் விளக்கஞ் சொல்லத் தேவையில்லை நல்லாவே விளங்குமெண்டும் நினைக்கிறன். ஏனெண்டால் தமிழர் மத்தியில் இப்ப அறுபது வருசங்களுக்கும் அதிகமாக அதுதானே நடந்து கொண்டிருக்குது.

இலக்கியத்தையோ, நாடகமோ, சினிமாவோ, அரசியலைத தானும் எடுத்துக் கொண்டால் புதிதாகச் சிந்திக்கிறதைக் காணக்கிடைக்குதில்லை. பாரம்பரியம், பண்பாடு, மரபு என்றெல்லாம் பிதற்றிக் கொண்டு ஒருதர் என்ன செய்யினமோ அதையேதானும் செய்யிறதிலை இருந்து இன்னும் விடுபடேல்லை.

உதாரணமாக எம்முடைய அடிப்படைக்கலாசார முறைகளில ஆணோ, பெண்ணோ ஆடை அணிகளைச் செய்கிறார்களா? இப்ப தமிழன் ஆர் மற்றும் இனத்தவன் யார் என்று உந்த உடுபுடவைகளில் இருந்துகண்டு பிடிக்கேலாமல் கிடக்கு.

கொழும்பு போன்ற பல்கலாசாரக் கூறுகளைக் கொண்ட மக்கள் மத்தியில் சிங்களப் பெண்களைப். பார்த்தால் தமிழர் பெண்களைப் போன்றே சேலை கட்டுவதைப் பரக்கக் காணலாம். எம் தமிழ்ப்பெண்கள் சுடிதாருக்குள் வட இந்தியப் பெண்காளக மாறிவிட்டனர்.

பக்கத்து வீட்டுக்காரன் லீசிங்கில் தொலைக்காட்சிப் பெட்டி, மோட்டார் சைக்கிள், ஆட்டோ, டிப்பர் வாகனங்கள் எண்டு வாங்கிவிட்டால் மற்றவர்களும் விடுவதில்லை. அதனால் இண்டைக்கு வீதிகளிலை மனிதர் நடமாட முடியாமல் போய்விட்டது, எங்க பாத்தாலும் விபத்து...விபத்து..விபத்து.

அதுவும் இல்லாமல் கிடந்த காணி, நகை, பொருளை வித்து 'லீசிங்' எடுத்து அவற்றையும் துலைச்சுப் போட்டிருப்பதிலும் அரைத்தமாவை அரைத்துக் கெட்டுக் குட்டிச் சுவராப் போனது தான் மிச்சம்.

கந்தஷஷ்டி விரதம் முடிந்தால் சூரன் போர் வருடா வருடம் நடத்துகினம். அதைப் பற்றிய புகைப்படங்கள் பத்திரிகைகளில் அறம் புறமாக வெளிவந்திருந்ததைப் பாத்தன். அதே வில்லேந்திய சூரன் கம்பீரமாக காட்சி தந்தான். அவனை அழித்தொழித்ததாகக் கூறப்படும் முருகனைக் காண முடியவில்லை.

அதுகூட எனக்கு அந்தச் சிந்தனையைத்தான் ஊட்டியது. சூரனின் நாலைந்து தலைகள் கொய்யப்பட மீண்டும், மீண்டும் பல்வேறு முகங்களைப் பூண்டு கொண்டு மோதலுக்கு வருகிறான். என்றாலும் அவனது கைகளில் அந்த வில்லும் அம்பும் அகற்றப்படவில்லை.

இரண்டாயிரம் ஆண்டுகளையும் தாண்டி பல வருடங்கள் ஓடிவிட்டன. மனித சமுதாயத்தில் இன்னமும் போர் முடிவுக்கு வரவில்லை. அதனால் போரிடும் கருவிகளில் எத்தனையோ நவீன ஆயுதங்களைப் புகுத்தி விட்டார்கள்.

எனினும் சூரன் கைகளுக்கு அவை கொடுக்கப்படவில்லை என்னும் பொறி மின்னியது. சதா ஒரே மாதிரியான சூரவர்மர்களைப் பாத்துப் பாத்துச் சலிப்புத்தட்டி விட்டது. இது விடயத்தில் அரைத்த மாவை அரைப்பதை எப்பதான் கைவிடப்போகிறார்கள். சொல்லுங்க பாப்பம்....

## இளைஞர்கள் அட்டகாசம் அச்சத்தில் மாணவர்கள்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டுமைதானத்தை அண்டிச்செல்லும் வீதியில் மாலைவேளைகளில் நிற்கும் இளைஞர்கள் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படுவதாக அவ்வீதியால் பயணிப்போர் விசனம் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் வீதிக்கு குறுக்காக தமது துவிச்சக்கரவண்டிகளை நிறுத்தி பயணிகளுக்கு இடையூறு விளைவிப்பது மட்டுமன்றி, தனியார் வகுப்புக்களுக்கு சென்று வரும் மாணவிகளிடம் சேட்டை புரிவதாகவும் இதனால் அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாவதாகவும் அச்சஉணர்வுடனே பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாணவர்கள் மற்றும் பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அநாகரிகமான முறையில் செயற்படும் இவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது அவசியமானதாக உள்ளது என அப்பகுதியில் வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர். (114)

## முரசின் இன்றைய பலன்



(27.11.2013 புதன்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 11 ஆம் திகதி.
நவமி/அமிர்தம். பூரநட்சத்திரம் காலை 04.22 வரை.
பின் உத்தரம்.
இராகுகாலம் 12.12 - 01.42 வரை. சுபநேரம் 04.42 - 06.12 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** — கால நிலை சீரின்மையால் புதிதாக மனை அமைக்குந்திட்டத்தைக் கைவிடல், விளையாட்டு உத்தியோகத்தர்களுக்கான தேசிய தடகளப் போட்டியில் பங்குபற்றி விருதுகள் பெறல்.

**ரிஷபம்** — இந்தியாவின் தெய்வதலங்களுக்கு விஜயம் மேற்கொள்ளத்திட்டமிடல், வெளிநாட்டினின்றும் உறவுகள் வருகை தந்ததினால் குடும்பத்தில் மகிழ்ச்சி களைகட்டல்.

**மிதுனம்** — சம்பளப்பற்றாக்குறையினால் வெளியூர் பணியைக் கைவிட்டு தாயகம் திரும்ப முஸ்தீபு, தர்ம சங்கடமான சூழ்நிலையில் சிக்கித்தவிக்க நேரிட்டாலும் இறுதியில் சுமுக நிலை ஏற்படல்.

**கடகம்** — அச்சமூட்டிய நோயின் தாக்கம் குறைவடைவதாக நிம்மதியடைதல், மனம் பதகளிப்பில் ஆழ்ந்ததால் திட்டமிட்ட செயற்பாடுகளை ஒத்திவைத்தல்.

**சிம்மம்** — நோய் குணமடைந்ததால் மீண்டும் பணியில் சேர எண்ணப்பாங்கு மேலிடல், கொடுத்தவாக்குறுதியை நிறைவேற்றுமுகமாக அதிரடியாகச் செயற்பட்டு ஜெயமடைதல்.

**கன்னி** — பரீட்சை நெருங்குவதால் வீண்பொழுது போக்காது கருமமே கண்ணாக இருந்து செயற்படல், அன்புக்குரியவரின் நடத்தையைத் திருத்த வெளிக்கிட்டதால் பிரிவுத் துயர் தோன்றுதல்.

**துலாம்** — குருதியில் சீனிச்சத்து கூடியதால் நோய்வாய்ப்படும் அச்சநிலை ஏற்படல், வாடிக்கையாளர்களைக் கவர புது உத்தியைக் கையாண்டதால் வியாபாரம் களைகட்டுதல்.

**விருச்சிகம்** — உங்களைக் குடும்பத்தினர் புரிந்து கொள்ளாமல் வாக்குவாதத்தில் ஈடுபட முன்வருதல், வெளியூர் பயணம் பற்றிய சுப செய்திகேட்டு முன் ஆயத்தங்களில் விரைந்து செயற்படல்.

**தனுசு** — தொலைபேசி மூலம் பூர்வீகச் சொத்தினை விற்க உரையாடல் நடவடிக்கையில் ஈடுபடல், மக்களின் அலட்சிய மனப்பாங்கும் கோபதாபங்களும் அற்றுப்போனதால் ஆனந்தமடைதல்.

**மகரம்** — நிரந்தர குடியுரிமைக்கான அனுமதி பெற்ற மகனின் செய்தி கேட்டு இன்ப மடைதல், மஞ்சள் கோட்டிலும் விபத்து நடந்ததால் சட்டத்தின் பிடியில் சிக்குதல்.

**கும்பம்** — பெற்றோரின் புத்திமதியை அலட்சியஞ்செய்து வீண்பொழுது போக்க முற்பட்டதால் களேபரம் உருவாதல், விவாகப் பொருத்தம் பற்றி சோதிடர்களின் மாறுபட்ட கருத்தைக் கேட்டதால் தடுமாற்றம் ஏற்படல்.

**மீனம்** — முயற்சி திருவினையாக்கும் என்பதை மனதில் கொண்டு பயண முயற்சிக்கு மீண்டும் முயலுதல், மனை/காணி/வாகனம் விற்பனை செய்யும் நோக்கில் தரகர்களைச் சந்திக்க முயலுதல்.

# தொழிலுக்காக வெளிநாட்டிலுள்ள பெற்றோரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு மேற்கொண்டு தொழில் வாய்ப்புக் கருதி வெளிநாடு சென்றுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு வழங்கும் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2014ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள பின்வரும் தகைமைகளையுடைய மாணவ, மாணவிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

தரம் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் திட்டத்தில் தாய்,தந்தை 2010.08.21 இற்கும் 2013.08.21 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியகத்தில் பதிவு செய் திருத்தல் அல்லது பதிவின் செல்லுபடியான காலமான 2 வருடம் இக்காலப் பகுதிக்குட்பட்டிருத்தல் வேண்டும். மேலும் 2013 ஆம் ஆண்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து அரச பாடசாலை ஒன்றில் கல்வி கற்பவராக இருத்தல் வேண்டும். க.பொ.த(சா/த) புலமைப்பரிசில் திட்டத்தில் தாய், தந்தை 2009.12.01 இற்கும் 2012.12.01 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியகத்தில் பதிவுசெய்திருத்தல் அல்லது செல்லுபடியான காலமான 2வருடம் இக்காலப்பகுதிக்குட்பட்டிருத்தல் வேண்டும்.

2012ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரிட்சையில் கணிதம், பயிலும் மொழி (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்)மதம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன் கபொத உயர்தரம் கற்பதற்கான தகைமைகளுடன் ஒரே தடவையில் சித்தியடைந்து அரச பாடசாலையில் கற்பவராக இருத்தல் வேண்டும் உயர் கல்வி புலமைப் பரிசில் திட்டத்தில் தாய்/தந்தை 2009.08.01 இற்கும் 2012.08.01 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியகத்தில் பதிவு செய்திருத்தல் அல்லது பதிவின் செல்லுபடியான காலமான 2வருடம் இக்காலப்பகுதிக்குட்பட்டிருத்தல் வேண்டும்.

2012 ஆம் ஆண்டு உயர் தரப்பரீட்சையில் சித்தியடைந்து தற்போது அரச பல்கலைக்கழகம் ஒன்றில் முழுநேர உள்வாரி பட்ப் படிப்பு முதல் வருடத்தில் கற்பவராக. இருத்தல் வேண்டும்.

மாணவன், மாணவியின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி பெறுபேற்று சான்றிதழின் (பிரதி அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டது) தாய்,தந்தையின் கடவுச்சீட்டும்(உறுதிப்படுத்தப்பட்டது) மற்றும் மாணவன் ,மாணவியின் தேசிய அடையாள அட்டை, உயர் கல்வி பயில்வதற்கான சான்றிதழ், பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட மாணவர் அடையாளஅட்டை என்பன அத்தாட்சிப்படுத்தப்படவேண்டும்.ஒரு புலமைப்பரிசிலை பெறுவதற்கு ஒருதடவை மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை எதிர் வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் முகாமையாளர் (நலன்புரி) இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம்,இல 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த கொஸ்வத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். விண்ணப்பித்தல் கடித உறையின் இடதுபக்க மேல மூலையில் புலமைப்பரிசில் ஆண்டு 5,க.பொ.த (சா/த) உயர்தரம் 2014 என தமக்குரியதை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை w.w.w. slbfe.lk என்ற பணியகத்தின் இணையத்தளம் ஊடாகவும் தகவல்களை பெற்றுக்கொள்ளமுடியும்

# வவுனியா காளி கோவிலில் விக்கிரகங்கள் பெயர்த்து திருட்டு



(வவுனியா)

வவுனியா குளுமாட்டுச் சந்தியில் உள்ள காளி கோவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திருட்டுச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கோவிலின் பின்புறக் கதவு உடைக்கப்பட்டு மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த காளியின் விக்கிரகம் அகற்றப்பட்டு அதனுள இருந்த தங்கங்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் உண்டியல் உடைக்கப்பட்ட நிலையில் உண்டியலும் கோவிலில் இருந்து கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கோவிலின் மடப்பள்ளி உடைக்கப்பட்டு அதனுள் இருந்தும் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதுடன் மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த வாள்கள் வெளியில் வீசப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் நெளுக்குளம் பொலிஸில் செய்துள்ள முறைப்பாட்டின் பிரகாரம் ஆரம்பக்கட்ட விசாரணைகள் நெளுக்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு மேலதிக விசாரணைகள் வவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை சுமார் இரண்டு இலட்சம் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக தெரிவித்த ஆலய நிர்வாகத்தினர் அண்மையில் இக்கோவில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாகவும் இதற்கு முன்னரும் நீரப்பம்பிகள் மற்றும் உண்டியல்கள் களவாடப்பட்டு வந்ததாகவும் தெரிவித்தனர்.

# வெளியிட்டு வைக்கப்பட்டது "அற்புதப் பொன்மலர்" நூல்




(மானிப்பாய் )

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக்கழகத்தினதும் பொன்விழா நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிலையத் தலைவர் மகேந்திரன் சதீஸ்குமார் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு இந்நிகழ்வு கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் மணி மண்டபத்தில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக கல்விக் காருண்யன் லயன் இ.எஸ்பி நாகரட்ணம், கோண்டாவில் இராமக் கிருஷ்ண மகாவித்தியாலய அதிபர் சண்.வாமதேவன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை அதிபர் பஞ்சலிங்கம், யாழ். வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் மாணிக்கராஜா, யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் பேராசிரியர் தேவராஜா, சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், நல்லூர்ப் பிரதேசசபை தவிசாளர் வசந்த குமார், யாழ்.வலய ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர் திருமதி கலாவதி பிரகதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். இந் நிகழ்வில் குறித்த பிரதேசத்திற்கு சேவையாற்றியவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

50ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு 'அற்புதப் பொன்மலர்' என்னும் நூல் ஒன்றும் வெளியீட்டு வைக்கப்பட்டது. தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (48)

# ஆயுர்வேதம்

## தொண்டை வறட்சியும் மலச்சிக்கலும்

குடலின் வாயுவின் வறட்சியான குணம் இயற்கையாகவே வயோதிபத்தில் கூடுகிறது. இதனால் குடல் அசைவுகள் தடைப்பட்டு மலச்சிக்கலுக்குக் காரணமாகிறது. இவ்வாறானவர்கள் வறட்சிக்கு நேர் எதிரான நெய்ப்பு எனும் குணத்தை உள்ளும் புறமுமாகப் பெறவேண்டிய நிர்ப்பந்தமிருக்கிறது. வாயுவால் இறுக்கம் அதிகமாகி குழாய்கள் வழியே செல்பவை தடைப்படும் நிலையில், தோலில் வெதுவெதுப்பாக எண்ணெயைத் தடவி வந்தால், குடலில் ஏற்படும் தடையானது நீங்கிவிடும்.

மயிர்க்கால்களில் இணைந்துள்ள சிறு மயிரிழை போன்ற ரத்தக் குழாய்கள் உள்ளிருக்கும் அழுக்கை வெளிப்படுத்திவிட்டு எண்ணெய் தேய்த்தலின் மூலம் பெற்ற ஊட்டச் சத்தை உள்ளிழுத்து இரத்தத்துடன் கலக்கச் செய்கின்றன. வாய் வழியே செல்வதைவிடத் தோல்வழியே சென்று சேரும் நெய்ப்பானது எளிதானது, விரைவானதும்கூட. இதனால் குடலுக்குத் தேவையான மென்மையும், நெகிழ்ச்சியும், தடையின்மையும், சீரான வேகமும் கூடும். உட்புறமாக அதாவது வாய் வழியாக நெய்ப்பைக் குடலில் பெறுவதற்கு எள், பால், தேங்காய் போன்றவை உதவும். குடலின் அடிப்பாகத்தில் வாயுவினால் ஏற்பட்ட அதேவறட்சி போன்றதொரு நிலையை, தொண்டையிலும் வாயு ஏற்படுத்துகிறது. நெய் எண்ணெய்ப் பசையின்றி வறட்சியான பண்டங்களைச் சாப்பிடுதல், பச்சைக்கறிகாய்கள் போதுமான அளவு உணவில் சேர்த்துக் கொள்ளாமல் வெறும் சோறாகவே சாப்பிடுதல், பால், பழம், தண்ணீர் சேர்த்துக் கொள்ளாதது, பக்குவம் சரியாக ஆகாத உணவு, உலர்ந்து போன காய்கள், மிளகாய், மிளகு, பெருங்காயம் போல குடலில் இருக்கும் நீரின் அம்சத்தை சுண்ட வைக்கும் உணவுகள் போன்றவை தொண்டை வறட்சிக்குக் காரணமாகலாம்.

மலச்சிக்கல் மற்றும் தொண்டை வறட்சியைப் போக்க - காலையில் 5 மணிக்கு ஒரு பெரிய டம்ளர் (சுமார் 500 மி.லீ.) வெந்நீர் குடிக்கவும். காலையில் 7 மணிக்கு 2 வாழைப் பழங்களை உருக்கிய நெய்யில் தோய்த்துச் சாப்பிட்டு 1 டம்ளர் (சுமார் 300 மி.லீ.) காய்ச்சிய பால் குடிக்கவும். மு.ப 10 மணிக்குள் சூடான சோற்றில் நெய்விட்டுப் பிசைந்து பச்சைக் காய்கறிகள் வேக வைத்து பருப்பு ரசம், விளாவிய மோர் சேர்த்துச் சாப்பிடவும். பகல் 1 மணிக்கு தோடம்பழம், திராட்சை, தக்காளி, சீமையத்திப் பழம், அப்பிள் பழம் இவற்றில் கிடைத்த பழங்களைச் சாப்பிடவும். மேலே கொஞ்சம் வெந்நீர் அருந்தவும்.

மாலையில் இளநீர் சாப்பிடவும். இரவில் சூடான பாலை சோற்றுடன் கலந்து சாப்பிட நல்லது அல்லது வேக வைத்த கறிகாய் கூட்டுச் சேர்த்து குழைத்த அன்னம் சாப்பிடலாம். இரவு படுக்கும் முன் 1 டம்ளர் வெந்நீர் அருந்தவும்.

ஆயுர்வேத மருந்துகளில் ஸகுமாரகிருதம், ஸகுமார லேகியம் இவை இரண்டு மருந்துகளும், நெய்யும், ஆமணக்கெண்ணெய்யும் வாயுவின் வறட்சியைப் போக்கக் கூடிய மருந்துகளையும் சேர்த்துத் தயாரிக்கப்படுபவை. மலச்சிக்கலுக்கு நித்திய உபயோகத்துக்கு உத்தமம். தொடர்ந்து சாப்பிடலாம். திரிபலா சூரணம் 3 -5 கிராம் அளவு இரவில் படுக்கும் முன் கொஞ்சம் நெய், தேன் கலந்து சாப்பிடவும். அதன் பிறகு சூடான அரை கிளாஸ் பால் சாப்பிட, மலப் பிரவிருத்தியை ஒழுங்காகச் செய்யும், கண்களுக்கும் நல்லது.

நீரிழிவு நோய் போக்க...

- நீரிழிவு நோய் உள்ளவர்கள் நெல்லிக் கனிச் சாற்றை இனிப்பு சேர்க்காமல் தினமும் சாப்பிட்டு வர படிப்படியாய் குறைந்து குணமாகும்.
- அடிக்கடி முருங்கைக் கீரையைச் சாப்பிட்டால் நீரிழிவைக் கட்டுப்படுத்த முடியும்.
- செம்பருத்திப் பூ கஷாயத்தில் தேன் சேர்க்காமல் மிளகு சேர்த்துப் பருகினால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும்.
- ஆரைக் கீரை (நீராரை) சாப்பிட்டால் நீரிழிவு நோய் குறையும்.
- கோவைச் செடியின் வேரில் சாறு எடுத்து சாப்பிட்டால் நீரிழிவு நோயைத் தீர்க்கும்.
- கொன்றைப் பூவை 200 கிராம் எடுத்து நன்கு அரைத்து மோரில் கலக்கி குடித்து வந்தால் நீரிழிவு நோய் குணமாகும்.
- வெள்ளை மருதம் பட்டைக்கு நீரிழிவு நோயைத் தணிக்கும் ஆற்றல் உண்டு.
- இரத்தத்தில் உள்ள இனிப்பையும் சிறுநீரில் உள்ள இனிப்பையும் வெந்தயம், வெந்தயக் கீரை குணமாக்கும்.
- முருங்கை இலை, எள்ளு பிண்ணாக்கு, உப்பு, மிளகாய் அனைத்தும் அவித்துச் சாப்பிட நீரிழிவு நோய் குணமாகும்.
- கோவைக்காய் பொரியல் செய்து சாப்பிட்டால் இரத்தத்தில் உள்ள இனிப்பின் அளவு குறையும்.

('மரபு வழி மருத்துவம்' என்ற நூலிலிருந்து)

# தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி இறக்குமதி செய்யத் திட்டம்

இலங்கையில் கடந்த ஆண்டில் நிலவிய வறட்சி காரணமாகவும் தேங்காய் பொருட்களின் ஏற்றுமதிக்கான கேள்வி அதிகரித்துள்ளதாலுமே தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இலங்கை தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தென்னை உற்பத்தி மாவட்டங்களில் கடந்த ஆண்டில் 8 மாதங்களாக நிலவிய வறட்சி காரணமாக தேங்காய் உற்பத்தி குறைந்தது என்பதைவிட உற்பத்தியான தேங்காய்களின் அளவு வெகுவாக சிறுத்துள்ளது. இதனால் ஒரு தொன் கொப்பரைத் தேங்காய் உற்பத்திக்குத் தேவையான தேங்காய்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இலங்கையில் ஆண்டுக்கு 2,700 மில்லியனாக உள்ள தேங்காய் உற்பத்தியை 2016 ஆம் ஆண்டாகும்போது 3,650 மில்லியனாக அதிகரிக்கும் இலக்கில் கடந்த சில ஆண்டுகளாக அரசாங்கம் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தது. ஆனால் ஏற்கனவே இருந்ததை விட 300 மில்லியன் அளவுக்கு தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் ஜயந்த குணதிலக்க தெரிவித்துள்ளார்.

எனினும், அண்மைய காலங்களில் நாட்டின் பல பாகங்களிலும் 6 முதல் 7 மில்லியன் அளவுக்கு புதிய தென்னம்பிள்ளைகள் நடப்பட்டுள்ளதால் இன்னும் 4 ஆண்டுகளில் அதன் பலாபலன்களை எதிர்பார்க்க முடியும்.

2016 ஆம் ஆண்டுக்குள் 3,650 மில்லியனாக தேங்காய் உற்பத்தியைப் பெருக்க அரசு திட்டங்களை வகுத்துள்ளது.

குறைந்த மழைவீழ்ச்சி அதிகரித்த வெப்பநிலை காரணமாக பாதிக்கப்பட்ட தேங்காய் உற்பத்தி அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதமளவில் முன்னேற்றமடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.


பாரம்பரியமாக தென்னை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுவந்த முக்கோண வலயமான புத்தளம், குருநாகல், கம்பஹா ஆகிய மாவட்டங்களில் வேறு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் காரணமாக தென்னைப் பயிர்ச்செய்கைக்கான நிலப் பரப்பு குறுகிவிட்டது.

அரசாங்கம் தற்போது வடக்கு கிழக்கு பிரதேசங்களிலும் தென்னைப் பயிர்ச் செய்கையை விஸ்தரிக்கும் வேலைத்திட்டங்களில் இறங்கியுள்ளது.

இலங்கையில் 70 வீத தேங்காய் பாவனை உணவுக்கானது, மிகுதி 30 வீதம் தான் தொழிற்துறை தேவைக்கானது.

உள்நாட்டு தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காகவும் ஏற்றுமதிக்கான துருவிய தேங்காய், தேங்காய்ப் பால்மா போன்ற தயாரிப்புகளுக்காகவும தான் இந்த 30 வீத தேங்காய்கள் தேவைப் படுகின்றன.

வெளிநாட்டிலிருந்து வரும் மரக்கறி எண்ணெய் இறக்குமதியை குறைக்கவும் உள்நாட்டு



தேங்காய் எண்ணெய் விலையை மக்களுக்கு வசதியான அளவுக்கு வைத்திருக்கவுமே கொப்பரைத் தேங்காய்களை இறக்குமதி செய்யும் திட்டத்தை அமைச்சு முன்வைத் திருக்கின்றது என்றார்.

இதேவேளை, சுமார் 30,000 மெட்ரிக் தொன் கொப்பரைத் தேங்காய்களை இறக்குமதி செய்வதற்கு வரிச்சலுகைகளை கோரி அமைச்சரவை பத்திரத்தை தென்னை அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பக்குமார முன்வைத்துள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயர்வடையாது

### உள்ளக வர்த்தகத்துறை அமைச்சர்

பண்டிகை காலத்தில் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் உயர்வதற்கு அரசாங்கம் இடமளிக்காது என்று கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தகத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

குருணாகலை பகுதியில் புதிய சதோச விற்பனை நிலையத்தை நேற்று முன்தினம் திறந்துவைத்து உரையாற்றியபோதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

மக்கள் மத்தியில் பொருட்கள் விலையேற்றம் தொடர்பில் வதந்திகள் பரவி வருகின்றது. அதுபற்றி கவனம் செலுத்தத் தேவையில்லை.

வரவு செலவுத் திட்டத்திற்கு பின்னர் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்வடையும் என்று சிலர் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

அதில் எந்தவித உண்மையும் இல்லை இதுதவிர, திடீரென பால் மாக்களின் விலைகளை உயர்த்துவதற்கு பால்மா நிறுவனங்களுக்கு இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பூநகரி கடற்றொழிலாளர்களுக்கு வெளி இணைப்பு இயந்திரங்கள்

(பூநகரி)

பூநகரி கடற்றொழிலாளர்களுக்கு 50 வீத மானியத்தின் 50 வெளியிணைப்பு இயந்திரங்கள் உட்படப் பல்வேறு உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தில் நடைபெற்ற நிகழ்வில் மேலும் 30 பேருக்கு தலா 80 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளும் 20 பயனாளிகளுக்கு ஜி.பி.எஸ். கருவிகளும் வழங்கப்பட்டது.

மொத்தம் 100 பயனாளிகளுக்கு இவ் உதவிகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு வெளி இணைப்பு இயந்திரமும் 3 இலட்சம் ரூபா பெறுமதி கொண்டவை. இவ் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பூநகரிப் பிரதேச செயலர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி



மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர்கள் ஐ.எல்.ஒ. நிறுவன அலுவலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## பெண் பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் கடும் வீழ்ச்சி

நாட்டின் பெண் பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய பாலியல் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவினால் இந்த ஆண்டு நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் பெண் பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கை 35000 முதல் 45000 மாகக் காணப்பட்டது. எனினும், இந்த ஆண்டில் பெண் பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கை 20000 மாக வீழ்ச்சியடைந்துள்ளது. பாலியல் தொழில் மையங்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புக்கள் தேடுதல் காரணமாக எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பெண் பாலியல் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் வீழ்ச்சி, எயிட்ஸ் நோய்த் தொற்றுப் பரவுவதனை கட்டுப்படுத்தும் எனக் குறிப்பிடப்படுகிறது.

## வெங்காய விதை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

எதிர்காலத்தில் வெங்காய விதை உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தேசிய விதை நடுகை பொருட்களின் அபிவிருத்தி நிலைய மேலதிக பணிப்பாளர் எஸ்சி.வணிக சூரிய தெரிவித்துள்ளார்.

தேசிய சந்தையில் உள்நாட்டு பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்தமை இதற்கு காரணம் ஆகும்.

பெரிய வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளமையால் விவசாயிகள் தமது அனைத்து அறுவடைகளையும் விற்பனை செய்வதற்கு தயாராகியுள்ளனர்.

இதனால் குறுகியகால பயிற்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் எனவும், அடுத்த போகத்திற்கு வெங்காய விதைகளை விவசாயிகள் வைத்துக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் விதை உற்பத்தியை மேம்படுத்தும் நடவடிக்கைகளை விவசாய அமைச்சு மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியன முன்னெடுத்துள்ளன.

தற்போது சந்தையில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளமையால், அடுத்த போகத்தின்போது வெங்காயத்திற்கு அதிக கேள்வி நிலவும் எனவும் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒஸ்மானியாக் கல்லூரி பொன்விழா ஏற்பாடுகள்

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன்விழா எதிர் வரும் டிசம்பர் 6, 7, 8 ஆம் திகதிகளில் மிகவும் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

முதல்நாள் நிகழ்வாக கல்லூரி மாணவர்களின் கல்விக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. இக் கண்காட்சியில் மாணவர்களால் தயாரிக்கப்பட்ட கல்விச் செயற்பாடுகளின் விளக்கப்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வில் விளையாட்டுப் போட்டிகளும், பொன்விழா மலர் வெளியீடும், ஆசிரியர்கள் கௌரவிப்பும், விசேட உரைகளும், மாணவர்களின் இஸ்லாமிய கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.


மூன்றாம் நாள் நிகழ்வாக மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் முன்னாள் ஆசிரியர்களின் பேச்சுக்களும், பெண்களுக்கான கௌரவிப்பும் இடம்பெறும். இன்றைய நாள் நிகழ்வில் பெண்கள் மட்டும் கலந்து கொள்ளலாமென தெரிவிக்கப்படுகின்றன. (105)




ஈ சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணிக்கு யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டல் மண்டபத்தில் நடைபெற்றபோது சான்றிதழ் வழங்குவதையும், மாணவிகளின் கலை நிகழ்வையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (105)

39. 2 லீற்றர் குளிர்பானத்தை 4 பிள்ளைகளுக்குச் சமனாகப் பங்கிடும் போது ஒரு பிள்ளைக்குக் கிடைக்கும் பானத்தின் அளவு எத்தனை மில்லிலீற்றர்? ..........................................


40. 12m நீளமுடைய துணியை ஐந்து சமமான துண்டுகளாக வெட்டும் போது ஒரு துண்டின் நீளம் யாது?
..........................................


41. 

இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?
..........................................


42. 

இவ்வுருவின் சுற்றளவு யாது?
..........................................

43. 
மின் கம்பியொன்றின் உச்சியிலிருந்து 1m 25cm கீழே மின் குமிழ் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. மின்கம்பத்தின் உயரம் 7m ஆகும். தரை மட்டத்திலிருந்து மின் குமிழ் பொருத்தப்பட்டுள்ள உயரத்தைக் காண்க.
..........................................

44. 
அருகில் உள்ள பெட்டியை நிரப்புவதற்கு இன்னும் எத்தனை சதுரக் குற்றிகள் தேவை?
..........................................

45. வரைபை நன்றாக விளங்கிக் கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.




1. வரைபிலே எதனைப் பற்றிய விபரம் காட்டப்பட்டுள்ளது?
..........................................
2. எந்த ஆண்டுகளில் அதன் உற்பத்தி 180இற்கு மேற்பட்டது? ..........................................
3. எந்த ஆண்டு அது ஆகக் கூடுதலான உற்பத்தி செய்யப்பட்டுள்ளது? ..........................................
4. 1985இலே 190 ஆகாய விமானங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. எனின், அவ்விபரத்தை வரைபில் குறித்துக் காட்டுக.

46. கீழே கதைப்படம் ஒன்று உள்ளது. அதனை அவதானித்து கருத்து நிறைந்த வாக்கியங்களாக பொருத்தமான எழுவாய் பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்களை எழுதுக.



1. ..........................................
2. ..........................................
3. ..........................................
4. ..........................................
5. ..........................................
6. ..........................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
நேரம் 1-15 நிமிடம்

# கல்வி முரசு



✱ கீழே தரப்படும் பாடலை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. அல்லும் பகலும் நல்ல
ஆர்வத்தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்

2. இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

3. பலவும் படித்து நீங்கள்
பட்டம் பெற்ற போதும்
உலகத்தோடு ஒத்தே
ஒழுகிக் கொள்ள வேண்டும்.

4. கன்றை நினைத்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்

5. பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமந் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்

01. மேலுள்ள பாடலைப் பாடியவர் யார்? ..........................................
02. பாடலில் வந்துள்ள இணைமொழிச் சொல் யாது? ..........................................
03. பாடலில் வந்துள்ள உவமைச் சொல் யாது? ..........................................
04. உலகத்தில் பெரிய தருமம் யாது? ..........................................
05. முன்னிலைப் பன்மைச் சொல் யாது? ..........................................
06. ஐந்தாவது பாடலில் முதல் இரு அடிகளும் உணர்த்தும் பழமொழிகள் யாது? ..........................................
..........................................
07. "ஆர்வம்" என்பதன் ஒத்த கருத்துச் சொல் யாது? ..........................................
08. "உலகத்தோடு ஒத்து ஒழுகல்" என்றால் என்ன? ..........................................

09. கீழே தரப்படும் மரபுத் தொடர்களின் பொருளைக்கீழே எழுதுக.
i) வாட்ட சாட்டம் - ..........................................
ii) பொடி வைத்துப் பேசுதல் - ..........................................
iii) இலகுகாத்த கிளி - ..........................................

10. கீழே தரப்படும் சொற்றொடர்களுக்குப் பொருத்தமான பழமொழிகளை எழுதுக.
i) நற்புகழ் மங்குவதில்லை - ..........................................
ii) திருப்திப்படாத மனம் - ..........................................

11. கீறிட்ட இடங்களில் பொருத்தமான எழுத்தை எழுதிப் பூரணப் படுத்துக.
i) கு........ந்தைகள் நி........க் காட்சிகளைக் கண்டு க........த்தனர்.
ii) ம......... பெய்யும் கா........ங்களில் ஆற்றில் வெ................ம் பெருகி ஓடும்.
iii) மெ.........குவர்த்தியின் வெ.........ச்சத்தினால் இரு......... வி.........கியது.

12. கீழே தரப்படும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக.
i) வெக்கம் - .................... ii) கோடாலி - .................... iii) இளனி - ....................

13. கீழே தரப்படும் கணினி தமிழ்க் கலைச் சொற்களுக்குரிய பொருத்தமான ஆங்கிலக் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
i) விசைப் பலகை - ..........................................
ii) இறு வட்டு - ..........................................
iii) எழுத்துரு - ..........................................

14. கீழே தரப்படும் சிங்கள உரையாடலுக்குரிய தமிழ்க் கருத்தை தமிழில் புள்ளிக் கோட்டில் எழுதுக.
வினா: ஒயா(G)கே (G)கெ(DH)தற கவு(dh)த இன்னே?

.......................................................................................

விடை: ம(G)கே (G)கெதற அம்மாய், தாத்தாய், மமய் இன்னவா.

.......................................................................................


✱ 15 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

15. பின்வருவனவற்றுள் மிகச் சிறிய இலைகளைக் கொண்ட தாவரம் எது?
1. அகத்தி 2. பொன்னவரை 3. புளி 4. கீழ்க்காய் நெல்லி

16. எதிர் எதிரான இலையமைப்பைக் கொண்ட தாவரம்
1. கொய்யா 2. அன்னமுன்னா 3. மா 4. அலரி


17. கம்பிச் சுருள் போன்ற தந்துகளைக் கொண்ட தாவரம்
1. பாகல் 2. காக்காட்டான் 3. சாத்தாவாரி 4. மிளகு

18. கீழே தரப்படும் முகங்களில் மகிழ்ச்சியான தோற்றத்தின் கீழ்க் கோடிடுக.




19. கீழே தரப்படும் பயிற்சிகளில் மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடு அல்லாதது.
1. தியானப் பயிற்சி 2. மூச்சுப் பயிற்சியில் ஈடுபடல் 3. சூரிய நமஸ்காரம் 4. தனிமையில் இருத்தல்

20. பின்வருவனவற்றுள் மரக்கறிப்பயிர்களின் இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணியின் கீழ்க் கோடிடுக.




21. புவியிலிருந்து பார்க்கக் கூடிய கோள் எது?
1. செவ்வாய் 2. சந்திரன் 3. சூரியன் 4. வெள்ளி

22. 
அருகிலுள்ள படத்தில் சந்திரனின் தோற்றம் குறிப்பது
1. அமாவாசை தினம்
2. பூரணை தினம்
3. இருத்தை தினம்
4. அட்டமி தினம்

23. நெல் வயல்களில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பூச்சி பீடைகளை அழிப்பதற்காக பயன்படுத்திய பாரம்பரிய முறை?
1. நெல்வயலில் முசுறு எறும்பைப் போடுதல் 2. கிருமி நாசினி தெளித்தல்
3. பறவைகளை வளர்த்தல் 4. நஞ்சூட்டல்

24. தாக்கப்பட்டவரின் உடலினுள் கொடுக்கு கழட்டிவிட்டு நஞ்சுப் பதார்த்தத்தையும்இட்டுச் செல்லும் பிராணி எது?
1. மட்டைத் தேள் 2. தேள் 3. புலிமுகச் சிலந்தி 4. குளவி

25. 
கண்ணாடிக் கிளாஸ் ஒன்றை நீரால் நிரப்பி அதன் வாயை காட்போட் அட்டையினால் மூடி பின்னர் காட்போட் அட்டையை கையால் பிடித்துக் கொண்டு கிளாஸை தலைகீழாகப் பிடித்து கையை எடுக்கும் போது, காட்போட் அட்டை
1. காட்போட் அட்டை கீழே விழும் 2. உடனே கீழே விழும்
3. காட்போட் அட்டை கீழே விழாது 4. மெதுவாக கீழே விழும்

26. விற்றமின் B அதிகமாக உள்ள உணவு?
1. சிவப்பரிசித் தவிடு 2. கருவாடு 3. சோயாஅவரை 4. பலாக்காய்

27. கடவுச் சீட்டு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு செல்ல வேண்டிய திணைக்களம்
1. பொலிஸ் திணைக்களம் 2. மாவட்ட செயலகம்
3. குடிவரவு குடியகல்வுத்திணைக்களம் 4. பிரதேச செயலகம்



28. மாணிக்க கங்கை ஆற்றுடன் தொடர்புபட்ட வணக்கஸ்தலம் எது?
1. தலதா மாளிகை 2. சிவனொளி பாத மலை 3. கதிர்காமம் 4. உகந்தை

29. பின்வருவனவற்றுள் மின்னைச் சோதித்தறியும் உபகரணத்தின் கீழ்க் கோடிடுக.



30. மருந்துக் கடைகளில் மருந்துகளை வாங்கும் போது கவனிக்க வேண்டியவை?
1. உற்பத்தி செய்த ஆண்டு 2. உற்பத்தி செய்த திகதி
3. காலாவதியாகும் திகதி 4. மருந்தின் நிறை / அளவு

31. 
படத்தில் காணப்படுபவரின் கழுத்தில் கழலை தோன்றுவதற்கான காரணம்
1. அயடின் குறைபாட்டினால் 2. புரதக்குறைபாட்டினால்
3. விற்றமின் D குறைபாட்டினால் 4. விற்றமின் E குறைபாட்டினால்

32. மண்ணினுள் புதைத்து வைத்து நீண்ட காலம் பயன்படுத்தக் கூடியது எது?
1. கத்தரிக்காய் 2. தேசிக்காய் 3. வாழைக்காய் 4. புளியங்காய்

33. பின்வருவனவற்றுள் சவர்க்காரம் விரைவாகக் கரைவது
1. குளிர்ந்த நீரில் 2. உப்புநீரில் 3. மழைநீர் 4. சுடுநீர்

34. உடம்பில் ஏற்படும் கட்டி போன்ற நோய்களைக் குணப்படுத்துவதற்கு அரைத்துப் பூசக்கூடிய இலை எது?
1. குப்பைமேனி 2. நொச்சி 3. வாகை 4. திராய்


35. திடீரென துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்கும் சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டியது
1. ஓடுதல் 2. நிலத்தில் படுத்தல் 3. பதுங்குதல் 4. கூட்டமாகச் சேர்ந்து இருத்தல்

36. கீழே தரப்படும் தாவரங்களின் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.
**(அத்தி, கொவ்வை, கருநொச்சி, கொன்றை, ஆடாதோடை, சீந்தில்கொடி)**




I. (............................) II. (............................) III. (............................) IV. (............................) V. (............................)

37. கீழே தரப்படும் பொருட்களை அவதானித்து கேட்கப்படும் வினாவுக்கான பொருத்தமான உபகரணத்தின் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.



1. கப்பல், தோணி, வள்ளம் போன்றவற்றை கடலில் நிறுத்தி வைக்கப் பயன்படும் உபகரணம் (............)
2. கம்மாலையில் பழுக்கக் காய்ச்சிய இரும்பினை எடுக்க உதவுவது (............)
3. திசையை அறியப் பயன்படும் சாதனம் (............)
4. பால் ரின், மீன் ரின் போன்றவற்றை வெட்டித் திறக்கப் பயன்படும் உபகரணம் (............)

38. கீழே தரப்படும் பிராணிகளை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.



1. ஒட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறுவது (.................)
2. இடத்திற்கு இடம் தனது நிறத்தை மாற்றக்கூடியது (.................)
3. வேகமாக ஓடக்கூடியது (.................)

# வவுனியா விகாராதிபதிக்கு எதிராக மற்றொரு சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடு

வவுனியா அட்டமஸ்கட விகாராதிபதிக்கு எதிராக 12 வயது சிறுவன் ஒருவன் நேற்று நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை செய்துள்ளான்.

வவுனியா அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தில் சிறுவர் துஸ்பிரயோகம் இடம்பெற்றதாக சிறுவர்கள் வழங்கிய முறைப்பாட்டையடுத்து அதன் முகாமையாளரான விகாராதிபதி கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையில் 12 வயது சிறுவன் ஒருவன் தனக்கும் துஸ்பிரயோகம் செய்யப்பட்ட தாகவும் தான் சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளதாகவும் முறைப்பாட்டினை மேற்கொண்டுள்ளான்.

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து வவுனியா பொலிஸிலும் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் சிறுவன் கருத்துத் தெரிவிக்கையில்,

நான் குடும்பநிலை காரணமாக அட்டமஸ்கட சிறுவர் இல்லத்தில் மூன்று வருடங்களாக தங்கி இருந்தேன். நான் விளையாடிக் கொண்டிருந்த போது பழைய ஆணி இருந்த கட்டை ஒன்றினால் எனக்கு அடித்தமையால் காலில் காயம் ஏற்பட்டது.

காலுக்கு மருந்து கட்டாமல் கட்டுப் போட்டார்கள். அதன் பின் என் கால், கை எல்லாம் புண் வந்துவிட்டது. இப்பொழுதும் அது மாறவில்லை. எனக்கு தலையிலும் அடித்து பெரிய காயம் எற்பட்டது.

தேங்காய் பால் குடிக்க தந்தார்கள். அதன் பின் அது மாறி விட்டது. என்னைப் போல என்னுடைய அண்ணாவுக்கும் அடிப்பார்கள். அவருக்கும் காயங்கள் இருக்கின்றன. எங்கள் இல்லத்தில் இருக்கின்றது.

இருண்டு பேர் என்னை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவார்கள். இதே மாதிரி மற்றவர்களும் செய்வார்கள் என்றார்.

## கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதியில் தனியார் பேருந்து சேவை

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக வீதியில் தனியார் பேருந்து போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேல்மாகாண போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டது.

தற்போது கொழும்பில் இருந்து நீர்கொழும்பிற்கு 12 பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதாக மாகாண போக்குவரத்து அமைச்சர் உபாலி கொடிகார தெரிவித்துள்ளாா. எதிர்வரும் காலங்களில் மேலும் சில பேருந்துகள சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் வசதிகளை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண போக்குவரத்து அமைச்சர் உபாலி கொடிகார மேலும் தெரிவித்துள்ளார்.




## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

பிறந்த ஆண்டு :- ..........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

# யுத்த சாட்சியங்களாக உலாவரும் மனிதர்கள்

## இவர்களின் வாழ்க்கையை வளம்படுத்தும் செயற்றிட்டம்

(நேற்றைய தொடர்ச்சி...)



### துண்டிக்கப்பட்ட அவயவத்தில் காலுறை, கையுறை அணிவதன் அவசியம்

சாதாரணமாக சப்பாத்துக்கு காலுறை அணிந்து கால், கைகளை பாதுகாப்பது போன்று துண்டிக்கப்பட்ட அவயவங் களின் பாதுகாப்பிற்கு மேற்படி உறை கள் அவசியம். இவை அநேகமாக பாமசியில் விற்கப்படும்.

இவ் உறைகள் துண்டிக்கப்பட்ட சருமத்திற்கு பாதுகாப்பும் செயற்கை அவயவங்கள் அணியும் போது கால் கை தோலில் சிராய்வுகள் வராமல் இருப்பதற்கும் வியர்வையை உறிஞ்சி எடுப்பதற்கும் காற்றோட்டம் வழங்குவதற்கும் அவயவத்திற்கு இதமாகவும் இருக்கும்.

> வடக்கில் நடைபெற்ற யுத்தம் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. எனினும் யுத்த காலத்தில் பொது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் ஏராளம் அதிலும் குறிப்பாக உடல் அவயவங்களை இழந்தவர்கள் இன்னமும் சந்தித்துவரும் துன்பங்கள் ஏராளம்.
>
> அவர்களின் துயரம் துடைக்க மன்னாரில் இயங்கும் 'மெத்தா' நிறுவனம் முன்வந்திருக்கிறது. செயற்கை அவயவங்கள் பொருத்தும் சேவையில் ஈடுபடும் இந்த நிறுவனம் செயற்கை அவய பாவனையாளர்களுக்கான ஆலோசனைகளை வழங்க முன்வந்துள்ளது.

செயற்கை அவயவங்கள் அணியும் போது காலுறை, கையுறை அணிவது வழமையான சம்பிரதாயம் ஆகும். தொடர்ந்து ஒரு உறை அணியும் போது சில சமயம் உங்கள் உடல் மெலிந்து சுருக்கம் ஏற்பட்டால் செயற்கை அவயவத்தின் பிடிமானத்திற்காக 1-3 உறைகளை வைத்தியரின் ஆலோசனையின் பெயரில் பாவிக்கவும்.

நீங்கள் அணியும் உறைகளின் அளவுகள் கால்கள் அளவெடுக்கும் போது வைத்தியரினால் அளவெடுக்கப்படும். இவ்வுறைகளை நாளாந்தம் கழுவி உலர வைத்து அணியவும். உங்களிடம் பழைய பாவித்த உறைகள் பாவிப்பில் இருப்பின் அவற்றையும் அவதானமாக கழுவி பாவிக்கவும்.

உங்கள் உறைகள் கிழிந்து தொய்வு ஏற்பட்டால் தையல் முடிச்சுகள் காணப்பட்டால் ஏனெனில் அவை தோலில் தழும்புகளை ஏற்படுத்தும்.

மூன்று உறைகளுக்கு மேல் அணிவதாயின் உங்கள் வைத்தியரை சந்தித்து புதிய பாதத்திற்கு (socket) அளவு கொடுத்தல் வேண்டும்.

### ஊனமுற்றோர் தமது நாளாந்த கடமையின்போது கவனிக்க வேண்டியது

(Occupational Therpy)

வழமையாக ஊனமுற்றவர்களுக்கு சேவை புரிவதற்கு தொழில் சார் உத்தியோகத்தர் ஒருவர் கடமையாற்றுவார். (o.t) இவர் உங்களின் காரியாலயம், வீட்டில் நீங்கள் நடமாடுவதற்கு உரிய ஆலோசனையை வழங்குவார்.

உங்களின் பாதிப்பு உடல் இயக்கத் தன்மை பொறுத்து சில சமயம் சக்கர நாற்காலிகள் வழங்கப்படும். இவற்றின் பாவனை சம்மந்தமாக நீங்கள் பின் நோக்கி நகர்த்தவும், சாய்வு தளத்தில் படிகளில் ஏறவும், இறங்கவும், சக்கரங்கள் இயங்காமல் தடுப்பதற்கும், வாகனங்களில் ஏறுவதற்கும், இறங்குவதற்கும், கதிரையிலிருந்து கட்டிலுக்கு மாறுவதற்கும் கற்றுத்தரப்படும்.

நீங்கள் உங்கள் வீட்டு நிலவரத்தையும் வீட்டில் உள்ளவர்களின் உதவி புரியும் தன்மையையும் தொழில் சார் சிகிச்சை உத்தியோகத்தருக்கு கூறினால் அவர் மேலதிக ஆலோசனைகளையும் வழங்குவார்.

சில சமயம் உங்களுக்கு ஆடை அணிவதற்கும் உணவு உண்பதற்கும் குளிப்பதற்கும் மலசலம் கழிப்பதற்கும் சமைப்பதற்கும் பிள்ளைகளை கவனிப்பதற்கும் உங்கள் தொழிலில் ஈடுபடுவதற்கும் கடினமாக இருப்பின் -

01) உங்களுக்கு தேவையான பொருட்களை கையிற்கு எட்டிய தூரத்தில் வைத்திருத்தல் (உணவுக்கோப்பைகள், குடிநீர், தொலைபேசி, தொலைக்காட்சி, கணனி) இவை உங்கள் நடமாட்டத்தினால் இழக்கப்படும் சக்தியை குறைக்கும்.

02) உங்கள் செயற்கை அவயவத்திற்கு ஏற்றதாக உடைகள் தைக்கப்பட்டு அணியப்படுதல் (காற்சட்டைகள் செயற்கை அவயவத்திற்கு ஏற்றதாக சற்று பெரிதாக இருத்தல் வேண்டும்). கைகள் இல்லாதவர்கள் ஏனையவரின் உதவியுடன் உடைகள் அணிதல் வேண்டும்.

03) ஆடைகள் துவைக்கும் போது வசதியாக ஒரு உயரமான ஷ்ரூல் (stool) அமர்ந்திருந்து துவைத்தல் இவை உங்கள் களைப்பை குறைக்கும்.

04) குளிக்கும்போதும் ஆடைகள் கழற்றும் போதும் ஒரு ஷ்ருலிலிருந்து குளித்தல் தேவையான பொருட்கள் (சுடு நீர், துவாய், சோப், ஆடைகள்) அருகில் இருத்தல் நலம்.

05) மலசல கூடத்தில் மேலதிக கைபிடி இருத்தல் விசேட மலசலகூட கதிரை பாவித்தல் நலம்.

06) நடமாடும் தரை பளிங்கு தரையாய் இருப்பின் அவதானம் தேவை. உங்கள் கால் பாதம் நடமாடும் போது கால், துடைப்பான்களில் தொலைபேசி வயர்களில் கிழிந்த தரை விரிப்பான் களில் இடராதபடி பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும்.

07) மேலதிக தளபாடங்கள் வீட்டில் காரியாலயத்தில் உங்களுக்கு இடராக இருக்கக்கூடும் எனவே தேவையற்றதை தவிர்கவும். நீங்கள் இருப்பதற்காக இரு பக்கம் கைபிடி உள்ள அகன்ற கதிரை உங்களுக்கு பாதுகாப்பை தரும்.

08) கட்டில்கள் பலமானதாகவும் கட்டிலில் இருந்து காலை ஊன்றி எழும்புவதற்கும் வேறு இருக்கைகளுக்கு மாறுவதற்கும் உகந்த உயரத்தை கொண்டதாக இருத்தல்.

09) நடமாட சிரமப்படுபவர்களுக்கு கட்டிலின் அருகில் மலசலம் கழிப்பதற்குரிய உபகரணம் இருப்பது நலம்.

10) கட்டிலில் இருந்து வேலை செய்பவர்களுக்கு வாசிப்பவர்களுக்கு கட்டிலின் அருகில் மின்சார வெளிச்சம் விளக்கு இருத்தல் அவசியம்.

தேவையான மின்சார பொருட்கள் அரைத்தல் "கலத்தல்" பொடி செய்தல், ( grinder & mixer ) அம்மி, உரல், மண்ணெண்ணை அடுப்பு விறகு போன்றவற்றை ஓர் இழுக்கக்கூடிய உபகரணத்தில் வைத்து நீங்கள் இயக்குவதன் மூலம் உங்கள் சிரமத்தை தவிர்க்கலாம்.

தொடரும்....

# சீனா பாதுகாப்பு மண்டல அறிவிப்பு; தென்சீனக் கடல் பகுதியில் பதற்றம்

## ஜப்பானைப் பாதுகாக்க அமெரிக்கா உறுதி



சீனாவின் வான் பாதுகாப்பு மண்டல அறிவிப்பால் தென்சீனக் கடல்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தென் சீனக் கடல் பகுதியில் சர்ச்சைக்குரிய தீவுகளை உள்ளடக்கி, சீனா தன்னிச்சையாக வான் பாதுகாப்பு மண்டலம் அறிவித்ததை தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், ஜப்பானை பாதுகாக்க அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜான் கெர்ரி கூறியுள்ளார்.

தென் சீனக் கடல் பகுதியில் சென்காகு தீவுகள் ஜப்பான் கட்டுப்பாட்டில் இருந்து வரு கின்றன. இத்தீவுகளை டையா வோயு தீவுகள் என்ற பெயரில் அழைக்கும் சீனா, அவற்றை தனக்கு சொந்தம் என்று கூறி வருகிறது. இதனால் இத்தீவுகள் சர்ச்சைக்குரிய பகுதியாக இருந்து வருகிறது.

இந்நிலையில் இத்தீவுப் பகுதியை உள்ளடக்கி புதிய வான் பாதுகாப்பு மண்டலத்தை சீனா தன்னிச்சையாக நேற்று முன்தினம் அறிவித்தது. இப்பகுதிக்குள் நுழையும் விமானங்கள் முன்கூட்டியே சீன வெளியுறவு அமைச்சகம் அல்லது சீன விமானப் போக்குவரத்து துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்காவிடில், அந்த விமானங்கள் தற்காப்பு கருதி சீனா மேற்கொள்ளும் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும் என்றும் சீனா எச்சரித்தது. எனினும் புதிய வான் பாதுகாப்பு மண்டலத்தில் சர்வதேச விமானப் போக்குவரத்துக்கு எந்த தடையும் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

சீனாவின் இந்த அறிவிப்பால் தென் சீனக் கடல் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜான் கெர்ரி ஜெனீவா நகரில் நேற்று முன்தினம் கூறியதாவது, தென் சீனக் கடல் பகுதியில் தற்போது நடைமுறையில் உள்ள நிலையை மாற்றும் முயற்சியாகவே இந்த தன்னிச்சையான நடவடிக்கை அமைந்துள்ளது.

இந்த விஸ்தரிப்பு நடவடிக்கையால் அப்பகுதியில் பதற்றமும் அசம்பாவித சம்பவத்துக்கான வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. எனவே சீனா தனது அறிவிப்பை நடைமுறைப்படுத்த வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம். சீனாவின் தன்னிச்சையான முடிவு குறித்து அமெரிக்கா தீவிரமாக ஆராய்ந்து வருவதுடன், தனது நெருங்கிய நட்பு நாடான ஜப்பானை பாதுகாக்க உறுதிபூண்டுள்ளது. இவ்வாறு ஜான் கெர்ரி கூறினார்.

சீனாவின் இந்த நடவடிக்கை மிகவும் ஆபத்தானது என்று ஜப்பான் கூறியுள்ள நிலையில், ஜான் கெர்ரி மட்டுமன்றி பிரிட்டன் வெளியுறவுத் துறை செயலாளர் சக் ஹேகலும் “சீனா கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளவேண்டும் ஜப்பானால் நிர்வகிக்கப்படும் சென்காகு தீவுகள் ஜப்பான் - அமெரிக்கா பாதுகாப்பு ஒப்பந்தத்தின் கீழ் உள்ளது. அப்பகுதி தாக்கப்பட்டால் அமெரிக்கா தனது நட்பு நாடான ஜப்பானை பாதுகாக்கும்” என்று கூறியுள்ளார்.

## மலாலாவுக்கு மற்றுமொரு சர்வதேச விருது

பாகிஸ்தானில் தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய பாடசாலை சிறுமி மலாலா யூசுப் சாய்க்கு சமத்துவம் மற்றும் பாகுபாடு இன்மைக்கான சர்வதேச விருதை வழங்கவுள்ளதாக மெக்சிக்கோ அறிவித்துள்ளது.

மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு மலாலா யூசுப் சாய் மேற்கொண்டுள்ள முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படவுள்ளதாக மெக்சிக்கோ கூறியுள்ளது,

குறிப்பாக வயது, பாலினம் மற்றும் சமயம் போன்ற பாகுபாடு இன்றி கல்விக்கான உரிமையை பாதுகாப்பதற்கான அவரின் போராட்டத்திற்காக இந்த விருது வழங்கப்படவுள்ளது. 2014ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இந்த விருது வழங்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



2012ஆம் ஆண்டு தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிர் தப்பிய மலாலா யூசுப்சாய் சிறுவர்களின் உரிமைக்காக உலகளாவிய தூதுவராக நோக்கப்படுகின்றார்.

கடந்த வாரம் ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகளுக்கான மிக உயரிய விருதை மலாலா யூசுப்சாய் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அமெரிக்காவில் குளிர்ப்புயல் 13பேர் உயிரிழப்பு



அமெரிக்காவின் தென்மேற்குப் பிராந்திய மாநிலங்களில் வீசிய குளிர்கால புயலில் சிக்கி 13 பேர் உயிரிழந்துள்ளதுடன், மக்களின் விடுமுறை கால பயணங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த புயல் கிழக்கு பிராந்தியங்களில் எதிர்வரும் சில நாட்களுக்கு தொடர்ந்தும் வீசலாம் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

விடுமுறைக்கு முன்னதாக வீதிகள் மற்றும் விமான சேவைகளைப் பயன்படுத்தும் மில்லியன் கணக்கான மக்களின் பயணங்கள் தடைப்படலாம் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தென்பிராந்தியத்தில் பெய்யும் கடும் மழை போக்குவரத்திற்கு இடையூறு படுத்தலாம் என அமெரிக்கத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

வீதிகளில் படர்ந்துள்ள பனி மற்றும் வெள்ளம் காரணமாக ஒக்லஹோமா, டெக்சாஸ், கலிபோர்னியா, நியூ மெக்சிக்கோ மற்றும் அரிசோனா மாநிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

உலகச் செய்திகள்

## சிறந்த நபருக்கான இறுதிப்பட்டியலில் மோடி



2013ஆம் ஆண்டிற்கான ‘டைம்ஸ்’ இதழின் சிறந்த நபருக்கான இறுதிப்பட்டியலில் பாஜக பிரதம வேட்பாளரும் குஜராத் முதல்வருமான நரேந்திர மோடியின் பெயர் இடம் பெற்றுள்ளது. பட்டியலில் இடம் பிடித்துள்ள ஒரேயொரு இந்தியர் மோடி தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டிற்கான ‘டைம்ஸ்’ இதழின் சிறந்த நபரை தேர்வு செய்ய டைம்ஸ் இதழ் ஒன்லைனில் நடாத்திய வாக்கெடுப்பில், இதுவரை மோடிக்கு 25வீத வாக்குகள் பதிவாகியுள்ளன 25வீத வாக்குகளுடன் மோடி முதலிடத்தில் உள்ளார். டைம்ஸ் இதழ் சர்வதேசத் தலைவர்கள், தொழில் அதிபர்கள், பிரபலமானவர்கள் என 42 பேரை இறுதியாகப் பட்டியலிட்டுள்ளது. இந்த 42 பேரில், 2013ஆம் ஆண்டிற்கான சிறந்த நபர் யார் என்பதை அடுத்த மாதம் அறிவிக்க இருக்கிறது.

இந்தப் பட்டியலில், ஜப்பான் பிரதமர் சின்ஷோ அபே, அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, பாகிஸ்தான் சிறுமி மலாலா அமேசான் சி.இ.ஓ.ஜெ.ஃப் பெசோஸ மற்றும் அமெரிக்க இராணுவ இரகசியங்களை வெளியிட்ட எட்வர்ட் ஸ்நோடன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

கடந்த 2012ஆம் ஆண்டிற்கான சிறந்த நபராக டைம்ஸ் பத்திரிகை அமெரிக்க அதிபர் பாராக் ஒபாமாவை தேர்வு செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மோடி குறித்து ஒன்லைனில் வாக்களிக்கும் இடத்தில் சர்ச்சைக்குரிய இந்து தேசியவாதி, குஜராத் மாநிலத்தின் முதல்வர், உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டை ஆளும் காங்கிரஸ் கட்சியை பதவியிழக்கச் செய்யும் வேட்பாளராக கருதப்படுபவர் என டைம்ஸ் இதழ் அறிமுகப்படுத்தியுள்ளது.

## சாலைகளோ, விமான நிலையங்களோ ஏழைகளின் பசியைப் போக்காது

**ராகுல் காந்தி**



வலுவான வறுமைச் சுவரை உடைத்தெறிவோம் என்று காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். ராஜஸ்தான் மாநிலம், புஷ்கரில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் வளர்ச்சிக்கு சாலை வசதி, ரயில் பாதை இணைப்பு, விமான நிலையங்கள் தேவைதான். அதேநேரம் ஏழை எளிய மக்களுக்கும் உதவிக் கரம் நீட்டி அவர்களை வாழ்க்கையில் முன்னேற்ற வேண்டியது நம் முடைய கடமை.

வறுமைச் சுவரை உடைத் தெறிய ஏழை, எளிய மக்களுக்கு காங்கிரஸ் கைகொடுத்து உதவுகிறது. ஆனால் பாஜகவின் கொள்கை வேறு. அந்தக் கட்சி ஏழைகளின் தலையை அந்தச் சுவரில் மோதி உடைக்க விரும்புகிறது. இதுதான் காங்கிரஸுக்கும் பாஜகவுக்கும் உள்ள வித்தியாசம்.

ஏழைகள் பசியோடு படுத்துறங்குகிறார்கள். சாலைகளோ, விமான நிலையங்களோ அவர்களின் பசியைப் போக்காது. அதனால்தான் உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மத்திய அரசு அமுல் படுத்தியது.

அதன்படி வறுமைக் கோட்டுக்கு மேல், கீழ் வாழும் அனைத்து குடும்பங்களுக்கும் மாதம் 35 கிலோ உணவு தானியம் வழங்கப் படுகிறது. கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை ஏற்படுத்த தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை மத்திய அரசு செயல் படுத்தி வருகிறது.

இதன்மூலம் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார்.

## தாய்லாந்தில் போராட்டம் தீவிரம் அவசரநிலை பிரகடனம் அமுல்



தாய்லாந்தில் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா பதவி விலகக்கோரி தொடர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ள போராட்டக்காரர்கள், நிதியமைச்சகம் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சக அலுவலகங்களை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இதனையடுத்து தலைநகர் பாங்கொக்கில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. பாங்கொக்கில் நேற்றுமுன்தினம் திரண்ட நூற்றுக் கணக்கான போராட்டக்காரர்கள், அங்குள்ள நிதியமைச்சக அலுவலகம், வெளியுறவுத்துறை அமைச்சக அலுவலகத்திற்குள் நுழைந்து, அங்கிருந்த ஊழியர்களை விரட்டியடித்தனர். அனைத்து அமைச்சக அலுவலகங்களை கைப்பற்றப் போவதாகவும் போராட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர். நிலைமை மிகவும் மோசமடைந்ததை அடுத்து, பாங்கொக்கில் அவசரநிலையை பிரகடனம் செய்து அந்நாட்டுப் பிரதமர் யிங்லக் உத்தரவிட்டுள்ளார்.

## பசுக்கள் இறப்பது அரசுக்கு நல்லதல்ல



கோமாரி நோயால் பசுக்கள் இறப்பது அரசுக்கு, ஆட்சியாளர்களுக்கு நல்லதல்ல என்று இந்து முன்னணி அமைப்பாளர் ராமகோபாலன் தெரிவித்தார். நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழியில் உள்ள கதிர்காம சுவாமிகளின் அதிஷ்டானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற குருபூஜை விழாவில் கலந்துகொண்ட அவர் செய்தியாளர்களிடம் மேலும் கூறுகையில்,

கோமாரி நோயினால் இந்தப் பகுதியில் பதினைந்தாயிரம் மாடுகளுக்கு மேல் இறந்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆராய்ச்சி நிறுவனம், கால்நடைப்பல்கலைக்கழகம், கால்நடைப் பராமரிப்புத் துறை என்று இத்தனை இருந்தும் அவற்றால் கால்நடைகளின் இறப்பைத் தடுக்க முடியவில்லை என்பது துரதிஷ்ட வசமானது.

இப்படி பசுக்கள் இறப்பது ஆட்சிக்கு, அரசுக்கு நல்லதல்ல என்பதையும் மனதில் கொண்டு கால்நடைகளின் இறப்பைத் தடுக்க வேண்டும். அத்தோடு நடுநிலையாளர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு அந்த குழு பரிந்துரைக்கும் உரிய இழப்பீட்டை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கொடுக்க வேண்டும். அத்தோடு நோய் பாதிப்பில்லாத இடங்களில் இருந்து மாடுகள் வாங்கி வந்து அவர்களிடம் கொடுக்க வேண்டும்.

கோயில் நகைகள் திருட்டு போவதையும், கோயில் இடங்கள் ஆக்கிரமிப்பில் இருப்பதையும் தடுத்து நிறுத்தி எல்லாவற்றையும் மீட்க வேண்டும். சமுதாய நலன் என்ற பெயரில் அரசே கையகப்படுத்தி வைத்திருக்கும் கோயில் நிலங்களை கோயில்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்றார்.



# அரசியல் உரிமைகளை வென்றெடுக்க தெரிவுக்குழு பணியாற்ற முடியும்

## செயற்பாட்டை துரிதமாக்க கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகள் முழுமையாக கிடைப்பதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை துரிதப்படுத்த உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்றஉறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற வரவு- செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது.

கௌரவ சபாநாயகர் அவர்களே:

எமது பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்கள் பெரும்பாலாக கமத்தொழிலையும் கடற்றொழிலையும் முக்கிய வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். கடந்த 30 வருட காலத்திற்கு மேலாக நிலவிய அழிவுயுத்தம் காரணமாக எமது பகுதிகளில் பாரிய அழிவுகள் ஏற்பட்டதுடன், எமது மக்கள் அனைத்துதுறைகள் சார்ந்தும் பல தசாப்தங்களுக்கு பின்நோக்கிச் சென்ற நிலையிலேயே வாழ்ந்து இருந்தவர்கள். அந்த வகையில் கமத்தொழில் உட்பட கடற்றொழில் மாத்திரமன்றி ஏனைய அனைத்துத்துறைகளும் மிகுந்த பின்னடைவையே கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேன்மைதங்கிய ஜனாதிபதியின் கடு[illegible]யான முயற்சிகள் காரணமாக எமது பகுதிகளில் சுமுகநிலை உருவாக ஆரம்பித்ததிலிருந்து எமது பகுதி மக்கள் தற்போது தலைநிமிர்ந்து வாழக்கூடிய வகையில் தங்களது வாழ்வாதாரங்களை முன்னெடுப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

அந்த வகையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது போல் கமத்தொழில்சார்ந்த எமது பகுதி மக்களுக்கும் உரிய நிவாரணங்கள் கிட்டும் என எதிர்ப்பார்க்கின்றேன்.

அதேபோன்று குருநகர் இறங்குதுறையை விரைவில் பூர்த்தி செய்வதாகக் கூறப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும். அத்துடன், எமது கடற்றொழிலாளர்களுக்கு இன்னும் பல்வேறு தேவைகள் உள்ளன. குறிப்பாக படகுகள் மற்றும் ஏனைய உபகரணங்கள் அவர்களுக்குத் தேவையாகவுள்ளன.

எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி [illegible]ழைகின்ற இந்திய இழுவைப் படகுகள் [illegible]து கடல்வளத்தை அழிப்பது மாத்திரமன்றி எமது கடற்றொழிலாளர்களின் வலைகளையும் சேதப்படுத்துகின்றன.

இவ்வாறான நிலைமைகள் கருத்தில் கொள்ளப்பட்டு, இவற்றை தடுத்து நிறுத்துவதற்கும், எமது கடற்தொழிலாளர்களின் தொழில் சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

கடந்த கால அழிவு யுத்தம் எமது பகுதிகளில் பெருந்தொகையான வலது குறைந்தோரை உருவாக்கித் தந்துள்ளது. எனவே, வலது குறைந்தோரை தலைமையாகக் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிதி உதவித்திட்டத்தில் அதிகளவு பயனாளிகளை எமது பகுதிகளில் இருந்து தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என இந்த உயரிய சபையில் கேட்டுக் கொள்கின்றேன்.

அத்துடன் வலது குறைந்தவர்களுக்கான தொழிற்பயிற்சி நிலையங்களையும் அமைத்து, அதனூடாகவும் அவர்களது வாழ்வாதாரத்திற்கு உதவுவதற்கான வழிவகைகளை விரிவுபடுத்த வேண்டும்.

கடந்த கால யுத்தநிலை காரணமாக 1985, 1990,1996 ஆகிய வருடங்களில் யாழ். மாவட்டத்திற்குள்ளேயே இடம் பெயர்ந்து, நலன்புரி நிலையங்களிலும், உறவினர்கள் மற்றும் நண்பர்களது இல்லங்களிலும் இன்னமும் பலர் வாழ்ந்து வருகின்றனர்.

இம் மக்களது அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு அரசு ஒரு தொகை நிதியை கடந்த வருடம் ஒதுக்கி இருந்ததை இங்கு நான் நினைவு கூருவதுடன், மீண்டும் இம்மக்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படும் வரையில் அவர்களது நலன் சார்ந்த திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அவசியமானது.

அதுமட்டுமல்லாது அதுவரையில் இம் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கவும் அல்லது மாற்று வாழ்வாதார வழிகளை உண்டு பண்ணவும் வேண்டியிருப்பதன் அவசியத்தையும் இந்த உயரிய சபையில் முன்வைக்கின்றேன்.

யுத்தம் முடிவடைந்து எமது பகுதிகளில் படிப்படியாக சுமுகநிலைஏற்பட்டு வருகிறது. சட்டமும் ஒழுங்கும் ஒழுங்குற நிலைநாட்டப்பட வேண்டுமென்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். அந்த வகையில் சகல துறை சார்ந்தும் நாம் இதனை உறுதிபடுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதையும் நான் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

எமது பகுதிகளில் இயல்புநிலை தோன்ற ஆரம்பித்ததன் பின்னர் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வருவது யாவரும் அறிந்த விடயமாகும். தென்பகுதியை விட அபிவிருத்தி பணிகள் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தென்பகுதி மக்கள் கூறுகின்றனர். இவ்வாறான அபிவிருத்திகளால் மாத்திரம் எமது மக்கள் திருப்தி காண்பவர்களாக இல்லை என்பதை நான் உயரிய சபையில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

சுமுகமான சூழல் சுற்றிலும் அபிவிருத்திகள் தொடர்ந்து வரும் நிலையில், தங்களது அரசியல் ரீதியிலான உரிமைகளையும் பெற்று, இந்த நாட்டில் தனித்துவத்துடன் வாழ்வதையே எம் மக்கள் விரும்புகின்றனர்.

கடந்த கால கசப்பான அனுபவங்களிலிருந்து எமது மக்கள் இன்னமும் மீண்டு வரவில்லை. அதற்கு இன்னும் காலம் எடுக்கும் என்பதை நாம் அனுபவப்பூர்வமாக உணர்ந்து வருகிறோம்.

எனவே எமது நாட்டில் அனைத்து தரப்பினராலும், ஏற்றுக் கொள்ளப்பட்ட எமது மக்களுக்கு ஏதுவான அரசியல் உரிமைகள் எமது மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலத்திலேயே கிடைக்க வேண்டுமென்பதையே இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அந்தவகையில் அமைக்கப்பட்ட நாடாளுமன்றத்தெரிவுக்குழுவின் செயற்பாடுகளை துரிதப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை இங்கு வலியுறுத்துகின்றேன்.

பாரிய பின்னடைவுகளில் இருந்து மீண்டுள்ள எமது மக்கள் சுயமாகவும் சுதந்திரமாகவும் தனித்துமாகவும் வாழக்கூடிய சூழல் வளர்த்தெடுக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை இந்த உயரிய சபையில் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

### பிரபாகரன்...

குற்றம் சாட்டி இலங்கை மீது பாய காத்திருக்கும் சர்வதேச சக்திகளுக்கு தீனிபோடவே சிறிதரன் இந்த அறிக்கையை தயாரித்தாரென அமைச்சர் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரின் அறிக்கையை அடுத்து எதிர்த்தவர் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆவர்.

இந்நிலையில் இந்த உரையை ஹன்சாட்டிலிருந்து அழித்துவிடும்படி குழுக்களின் பிரதி தலைவர் முருகேசு சந்திரகுமார் பணித்தார்.

### நாடு...

எவ்வித அசௌகரியமும் இன்றி கண்ணியமாக குடிவரவு திணைக்கள அதிகாரிகள் நடாத்தினார்கள் எனவும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் ஜெயபாலன் தெரிவித்துள்ளார். நோர்வேயில் உள்ள இவரது பாரியாரிடம் இந்தச் சந்திப்பு குறித்தும் அவரது நோர்வே வரவு குறித்தும் தொலைபேசியில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து இரவு 9.20 மணிக்கு புறப்பட்ட (TK731 Turkis) இலக்க விமானம் மூலம் துருக்கி வழியாக பயணமாகி இன்று முற்பகல் நோர்வே சென்றடைவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### நெடுந்தீவு...

ரஜீவுக்கு தோழர்களின் இதய அஞ்சலிகள். தோழர் ரஜீவின் இறுதிக் கிரியைகள் தொடர்பான அறிவித்தலை குடும்பத்தாருடன் கலந்துரையாடி விரைவில் கட்சி ஆதரவாளர்களுக்கும், கட்சியின் அபிமானிகளுக்கும் தெரியப்படுத்துவோம். என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி நேற்று அறிவித்துள்ளது.

### தவிசாளர்...

இச்சம்பவம் குறித்து தான் தகவல் அறிந்து பின்னர் அங்கு சென்று தீபத்தை அணைத்ததாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

எனினும் தவிசாளர் தலைமையிலேயே இந்தக் கூட்டம் நடைபெற்றதாக கூறப்படுகிறது. (18,116)

### வீதி விபத்தில்...

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடையில் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ள விபத்தில் பெண்கள் ஐவர் உட்பட அறுவர் படுகாயமடைந்துள்ளனர்.

திக்கோடைக்குச் செல்லும் கைகாட்டியர் சந்தியில் முச்சக்கரவண்டியும் கன்ரர் ரக வாகனமும் நேருக்குநேர் மோதியே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் காயமடைந்த 6 பேரும் உடனடியாக களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஏனைய 4 பேரும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இவ்விபத்துக்கள் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### வடக்கு...

மாகாண சபைகள் சட்டம் மற்றும் ஏனைய இது தொடர்பான சட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாகவே செயற்படுத்தியிருந்தோம்.

இத் திட்டத்தில் ஆளணி பற்றியும் முதலமைச்சர்கள் மற்றும ஏனைய மாகாண அமைச்சர்களிற்கும் எவ்வாறு ஆளணியினை பகிர்ந்தளிப்பது தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் ஜனாதிபதி செயலக சுற்றுநிருபங்களிற்கு அமையவே நடவடிக்கைகள் மேற்கொள்வது என தீர்மானித்தோம்.

மாகாண சபையினை மிகவும் பொருத்தமான இடத்தில் ஸ்தாபித்தல், மற்றும் கட்டட வசதிகளை ஏற்படுத்தல் தொடர்பில் ஒரு வருடத்திற்கு முன்பே நிதி ஏற்பாடு உட்பட அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாகாண சபை தெரிவு செய்யப்பட்ட பின்பு, ஜனாதிபதி செயலகம், சட்டமா அதிபர் திணைக்களம் , 13 ஆவது திருத்தச்சட்டம் மற்றும் மாகாண சபைகள் சட்ட ஏற்பாடுகளிற்கு அமைவாக மாகாணசபையினை சரியான முறையில் ஸ்தாபிப்பதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்பு முதலமைச்சர், மற்றும் மாகாண அமைச்சர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள், அடுத்து கன்னி அமர்வு என்னால் கூட்டப்பட்டு சபைத் தலைவர் துணைத்தலைவர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அதன் பின்னர் இரண்டாவது சம்பிரதாய அமர்வு சிறப்பாக கூட்டப்பட்டு அதில் விளக்க உரை என்னால் ஆற்றப்பட்டது.

அடுத்து ஆளணி விடயத்தினை எடுத்துக் கொள்வோமாயின் நாம் ஒவ்வொருவரும் தேவைப்படும் அளவிற்கு ஆளணியினை எடுத்துக் கொள்ளமுடியாது. இது தொடர்பில் காலத்திற்குக் காலம் முகாமைத்துவ சேவைகள் திணைகளத்தினால் வழங்கப்படுகின்ற அனுமதிக்கேற்பவே ஆளணி விடயம் கையாளப்படுகின்றது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது காலத்திற்குக்காலம் பிரதம செயலாளர் மற்றும் செயலாளர்களுடன் கலந்துரையாடி மாகாண சபைகளிற்கான, ஆளணியை உருவாக்கி கொள்கின்றது. இந்த முறை 2012 ஆம் ஆண்டு மார்கழி மாதம் எமது மாகாணத்திற்கு வருகை தந்து விரிவான கலந்துரையாடல்களை நடாத்தியிருந்தது. எமது கோரிக்கைக்கு ஏற்ப அவர்கள் கணிசமான மேலதிக ஆளணியினருக்கான அனுமதியை வழங்கியுள்ளார்கள்.

மாகாண சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்களிற்கு மேலதிக ஆளணி தேவைப்பட்ட பொழுது ஏற்கனவே உள்ள ஆளணியில் இருந்து வழங்கமுடியாத நிலமை ஏற்பட்டது. எனவே இவ் மேலதிக ஆளணிக்காக ஒரு கூட்டத்தினை நடாத்த திட்மிட்டோம். இதற்காக முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்களிற்கு கலந்தரையாட அழைப்பு விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும் இவ் அழைப்பு தொடர்பில் பதில் ஏதும் கிடைக்கவில்லை எனினும் முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்கள் தமது ஆளணி கோரிக்கை தொடர்பில் அவர்களது செயலாளர்களிடம் விபரங்களினை தெரிவித்திருந்தனர். அவ் அடிப்படையிலேயே இக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டது. அக்கூட்டத்தில், முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்களிடம் சிபாரிசு பெற்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுமதிக்காக அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

தற்போது வரவு-செலவுத் திட்ட விவாதங்கள் நடைபெறுவதனால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாமல் இருந்தது.

மாகாண நிர்வாகம் முழுமையாக மாகாண ஆளுநருக்கே உட்பட்டதாகும். மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு மாகாண ஆளுநரினாலேயே நியமனம் செய்யப்படுகின்றது. ஆளுநர் தனுக்குரிய அதிகாரங்கள் சிலவற்றை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு வழங்கியுள்ளார். அதன் பிரகாரம் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு தலைவர், உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் நிர்வாக கடமைகளை ஆற்றுகின்றார்கள். எனினும் மாகாண ஆளுநரே சகல விடயங்களினதும் முழுமையான பொறுப்பாளியாவர். இதன் மூலம் ஆளுநர் தன்னிச்சையாக செயற்படுகின்றார் என்று யாரும் சொல்லிவிடமுடியாது. மாகாண ஆளுநர் மாகாண அரசியலமைப்பில் கூறப்பட்ட தத்துவங்களின் அடிப்படையிலேயே செயற்படுகின்றார் அதுபோலவே முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்களும் அவர்களிற்கு உட்பட்ட தத்துவங்களின் அடிப்படையிலேயெ செயற்படவேண்டும். முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தி அவர்களினுடைய நல்லுறவுடனேயே மாகாண நிர்வாகம் செயற்படுகின்றது இதனூடாகவே சிறந்த நிர்வாகத்தினை ஏற்படுத்த முடியும்.

அடுத்ததாக மாகாண நிதி நடைமுறைகளை எடுத்துக் கொள்கின்ற போது மாகாண அமைச்சர்களினது சிபாரிசு பெறப்பட்டு எனது உடன்பாட்டுடன் மாகாண சபைக்கு சமர்ப்பித்து அவர்கள் அதனை மாகாண நிதிச் சட்டமூலமாக மாற்றி அதற்கு சபையின் சிபாரிசினை பெற்று பின்னர் என்னால் அனுமதிக்கப்பட்டு முதலமைச்சரினால் மாகாண நிதி கையாளப்படுகின்றது. இவ் நடைமுறைகளிற்கு புறம்பாக எந்த ஒரு நிதியும் பயன்படுத்தப்பட முடியாது. மாகாண நிதி மூலமானது மத்திய அரசிடமிருந்தும் ஏனைய நிதி மூலங்கள் ஊடாகவும் திரட்டப்படுகின்றது. நிதி நடைமுறை தொடர்பில் அரசியலமைப்பில் கூறப்பட்ட விடயங்களிற்கு கட்டுப்பட்டே மாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்களும் செய்பட வேண்டியுள்ளது.

மாகாண சபையின் சீரான செயற்பாட்டினைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதியின் வழிகாட்டலின் பிரகாரம் முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்களுடன் சுமுகமான உறவினைப் பேணுவதையே எனது கொள்கையாக கொண்டுள்ளேன்.

அடுத்ததாக அமைச்சுகளிற்கான செயலாளர் நியமனமானது ஆளுநருக்குரிய விடயமாகும். எனினும் முதலமைச்சருடன் கலந்துரையாடி அவரின் உடன்பாட்டுடனேயே இவ் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்கான முதலமைச்சரின் உடன்பாடும் கிடைக்கப்பெற்றிருந்தது. அத்துடன் முதலமைச்சர் மற்றும் மாகாண அமைச்சர்களுடன் சுமுகமான உறவினை பேணுவதன் மூலமே இவ் மாகாண சபையினை கொண்டு நடாத்த முடியும்.

இருந்தபோதும் பத்திரிகையில் செய்தி வெளியிட்டவர்கள் இந்த விடயங்களில் எவற்றையுமே தெரிந்து கொள்ளாதவர்களாக செய்திகளை பிரசுரித்து இருப்பது எனக்கு மிகவும் மன வேதனையை அளிக்கின்றது, இவ்வாறான செய்திகளை வெளியிடுவதற்கு முன்பு எனது செயலாளருடன் தொடர்பு கொண்டிருந்தால் உண்மையான விபரங்களின்ன பெற்றிருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## தேசிய அருங்கலைகள் பேரவைக்கு அமைச்சர் டக்ளஸ் விஜயம்



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள தேசிய அருங்கலைகள் பேரவை வளாகத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று விஜயம் செய்தார்.

மேற்படி நிறுவனத்தின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடும் பொருட்டு அங்கு சென்ற அமைச்சர், நிறுவனத்தின் தலைவர் புத்தி கீர்த்திசேன உட்பட ஏனைய அதிகாரிகளுடனும், ஊழியர்களுடனும் கலந்துரையாடினார்.

இவ்வளவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் கைப்பணியாளர்கள் தங்குவதற்கான விடுதியையும், கைப்பணித் தொழிலாளர்களுக்கான விற்பனைக் கூடங்களை நிர்மாணிக்க கூடிய பகுதிகளையும் இதன் போது அமைச்சர் பார்வையிட்டது குறிப்பிடத்தக்கது.

# கரைச்சிப்பொதுச் சந்தைக்கு மின்சாரம் துண்டிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தைக்கான மின்சார விநியோகம் நேற்று முதல் மின்சார சபையினால் துண்டிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கிளிநொச்சி நகருக்கான வீதி விளக்குகளுக்கான மின்சார விநியோகமும் துண்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மூன்று இலட்சத்திற்கும் மேல் மின்சார கட்டணமாக இலங்கை மின்சார சபைக்கு கரைச்சி பிரதேச சபை செலுத்தத் தவறியமையினால், மின்சார விநியோகம துண்டிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் கிளிநொச்சி மின் அத்தியட்சகர் குகராஜ் தெரிவித்துள்ளார்.

அரசினால் பல மில்லியன் ரூபா செலவில் நவீன முறையில் அமைத்துக் கொடுக்கப்பட்ட கிளிநொச்சி பொதுச் சந்தையில், 320 இற்கும் மேற்பட்ட வியாபார நிலையங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வியாபார நிலையத்திற்கும் மாதாந்தம் 1250 ரூபாவினை கரைச்சி பிரதேசசபை அறவிட்டு வருகிறது.

அந்த வகையில் மாதம் ஒன்றுக்கு கிளிநொச்சி பொதுச் சந்தையின் மூலம் நான்கு இலட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் கிடைக்கிறது. இருந்த போதிலும் கரைச்சிப் பிரதேச சபையின் திறனற்ற நிர்வாகச் செயற்பாடுகள் காரணமாக சந்தை வியாபரிகளுக்கு சீரான சேவையினை வழங்குவதில்லை. எப்பொழுதும் கிளிநொச்சி பொதுச் சந்தை நாற்றம் வீசும் இடமாகவே காணப்பட்டு வந்துள்ளது.

அரசு புதிதாக அமைத்துக் கையளித்த போது ஒரு பூங்கா போன்றே கையளித்ததாகவும், ஆனால் கரைச்சிப் பிரதேச சபையினர் சந்தையினை கழிவுகள் கொட்டும் இடமாக வைத்திருப்பதாகவும் வெற்றிலைக் கடை வியாபாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாதாந்தக் கட்டணம் செலுத்த ஒரு நாள் தவறினாலும் அதற்கு தண்டப் பணமும் சேர்த்து அறவிடுகின்ற பிரதேச சபையினர் அதற்கேற்ற வகையில் வர்த்தகர்களுக்கு சேவை வழங்குவது இல்லை. இந்த நிலையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதனால் மலசல கூடம் மற்றும் மீன், இறைச்சிக் கடைகளுக்கான நீரும் இல்லாமல் போய்விட்டது. ஏற்கனவே நாற்றம் எடுக்கும் இடமாக காணப்பட்ட சந்தை வளாகம், இனி துர்நாற்றம் எடுக்கும் இடமாக மாறப் போகிறது என கவலை தெரிவித்த அவர் அவசரத்திற்கு மலசல கூடத்திற்குச் செல்ல முடியாத அவலம் ஏற்பட்டுள்ளதாகக் கூறினார்.

அதிக நிதி வருமானம் கொண்ட பிரதேச சபையாக கரைச்சிப் பிரதேச சபை உள்ள போதிலும் அதனால் மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க முடியாத திறனற்ற சபையாக செயற்படுகிறது இதற்கு திறமையற்ற தலைமைத்துவமும் காரணம் எனவும் பலராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (29)

## தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு மன்னாரில் பலத்த பாதுகாப்பு

(மன்னார்)

மன்னார் பகுதியில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை முதல் இராணுவத்தினர் கடும் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் தினம் இன்று அனுஸ்ரிக்கப்படவுள்ள நிலையில் மன்னார் பனங்கட்டுக்கோட்டு பகுதியில் உள்ள எமிழ் நகர் கிராமத்தில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை இனம் தெரியாதவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசிய கொடியான புலிக் கொடியினை ஏற்றியுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த புலிக்கொடி படைத்தரப்பினரினால் உடனடியாக அகற்றப்பட்டது.

இந்த நிலையில் மாவீரர் தினத்தையொட்டி மன்னார் பகுதியில் உள்ள அனைத்து தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கும் ஆயுதம் ஏந்திய இராணுவத்தினர் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

புலிக்கொடியினை ஏற்றி விடக்கூடாது என்ற நோக்கில் குறித்த பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளது. மன்னார் நகரில் உப்புக்குளம், மூர்வீதி, பனங்கட்டுக்கோட்டு, பட்டித் தோட்டம், எருக்கலம் பிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கே இவ்வாறு பாதுகாப்புக்கள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இருவர் கைது

(வடமராட்சி)

நெல்லியடி பொலிஸ் நிலையப்பகுதியில் வைத்து இரண்டு இளைஞர்கள் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெல்லியடி இராச கிராமத்தைச் சேர்ந்த நந்தகுமார் நவநீதன் (வயது - 22) கிட்டினன் சிறிதரன் (வயது - 29) ஆகிய இருவருமே வேலைக்குச் சென்று கொண்டிருந்த வேளை நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (116)

## பொலிஸ் உத்தியோகத்தர் வீதி விபத்தில் மரணம்

(புத்தளம்)

புத்தளம் - மன்னார் பிரதான வீதியில் 4 ஆம் கட்டை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வனாத்தவில்லு பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் கான்ஸ்டபிள் ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இரு பொலிஸார் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்கு உள்ளானதாக தெரிவிக்கப்படுகின்ற போதும் விபத்து எவ்வாறு இடம்பெற்றதென தெரிய வரவில்லை.

விபத்தில் காயமடைந்த மற்றுமொரு பொலிஸ் கான்ஸ்டபிள் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

விபத்து குறித்து புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நிர்வாக அதிகாரிகளின் விசேட செயலமர்வு

(மட்டக்களப்பு)

இலங்கை நிருவாக சேவையின் பொன் விழா கொண்டாட்டத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் டேபர் மண்டபத்தில் கிழக்கு மாகாண பொது நிருவாக சேவை அதிகாரிகளுக்கான செயலமர்வு நேற்றுக்காலை நடைபெற்றது

நிதி ஆணைக்குழுவின் தவிசாளர் ஆரியரட்ண ஹேவகே பிரதமர் செயலக மேலதிக செயலாளர் கலாநிதி மஹநாம, மேலதிக செயலாளர் (காணி) பொறலஸ், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அபேகுணவர்த்தன மற்றும் மட்டு. மாவட்ட செயலாளர் பி.எஸ்.எம்.சாள்ஸ் உட்பட பலர் இந்நிகழ்வில், கலந்து கொண்டனர். மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் பணிபுரியும் நிர்வாக அதிகாரிகள் இதில் பங்கேற்றனர். இதன்போது கிழக்குப் பல்கலைக்கழக விபுலானந்த அழகியல் கற்றைகள் நிறுவன மாணவிகளின் வரவேற்பு நடனமும் இடம்பெற்றது.

## அதிவேக சாலையில் முறைகேடு நடந்தால் முறையிடலாம்

(கொழும்பு)

தெற்கு அதிவேகப் பாதையில் பயணம் செய்யும் தனியார் வாகனங்கள் தொடர்பான முறைப்பாடுகளை 0112 807279 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்று தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு பயணிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தெற்கு அதிவேக பாதையில் பயணம் செய்யும் சில தனியார் வாகன சாரதிகள் மனிதாபிமான மற்ற முறையில் நடந்துகொள்கின்றனர் என பொதுமக்கள் விசனம் தெரிவித்ததையடுத்து, தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் சி.பி.ரத்நாயக்கவின் ஆலோசனையில் பேரில் இந்த நடவடிக்கையை எடுக்கப்பட்டதென அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான தெரிவித்தார்.

சில வாகனங்களில் குளிரூட்டலில் கோளாறு ஏற்படுதல்- நுளம்புக்கடி- வண்டிக்குள் அசுத்தமாக இருத்தல் போன்ற பிரச்சினைகள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிழமை நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 04.30 வரையில் மேற்குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, பயணிகள் முறைப்பாடுகளை தெரிவிக்கலாம்.

## ரஷ்ய பிரஜை மரணம்

(கொழும்பு)

ஹிக்கடுவை கடற்பரப்பில் குளித்தவேளை நீரில் மூழ்கி ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவந்த ரஸ்ய பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி காலை கடற்பரப்புக்கு குளிக்கச் சென்ற வேளை இந்நபர் நீரில் மூழ்கியுள்ளார்.

இந்நிலையில் கடலில் இருந்தவர்கள் அந்நபரை காப்பாற்றி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சிகிச்சை பெற்று வந்தநிலையில் ரஷ்ய பிரஜை நேற்று முன்தினம் பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

ஒலேல் லொமானின் என்ற 41 வயது ரஷ்ய பிரஜையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவரது சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சடலம் மீதான பிரேத பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன.

## மாகாணங்களுக்கு அதிகாரங்கள் வேண்டும்; மத்திய மாகாண சபையில் அசாத்சாலி பேச்சு

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவே மாகாண சபை முறை கொண்டுவரப்பட்டது. அதே போன்றே 13 ஆவது அரசமைப்புத் திருத்தமும் செய்யப்பட்டது.

இதற்கிணங்க 13 ஆவது அரசமைப்பின்படி மாகாணங்களுக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும்.

இவ்வாறு மத்திய மாகாண சபை உறுப்பினர் அஸாத் சாலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கண்டி, பள்ளேகலையில் நடைபெற்ற மத்திய மாகாண சபையின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

நான் தமிழ் மக்களைப் பற்றியும் முஸ்லிம் மக்களைப் பற்றியும் பேசுகின்றேன். அதனால் நான் இனவாதி ஆகிவிடுவேனா? மத்திய மாகாண மக்களின் நிதியில் நடத்திய கூட்டங்களுக்கான செலவு 60 கோடி ரூபா. ஆனால் அபிவிருத்தி திட்டங்கள் ஏதாவது என்றாவது நடைபெற்றதா?

மத்திய மாகாண சபை மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகளை திருப்திகரமாகவும் முறையாகவும் செய்வதாகத் தெரிய வரவில்லை.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மக்கள் நலனுக்காகவும் அபிவிருத்திக்காகவும் சமர்ப்பிக்கின்ற பிரேரணைகள் தொடர்பான எந்த வித தகவல்களும் அது நிறைவேற்றப்பட்ட பின் வெளியிடப்படுவதில்லை.

பிரேரணைகள் தொடர்பாக எந்தவித மீள் பரிசீலனைகளும் செய்யப்படுவதில்லை. உரிய அதிகாரிகளும் இவை தொடர்பாக சபைக்கு அறிவிப்பதில்லை என்றார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.